# புதிய சமுதாயம்

KDN 0131/78

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

24



PUTHIYA SAMUDHAYAM

50காசு

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

# புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2009 மாசி 26
கம்பம் 1 ∴ (10-3-1978) ∴ குடும்பம் 24

## விவேகம்



சி. காவேரிச்செல்வன்

அலைந்திடும் மனத்திடை அன்பினை வகுத்துநல்
ஆலயம் செய்தவர் நாமோ! - உயர்
நிலையினில் உயர்வறம் நேரிய குறள்நெறி
நிலைத்திடச் செய்தவர் நாமோ!

பிழையறச் செய்தொழில் மேலிட ஒழுக்கம்
பெற்றிமை கண்டவர் நாமோ! - மானம்
தழைத்திட உயிர்விடும் தன்மையில் முன்னம்
தலைநிமிர்ந் திருந்தவர் நாமோ!

உயர்தமிழ் செந்நெறி உயர்வினில் இன்பம்
உய்த்தவர் என்பதும் நாமோ! - கடல்
வியந்திடும் அளவில் வியர்வையைக் கொட்டி
விளைத்தவர் என்பதும் நாமோ!

படைகொண் டொருபகை வென்று திறத்தால்
பாரிடை செழித்தவர் நாமோ! - ஒரு
விடையினைத் தந்தொரு வேள்வியில் மாய்ந்திட
வேதனை கொள்வதும் நாமோ!

வித்தினை இட்டு விளைத்தவர் இன்று
வேதனை கொள்வது முறையோ! - ஒரு
பத்தினில் ஒன்றைப் பார்த்திடக் கண்கள்
பாழ்பட்டுப் போனது சரியோ!

எண்ணிடும் இந்த இழிவினைப் போக்க
எழுந்திட வேண்டும் சமூகம் - இரு
கண்ணினைத் திறந்தொரு கடமையி லோங்கிடக்
காட்டிட முனைதல் விவேகம்.

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 925116

## முன்னோடித் தேர்தல்

கிளந்தான் மாநிலத்தில் இம்மாதம் 11-ஆம் தேதி நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல், அடுத்து நாடெங்கும் எல்லா மாநிலங்களுக்கும் நடைபெறவிருக்கும் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு ஒரு வெள்ளோட்டமாக அமையும் என்று நம்பலாம். கிளந்தான் தேர்தலின் முடிவைப் பொறுத்தே அடுத்து நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தலுக்குத் தேதியை அரசாங்கம் நிச்சயிக்கும் என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் பொதுத் தேர்தல் நடைபெறுவது திண்ணம்.

கிளந்தான் தேர்தல் தேசிய முன்னணிக்கும் அகில மலாயா இஸ்லாமியக் கட்சிக்கும் அந்த மாநிலத்தில் எந்த அளவு பலம் இருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்துமென்று நம்பலாம். இதற்கு முன்பு நடந்த 1974 பொதுத் தேர்தலில் இஸ்லாமியக் கட்சி தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சியாக இருந்தது. இப்பொழுது இஸ்லாமியக் கட்சி தேசிய முன்னணியிலிருந்து வெளியேற்றப் பட்டு விட்டதால் இரண்டுக்கும் இடையே நடக்கும் முதல் பலப் பரீட்சையாகக் கிளந்தான் மாநிலத் தேர்தல் அமைந்திருக்கிறது. கிளந்தான் மந்திரி புசார் டத்தோ ஹாஜி முகமது நாசீர் அமைத்திருக்கும் ஒரு புதிய கட்சியான பெர்ஜாசா மூன்றுவது சக்தியாக இந்தத் தேர்தலில் முதன்முதலாகப் போட்டியிடுகிறது. தேசிய முன்னணிக்கும் பெர்ஜாசா கட்சிக்கும் இடையே தேர்தல் உடன்பாடு இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் பல தொகுதிகளில் தேசிய முன்னணியை எதிர்த்து பெர்ஜாசா வேட்பாளர்களும் நிறுத்தப்பட்டிருப்பது வியப்பூட்டுவதாகவே இருக்கிறது. இஸ்லாமியக் கட்சிக்குக் கிடைக்கக் கூடிய வாக்குகளைச் சிதற அடிப்பதற்காக இந்த உபாயம் கையாளப்படுகிறது போலும்!

உண்மையில் பெர்ஜாசா கட்சியைத் தேசிய முன்னணி தன் பங்காளிக் கட்சியாக இணைத்துக் கொண்டு இரண்டு கட்சிகளும் தேசிய முன்னணியின் தராசு சின்னத்தின் கீழ் போட்டியிடுமானால் தேசிய முன்னணிக்கும் பெர்ஜாசாவுக்கும் மேலும் கூடுதல் வெற்றி வாய்ப்பு கிட்டும் என்பதே நமது கருத்தாகும். இப்பொழுது உள்ள அரைகுறை உடன்பாடு, வாக்காளர்களின் மன

உதவுவதாக இல்லை.

தேசிய முன்னணியின் முக்கியக் குறிக்கோள் இளந்தான் மாநிலத்தை அதற்குரிய சரியான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதாகும். இதுவரையில் இளந்தான் மக்கள் நாட்டு வளர்ச்சியில் பூரண பங்கை அடைய முடியாத பரிதாப நிலை இருந்து வருகிறது. இதனை மாற்றியமைத்து மற்ற மாநிலங்களைப் போல் இளந்தானும் வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுவதற்கு, இந்தத் தேர்தல் தேசிய முன்னணி வேட்பாளர்களுக்கு வெற்றியை தேடித்தருமென்று எதிர் பார்க்கிறோம்.

ஆத்திரத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கியிருப்பதில் வியப்பில்லை. இதற்கும் மேலாக இந்தச் சம்பவத்தின் மூலம் எகிப்து மின்னற்படையினர் பெற்றிருக்கும் கசப்பான அனுபவம் உலகத்தில் தலைவிரித்தாடும் பயங்கரவாத சக்திகளுக்கு மேலும் ஆக்கம் ஊட்டக்கூடும் என்றே அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஏற்கனவே விமானக்கடத்தல்களை முறியடிப்பதற்கு மின்னற்படைகளை அனுப்பி மேற்கு ஜெர்மனியும் இஸ்ரேலும் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியிருக்கின்றன. அந்த இரண்டு மின்னற்படைகளும் அடைந்த வெற்றி பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு

சாதனமாகப் பயன்படும் என்ற நம்பிக்கையை உலக நாடுகளுக்கு உண்டாக்கின. இப்பொழுது சைப்ரஸில் எகிப்திய மின்னற்படைக்கு ஏற்பட்ட தோல்வி அந்த நம்பிக்கையை அடியோடு போக்கக் கூடியதாக அமைந்து விட்டது.

பயங்கரவாதத்தை ஒழிக்கக் கருதும் உலக நாடுகள் மின்னற்படை போன்ற அந்நியப் படைகளின் திடீர்ப் பிரவேசத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப் பக்குவத்தைப் பெறுவது மிக அவசியமாகும். அனைத்துலக ரீதியில் இவ்வகையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டால்கூட நல்லது.

## மின்னற்படையின் சாகசங்கள்

சைப்ரஸின் தலைநகரான நிக்கோசியாவில் கடத்தல்காரர்களால் பிணையாளிகளாகச் சிறைவைக்கப்பட்டிருந்த பதினொரு அரேபியர்களை சைப்ரஸ் விமானத்திலிருந்து மீட்பதற்காக அங்குப் பறந்து சென்ற எகிப்து நாட்டு மின்னற்படைவீரர்களில் பதினைந்து பேர் அந்த முயற்சியில் உயிரிழக்க நேரிட்டது பெரிதும் துயரமூட்டும் சம்பவமாகும். இதன் பலனாக எகிப்துக்கும் சைப்ரஸுக்கும் இடையே தூதரக உறவு முறியுமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

அந்தக் கடத்தல்காரர்கள் பதினொரு அரேபியர்களைச் சிறைவைக்கும் முன்பு எகிப்தின் அரசாங்கப் பத்திரிகையான அல்-அஹ்ரம் என்னும் நாளேட்டின் பிரதம ஆசிரியரான யூசோப் எல் சிபாயைச் சுட்டுக் கொன்றுவிட்டனர். இந்தப் பத்திரிகையாளர் எகிப்திய அதிபர் சாடாட்டின் நெருங்கிய நண்பர் என்றும் சொல்லப்படுகிறது. இவருடைய மரணமும், எகிப்திலிருந்து சென்ற மின்னற்படைக்கும் சைப்ரஸ் ராணுவத்திற்கும் இடையே நடைபெற்ற சண்டையில் எகிப்து வீரர்கள் மரணமடைய நேரிட்டதும் எகிப்துக்கு

தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர் எழுதும்
புதிய தொடர்கதை
விரைவில் துவங்குகிறது

அட்டைப்படக் கட்டுரை

# சர்வாதிகாரத்திலிருந்து

**14.1.1976இல் அமரரான துன் அப்துல்ரசாக், 11 2.1922இல் பிறந்தவர். அவர் நினைவாக இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

கடைச்சித்தன்

பிரதமர் துன் அப்துல் ரசாக் இலண்டனில் காலமான செய்தி, மலேசியர்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. மக்களைப் பொறுத்த வரை அது எதிர்பாராத மரணம். ஆனால் அந்த மகத்தான மனிதர், தம் மரணத்தை முன்கூட்டியேஅறிந்திருந்தார். குணப்படுத்தவே இயலாத "லுக்கேமியா" என்னும் குருதிப்புற்று நோய் அவரின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்துக் கொண்டிருந்ததை ஓரிருவர் மட்டுமே அறிந்திருந்தனர். ஆறுண்டுகளுக்கும் குறைவாகவே அவர் உயிர் வாழ முடியும் என்பதை 1970ஆம் ஆண்டில் தெள்ளத் தெளிவாக மருத்துவ நிபுணர்கள் அவரிடம் தெரிவித்து விட்டார்கள்.

மலேசியத் தலைநகரை 13.5.1969 செவ்வாய்க்கிழமையன்று கருமேகம் சூழ்ந்தது. பல்லாண்டுகளாக மக்களும், தலைவர்களும் கட்டிக் காத்து வந்த ஒருமைப்பாடும், அமைதியும், சட்டமும் சீர்குலைந்தன. தலைநகரை மூடிய அந்த மேகம் நாடு முழுதும் பரவாமல் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது இன்றியமையாததாயிற்று.

மே பதினாறும் நாள், ஊரடங்கு சட்டம் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தையும், மாநிலச் சட்டமன்றங்களையும் கால வரையறையின்றிக் கலைக்கும் உத்தரவைப் பேரரசர் பிறப்பித்தார். நாட்டை ஆட்சி புரிய, பேரரசரின் உத்தரவின் பேரில் தேசிய நடவடிக்கை மன்றம் நிறுவப்பட்டது. துன் அப்துல் ரசாக் நடவடிக்கை இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

நடவடிக்கை இயக்குநர் என்ற அந்தப் புதிய பொறுப்பு, அவருக்கு வரையறையில்லாத அதிகாரங்களை வழங்கியது. துங்கு அப்துல் ரகுமானைப் பிரதமராகக் கொண்ட அமைச்சரவைக்கும், துன் டாக்டர் இஸ்மாயிலைத் தலைவராகக் கொண்ட தேசிய நடவடிக்கை மன்றத்திற்கும் கட்டுப்படத் தேவையில்லாத அளவுக்குத் துன் அப்துல் ரசாக் முழுமையான அதிகாரங்களைப் பெற்றிருந்தார். சர்வாதிகாரிக்குரிய அதிகாரங்கள் குவிந்திருந்தும் அவர் ஒரு நிதானமான சர்வாதிகாரியாகவே இயங்கினார்.

மிகப் பெரிய பொறுப்புகளை அவர் எதிர்நோக்கினார். பொது மக்களின் உயிரையும் சொத்துக்களையும் பாதுகாப்பதுடன் நாட்டின் பொருளாதார நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதும் அவர் கடமையாயிற்று. பதற்ற நிலையைப் படிப்படியாக மாற்றி நாட்டில் அமைதியை நிலைநிறுத்த வேண்டியது அவர் பொறுப்பாயிற்று. நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் கலைக்கப்பட்ட நிலையில், தேசிய நிர்வாகத்தையும் மாநில நடவடிக்கைகளையும் அவர் கவனிக்க வேண்டியதாயிற்று. இத்தகைய பல விதமான பொறுப்புகளை துன் அப்துல் ரசாக் முழுமூச்சுடன் செயல்படுத்தத் துவங்கினார்.

முழுமையான சர்வாதிகாரியாக இயங்க வாய்ப்பிருந்தும், மிக விரைவில் நாட்டில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் திரும்பக் கொணர்வதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். ஜனநாயக மீட்சிக்கு முதற்படியாக 1970ஆம் ஆண்டு ஜனவரியில் அவர் தேசிய ஆலோசனை மன்றத்தை அமைத்தார். அதே ஆண்டு ஜூன் திங்களில் சாபா, சரவாக் மாநிலங்களில் தேர்தல் நடத்த உத்தரவிட்டார்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து பிரதமராக இருந்து வந்த துங்கு அப்துல் ரகுமான், பதவி துறக்கும் தம் விருப்பத்தை 1970ஆம் ஆண்டு சுதந்திர தினத்தில் வெளியிட்டார். செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள், பேரரசர், துங்குவின் பதவித் துறப்பை ஏற்றுக்கொண்டார். அதற்கு மறுநாள் துன் அப்துல் ரசாக் தம் அமைச்சரவையை அறிவித்தார்.

1971ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 23ஆம் நாள் பேரரசர் அதிகாரபூர்வமாக நாடாளுமன்றத்தைத் துவக்கி வைத்தார். பிரதமர் என்ற முறையில் முதன் முறையாக அன்று மாலை துன் அப்துல் ரசாக் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். நாடு முழுமையான ஜனநாயகத்திற்குத் திரும்பியது.

சூழ்நிலையால் சர்வாதிகாரியாகியும் அச்சூழ்நிலையை முனைந்து மாற்றி ஜனநாயகவாதியாகிய துன் அப்துல் ரசாக்கைக் காலம் வரலாறுக்கிவிட்டது. கல்வி, கிராமப்புற வளர்ச்சி, தேசியப் பாதுகாப்பு, ஜனநாயக மீட்சி- நாட்டுக்கு அவர் ஆற்றிய பணிகளுள் தலையாயவை இவை. இவற்றுள் தனித்துயர்ந்து நிற்பது எது என்பதை வரலாற்றாசிரியர்களே நிர்ணயிக்கவேண்டும்.

# அவியல்

பினாங்கிலுள்ள விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான டாக்டர் பி. எம். சிவலிங்கம் தோக்கியோ பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றுவதன் வழி அப்பெருமையைப் பெறும் முதல் ஆசியர்களுள் ஒருவராகிறார்.



மீன்வளத் துறையில் முதன்மையாகத் திகழும் தோக்கியோ பல்கலைக் கழகத்தில் பணியாற்றக் கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை மலேசியாவுக்கே கிடைத்த வாய்ப்பாகத் தாம் கருதுவதாக அவர் கூறுகிறார். டாக்டர் சிவலிங்கம், கடந்த மாதம் பேங்காக்கில் நடந்த நீர் அசுத்தம் மீதிலான அனைத்துலக மாநாட்டில் மலேசியாவின் சார்பில் கலந்து கொண்டவருமாவார். இவர், தம் பிஎச். டி. பட்டத்தைத் தோக்கியோ பல்கலைக் கழகத்திலேயே பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரஸ்ஸல்ஸில் உள்ள ஒரு ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ ஆலயத்தின் "சிஸ்டரான" பெண்மணி ஒருத்தி, மூன்று கொலைகளைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். பலியானவர்கள் 75 முதல் 80 வரையிலான வயதுடையவர்களாவர். ஒரு மோர்பின் போதைப் பித்தரான அந்தப் பெண்மணி தற்போது மனநோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜாகர்த்தா நகரில் சூதாட்டங்கள் விரைவில் தடை செய்யப்படும். சூதாட்டங்களினால் மக்களிடம் ஒழுங்கீனம் ஏற்படுகிறது எனும் காரணத்தால்தான் இத்தடை விதிக்கப்படுகிறதென அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த முடிவினால் அரசாங்கத்துக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 18 மில்லியன் மலேசிய வெள்ளி நஷ்டம் ஏற்படும்.

பிரேசில் நாட்டின் ரோசாரியோ டோ சுல் என்ற கிராமத்தில் அண்மையில் 16 வயது இளம்பெண் ஒருத்தியை அவளது தந்தை சிலுவையில் அறைந்தார். தீய ஆவிகளை விரட்டியடிப்பதற்காக 9 அடி 5 அங்குல உயரமும், 44 பவுண்டு எடையும் கொண்ட சிலுவையில் தொடர்ந்து 72 மணி நேரமாக அப்பெண் அறையப்பட்டுக் கிடந்த காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனர். மேலும் அப்பெண்ணின் கரங்களையும், கால்களையும் பிளேடால் அவளது தந்தை அரிந்திருக்கிறார். அந்தப் பெண்ணின் உள்ளங்கைகளில் ஆணி அடிப்பதற்கு போலீசார் தடுத்துவிட்டனர். அந்தப் பெண் தற்போது மருத்துவமனையில் குணமடைந்து வருகிறாள். இந்தச் செயலுக்காக அவளது தந்தை நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படுவார் என்று போலீசார் அறிவித்துள்ளனர்.


குவாந்தானின் தெலோக் செம்படாக் கடற்கரை. காதலர்களோ, இளந்தம்பதிகளோ கடலோரமாய் அமர்ந்து களிப்பில் ஆழ்ந்து கிடக்கின்றனர். திடீரென்று அங்கு இரு மனிதர்கள் வருகின்றனர். ஒருவன் தன்னைப் போலீஸ் அதிகாரி என்றும் மற்றொருவன் தன்னை சமயத் துறை அதிகாரியென்றும் அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். "கல்வாத்" எனப்படும் முஸ்லீம் ஒழுங்கு நடவடிக்கைக் குற்றத்தின் பேரில் அவர்களைக் கைது செய்யப் போவதாகக் கூறுகின்றனர். பணம் கொடுத்தால் விட்டு விடுவதாகவும் சொல்கின்றனர். இப்படிப்பட்ட ஏமாற்றுச் சம்பவங்கள் நிறைய நடப்பதாக புகார்கள் வந்துள்ளன.

கிழக்குச் சீனாவிலுள்ள ஃபுக்கியன் மாநிலத்தில் ஒரு 'லைய்ச்சி' மரத்தில் கனிகள் காய்த்துக் குலுங்குகின்றன. ஆச்சரியமில்லைதான். ஆனால் அந்த மரத்தின் வயது ஆயிரம் வருடங்களுக்கு மேல் - கி. பி. 800ஆம் ஆண்டு நடப்பட்ட மரம் அது. இது ஆச்சரியமில்லையா?

கடந்த நான்கு மாதங்களாக லாஸ் ஏஞ்செல்ஸ் நகரையே கலக்கி வரும் கொலைகாரன் ஒருவன் அண்மையில் தனது பதின்மூன்றாவது கொலையைச் செய்திருக்கிறான். நிர்வாணமான நிலையில் தனது சொந்தக் காரிலேயே கொலை செய்யப்பட்டுக்கிடந்த சிண்டி லீ ஹட்ஸ்பெத் என்னும் பெயர் கொண்ட 20 வயது அழகி, இந்தக் கொலைகாரனுக்குப் பலியான பதின்மூன்றாவது நபராவார். பதின்மூன்று துரதிர்ஷ்ட எண்ணாயிற்றே! யார் கண்டது? இந்தப் பதின்மூன்றாவது கொலையே கொலைகாரனைக் காட்டிக்கொடுத்து விடக்கூடும்!

கலிபோர்னியாவில் ஒரு மலையின் மீதிருந்து உருண்டு வந்த பனிக்கட்டியொன்று அருகிலிருந்த உல்லாசப் பயணிகளுக்கான ஏரியில் விழுந்தது. சும்மாவா விழுந்தது? ஏரிக்கரையில் நின்றிருந்த மூன்று உல்லாசப் பயணிகளின் உயிரையும் குடித்து விட்டுத்தான் ஏரிக்குள் விழுந்திருக்கிறது!

கோலாலம்பூரிலுள்ள பொது மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு உதவும் பொருட்டு 20 லட்சம் வெள்ளி மதிப்புள்ள கம்பியூட்டர்சாதனமொன்று இந்த ஆண்டில் வாங்கப்படும்.




சென்ற மாத 22ஆம் இதழில் திரு. பி. அருள் ஆறுமுகம் எழுதிய "சாமி காப்பாத்துமா?" சிறு கதை மிகவும் நன்று. வேலவன், எஸ். சந்திரன் ஆகியோரின் ஓவியங்கள் கதைகளுக்கு எழில் சேர்க்கின்றன. இந்த ஓவியர்களின் திறமையைப் பாராட்டுகிறேன்.

சுங்கை சிப்புட் — எஸ். ஜே. மணி

### இன்னும் பலர்

அகிலனின் "பால்மரக் காட்டினிலே" என்ற தொடர்கதை உண்மையில் ஒரு சிறந்த படைப்பாகும். உண்மையில் டிரஸ்ஸர் மாதவனைப் போன்று இன்னும் பலர் இருக்கின்றனர். இது போன்ற நயவஞ்சகர்களைக் களையெடுக்க வேண்டும். அதற்கு முத்து போன்ற ஒருவர் நம்மிடையே அவசியம் தேவை.

இத்தொடரைப் படித்து முடித்தபின் இடியும் மின்னலும் என்னைத் தாக்குவதுபோல் ஓர் உணர்ச்சி. கதாசிரியர் உண்மையில் தோட்டத்தில் வாழ்ந்து பழகியவர் போல் எழுதியுள்ளார். அவருக்கு ஆயிரம் ஆயிரம் பாராட்டுக்கள்.

பட்டர்வொர்த் — அ. க. சாமி

### வார இதழ்...?

"புதிய சமுதாயம்" மிகக் குறுகிய காலத்தில் மலேசியாவின் மூலை முடுக்கெல்லாம், தோட்டப் புறங்கள், பட்டணங்களிலெல்லாம் வாழ்கின்ற தமிழ் நெஞ்சங்களில் தவழ்ந்து வருகிறது. வெகு விரைவில் வார இதழாக மலரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

தைப்பிங் — முரு. கந்தசாமி

### புதுமைப் பெண்

திரு. சோமசன்மா எழுதிய "புதுமைப்பெண்" கவிதை புதிய சமுதாயத்திற்கு ஒரு புதுமையைச் சேர்த்தது. ஆடை பாதி, ஆள் பாதியாக உலவும் இன்றைய நவநாகரிகப் பெண்களுக்கு இக்கவிதை ஓர் சாட்டையடி. இதுபோன்ற கருத்துக் கவிதைகளையே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கம்போங் லாவுட், ஸ்கூடாய் — ஆர். லோகநாதன்

### பரிசு

சிங்கை இலக்கியக் களத்தின் "சிறுகதைத் திறனாய்"வில் "புதிய சமுதாயத்தில்" வெளிவந்த திருமதி பாக்கியம் முத்துவின் சிறுகதை பரிசு பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. புதிய சமுதாயத்தில் வெளிவரும் கதைகள் அடிக்கடி பரிசு பெறுவதற்கு ஆசிரியர் தரமான சிறுகதைகளை வெளியிடுவதே காரணமாகும். தரமான சிறுகதைகளை இதழில் வெளியிடுவது பாராட்ட வேண்டிய விசயம் என்றாலும், புதிய எழுத்தாளர்களை வரவேற்று அவர்களின் கதைகளையும் வெளியிட வேண்டும்.

லாபுவான் பாடாங் தோட்டம், பத்து தீகா. — ஆர். நிர்மல்

### முதல் தரம்

அண்மையில்தான் புதிய சமுதாயத்தைப் படிக்க நேர்ந்தது. அதன் வெளித்தோற்றம் எடுத்த எடுப்பிலேயே என்னைக் கவர்ந்துவிட்டது. உள்ளடங்கிய பலவகையான விஷயங்கள் என் கருத்தைக் கவர்ந்து சிந்திக்கத் தூண்டின. பலவிதமான மாத, வார சஞ்சிகைகள் முளைத்துக்கொண்டிருக்கும் இம்மலேசியத் திருநாட்டில் "புதிய சமுதாயம்" ஒரு முதல்தர சஞ்சிகையாக இருப்பது அதன் ஆசிரியரான திரு முருகு அண்ணாவின் அயராத உழைப்பையே எடுத்துக் காட்டுகிறது. சமயம், கலை, மற்றும் சமுதாயத்துக்குத் தேவையான பலவிதமான அம்சங்களையும் உள்ளடக்கிவரும் "புதிய சமுதாயம்" அனைவரது இல்லங்களிலும் தவழவேண்டியதொரு பத்திரிகை.

கெப்போங், கோலாலம்பூர். — எம். சங்கர் மணியம்

### பேசும் "உறவு"

22-ஆவது இதழில் வெளிவந்த "இறுக்கு மனிதர்கள்", "பிப்ரவரி 24" சிறுகதைகள் இரண்டும் தரமான படைப்புக்கள்.

புதிய சமுதாயம் இதழில் தொடர்ந்து இடம் பெற்று வரும் உறவுப் பயணக் கட்டுரை படிக்கச் சுவையான இருக்கிறது. பலநூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் வாசகர்களின் உள்ளங்களோடு பேசும் உணர்வை அக்கட்டுரை ஏற்படுத்தி விடுகிறது. இனி ஒவ்வோர் இதழிலும் தவறாமல் ஓர் உறவுப் பயணக் கட்டுரை கட்டாயம் இடம்பெற்றுத்தான் ஆகவேண்டும்!

சுங்கை சோ தோட்டம், சிலாங்கூர். — ந. பாலகிருஷ்ணன்

---

சிங்கப்பூர் இலக்கியக் களம், இரு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தும் சிறுகதைத் திறனாய்வில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களின் சிறந்த கதையாகப் "புதிய சமுதாயம்" இதழில் பிரசுரமான சிறுகதை தேர்வு பெற்றுள்ளது.

திருமதி பாக்கியம் முத்து எழுதிய அந்தக் கதையின் பெயர் "வேனல்". இது தவிர புதிய சமுதாயத்தில் வெளிவந்த திரு. ஆர். சண்முகத்தின் பக்குவம் என்னும் சிறுகதையோடு "கொம்பன்" எழுதிய "தூங்கிவிட்டான்", இளையவன் எழுதிய "சராசரிகள்" ஆகிய கதைகளும் சிறப்புக் கதைகளாகத் தேர்வு பெற்றன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணை பேராசிரியர் டாக்டர் தா. வே. வீராசாமி செப்டம்பர் - அக்டோபர் கதைகளை ஆய்வு செய்திருந்தார்.

# மருதவைக் கேளுங்கள்

ஏ. எ. அசோகன், ஆயர்தாவார் தோட்டம், ஆபர்தாவார்

கே: மகாத்மா காந்திக்குப் பிறகு உலகப் புகழ்பெற்ற தலைவர் யார்?
ப: மறைந்துவிட்ட அமெரிக்க அதிபர் ஜான் கென்னடி.

கே: சிலர் எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்களே, ஏன்?
ப: தன் குணங்களைக் காணும் கண்கள் அவர்களுக்கு இல்லாததால் !

டி. மார்வீன், கோலாலம்பூர்

கே: நான் ஒரு சிறுகதை எழுதி அனுப்ப எண்ணியுள்ளேன். எனக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன?
ப: "புதிய சமுதாயத்தில்" கூடுமானவரைக்கும் தரமான கதைகளை மட்டுமே வெளியிட்டு வருகிறோம். ஆகவே அதற்கு ஏற்ப உங்கள் சிறுகதையும் தரமான படைப்பாக அமையுமென்று எதிர்பார்க்கிறேன்.

ஜி. குணசேகரன், கம்போங் துன் ரசாக், பூச்சோங்

கே: சிரிப்பதற்கும் அனுபவம் தேவையா?
ப: ஒப்பாரி வைத்து அழுவதற்கும் கூட அனுபவம் தேவை.

எஸ். எஸ். வேலன் கோபால், கம்போங் ரம்புத்தான், கிள்ளான்

கே: அண்ணா, ஒருசில தோட்டப்புறங்களில் நமது இந்தி, வம்சாவளியினர் சேமிப்பு, சிக்கனம் இவை இரண்டையும் ஒதுக்குவதன் நோக்கம் யாது?
ப: அறியாமையும் வாழத் தெரியாமையுமே காரணங்கள்!

கே: பிரஜை அல்லாத ஒரு நபர் பிரஜையுள்ள ஒரு பெண்ணை மனப்பூர்வமாக ஏற்றுத் திருமணம் செய்வாரேயானால் இதற்குச் சட்டம் அனுமதிக்கும் சாத்தியமுண்டா அண்ணா?
ப: தாராளமாகத் திருமணம் செய்துகொள்ளலாம். சட்டமும் தடுக்காது!

எம். சந்திரன், சுங்கை சீடு தோட்டம், பந்திங்

கே: தெய்வப் பெயரைச் சொல்லி ஏமாற்றித் தின்பவனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?
ப: கோவில் சொத்து குலநாசம் என்பார்கள். கெட்டுக் குட்டிச்சுவராகிப் போக விரும்புகிறவர்களே இவ்வாறு செய்வார்கள்.

பி. தமிழ்ச்செல்வி, வீரமணி, புருக்லேண்ட்ஸ் தோட்டம், பந்திங்

கே: இந்த நவீன காலத்தில் கூட ஜாதி மதம் பெருகி வருகிறதே?
ப: மக்கள் மனம் இன்னும் பத்தாம் பசலியாக உளுத்துப்போய் இருப்பதே காரணம்!

ரிச்சர்ட் சௌரி, தாவாவ், சபா

கே: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கொருமுறை புது உலகம் தோன்றுவதாக பல சமய நூல்கள் கூறுகின்றன. அது உண்மையென்றால் அந்த உலகத்திலாவது தமிழ் இனம் ஒற்றுமையாக முன்னேறுமா?
ப: நம்புவோமாக!

குமாரி அ. ராகினி, சுங்கைரம்பை தோட்டம், பத்தாங்பெர்ஜுந்தை

கே: சார், உங்களை நேரில் இன்னும் பார்க்கவில்லை. நீங்கள் எப்படி இருப்பீர்கள்?
ப: பார்ப்பதற்குப் பயங்கரமாக நிச்சயமாக என் தோற்றம் இராது.

கே: நீங்கள் எங்கள் தோட்டத்திற்கு வந்திருக்கிறீர்களா?
ப: உங்கள் பகுதிக்கு வரும்போது இனிமேல்தான் உங்கள் தோட்டத்திற்கு வரவேண்டும்.

ஆர். பாலசுப்பிரமணியம், லபுவான் பாடாங் தோட்டம், பத்து தீகா

கே: தவற்றின் பிறப்பிடம் எது?
ப: அறியாமை, தலைக்கொழுப்பு, வறுமை முதலிய பல காரணங்களால் தவறு நேரிடக்கூடும்.

கே: லட்சம்வந்தவுடன் லட்சியத்தை மறப்பவர்கள்...?
ப: பணத்தின் மகிமை தெரிந்தவர்கள்!

குமாரி பி. லீலா, பெலாம் தோட்டம், கெடா


கே: அண்ணா, மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதும் வானொலி கேட்பதும் தவறா?
ப: நாள் முழுவதும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பு அமர்ந்திருப்பதோ, வானொலியை அல்லும் பகலும் கேட்டுக் கொண்டிருப்பதோ படிப்புக்குக் கேடு பயக்கும். ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்பதில் தவறில்லை. அதுவும் அறிவுக்கு உதவக்கூடிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்க்க வேண்டும்.

கே. முருகையா, தித்தி சேரோங், பாரிட்புந்தார்.

கே: அண்ணா, காதலால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் ஆண்களா, பெண்களா?
ப: பெண்களே காதலினால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்; சோதிக்கப்படுகிறார்கள்.

ஏ. சண்முகம், காராக்

கே: இந்த நாகரிகக் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்துகொள்வதற்குக் கல்வி, செல்வம், வீரம்- இதில் எது எவசியம்?



ப: கையில் கணிசமான பணமிருந்தால் மற்றத் தகுதிகள் அதிகம் தேவைப்படமாட்டா. பெண்கள் தாமாகவே வந்துவிடுவார்கள்.

கே: சார்! தங்கள் வீட்டின் முகவரியை அறிய விரும்புகிறேன்!
ப: CC 3, ஈப்போ ரோட் கார்டன் (மேம்பூ கார்டன்) 4வது மைல், ஈப்போ ரோட், கோலாலம்பூர்.

எம். ஜி. குணசேகரன், சிலம்போ டிவிசன், சுங்கைப்பட்டாணி

கே: முருகு அண்ணு தாங்கள் தலைமை வகித்து எத்தனை திருமணங்கள், கலை நிகழ்ச்சிகள் இதுவரை நடைபெற்றுள்ளன?

ப: திருமணங்கள் ஐநூற்றுக்கும் மேலிருக்கும். கலை நிகழ்ச்சிகள் சுமார் நூறு இருக்கும்.

த. சுப்பிரமணியம், ஊத்தான் மெலிந்தாங்

கே: தமிழில் தனியாக எண்கள் உள்ளன என்பதை அறிந்தேன். தயவுசெய்து அந்த எண்களைப் பற்றிச் சிறிது விளக்கமாகப் பிரசுரித்தால், என்னைப்போன்ற தமிழ் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்

ப: தங்கள் விருப்பத்தை விரைவில் நிறைவேற்றுகிறோம்.

கொ. வனிதநாதன், சுங்கை சுமுன்

கே: முருகு அவர்களே! பக்திக்கு மூலகாரணம் என்ன?

ப: இறை நம்பிக்கை!

கு. கணேசன், கிருஷ்ணம்மாள், டோவன்பி தோட்டம், பேரா

கே: மணமான பெண் தாலியைத் தங்கச் சங்கிலியில் போட்டுக் கொள்வது சிறப்பா; மஞ்சள் கயிற்றில் போட்டுக்கொள்வது சிறப்பா?



ப: சங்கிலித் திருடர்கள் இரவு பகல் பாராமல் வீதிகளை வலம் வந்து கொண்டிருப்பதால் மஞ்சள் கயிற்றில் போட்டுக் கொள்வதே புத்திசாலித்தனமானது.

கு. ராமன், ரினி தோட்டம், ஜொகூர்

கே: ஒருவனுல் கெடுக்கப்பட்ட பெண்ணை, நான் திருமணம் செய்யலாமென்று நினைக்கிறேன். இதற்குத் தாங்கள் கூறும் பதில் யாது?

ப: தங்களின் "பெரிய" மனத்தைப் பாராட்டுகிறேன்.

எம். சுமதி, கோப்பெங்

கே: என் சினேகிதியின் மனத்தை மாற்றியமைக்கு நன்றி. என் சினேகிதியின் திருமணத்தை வாழ்த்துவீர்களா?

ப: தங்கள் சினேகிதியின் திருமண வாழ்க்கை சிறக்க என் வாழ்த்துக்கள்.

கே: அப்பாவைச் சிலர் நைனு என்று அழைப்பதேன்?


ப: தமிழ்மக்களிடையே ஒரு சில பிரிவினரிடம் இந்தப் பழக்கம் இருக்கிறது. இதற்குக் காரணம் அந்தந்தப் பிரிவு மக்களின் பூர்வீக நடைமுறையே!

கே: விலைவாசி ஏறும் இக்காலத்தில் சிக்கன முறையில் திருமணம் நடப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்!

ப: உங்கள் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன்.

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பேரா

கே: திரை அரங்கில் இந்தி, மலாய், சீனம் ஆகிய படங்கள் திரையிடப்படும்போது ரசிகர்கள் அமைதியாகப் படம் பார்க்கிருர்கள்; ஆனல் தமிழ்ப் படத்தின்போது ரசிகர்கள் சீட்டி அடிப்பதும் கத்துவதுமாய் இருப்பதற்குக் காரணம் என்ன?



ப: நமது ரசிகர்களின் அளவு மீறிய உற்சாகமே இதற்குக் காரணம். படம் பார்க்கும் மற்றவர்களுக்கு இத்தகைய கூச்சல் கும்மாளத்தினுல் தலைவலி உண்டாகும் என்பதையும் அவர்கள் மறந்துவிடுகிருர்கள். நாகரிகமற்ற இந்தப் போக்கு நமது சினிமா ரசிகர்களை விட்டுக் காலப்போக்கில் மாறிவிடுமென்று நம்புவோம்.

க. ஜெயவேலு ஊதாப்பூ, புக்கிட் பிரந்தோங் தோட்டம், சிலாங்கூர்

கே: சார், சேலைகட்டிய பெண்களை நம்பினுல் ஆண்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை வருமாமே! இது உண்மையா?

ப: அப்படி ஒன்றும் பயப்பட வேண்டாம். சேலை கட்டிய பெண்களும், சிலுவார் போட்ட ஆண்களும் ஒருவரை ஒருவர் நம்பித்தான் வாழ வேண்டும்.

செல்வி பெ. சந்திரா, ஜின் செங் தோட்டம், பேரா

கே: அண்ணு! நான் ஒரு பள்ளி மாணவி, எனக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: நீங்கள் நன்கு படித்து வீட்டுக்கும் நாட்டுக்கும் சிறப்புத் தேடித்தர வேண்டும்.

ஆர். கோவிந்தராஜு, சுங்கை சபாலிங் தோட்டம், நெகிரி செம்பிலான்

கே: இப்போதெல்லாம் குமரிப் பெண்களின் நெற்றியில் கறுப்புப் பொட்டைப் பார்க்க அபூர்வமாக இருக்கிறதே! இதற்கு என்ன சார் காரணம்?

ப: பொட்டு வைப்பது அநாகரிகமென்று புதுமைப் பெண்கள் கருதுகிருர்கள் போலும். "பொட்டுவைக்கும் பெண்ணைத்தான் கட்டிக்கொள்வேன் என்று மாப்பிள்ளைமார்கள் நிபந்தனை போட்டால் பெண்களின் நெற்றியில் பொட்டு மீண்டும் பிரகாசிக்கத் தொடங்கிவிடும்.

வை. பாலன், கிள்ளான்

கே: எங்கள் குடும்பம் ஒன்று சேர்ந்து ஒரு வீட்டை எழுப்பினேம். ஆனல் இவ்வீட்டில் பல துன்பங்கள் நேரிடுகின்றன. இதற்கு என்ன காரணம்?

ப: இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயற்கை. சில சமயங்களில் துன்பங்கள் சேர்ந்தாற்போல் தொடர் கதையாக வந்து விடவும் கூடும். எதற்கும் மனம் தளராமல் தாங்கிக் கொண்டால் விடிவு காலம் பிறந்துதான் தீரும்.

செல்வராஜு குமரன், கிள்ளான். சிலாங்கூர்

கே: சார். சாயிபாபா கடவுளா?

ப: சாயிபாபாவை ஒரு மகானக கருதலாமே ஒழிய கடவுளாகக் கருதுவது தவறு.

கே: உகாண்டா அதிபர் இடி அமீன் உயிரோடு இருக்கிருரா?

ப: நல்லவேளையாக நீங்கள் உகாண்டாவில் இல்லை. அப்படி அங்கே இருந்திருந்தால் உங்கள் தலை சுக்கு நூருகியிருக்கும்.

கே. பெருமாள், எஸ், ராஜு. கே. காளியண்ணன், மோரிப், சிலாங்கூர்

கே: கோவிலில் தெய்வச் சிலைகள் இருப்பது ஏன்; யாருக்காக?

ப: மக்கள் வழிபடுவதற்காக!

ப. மகேஸ்வரன், கம்போங் பீனங், பெட்டாலிங் ஜெயா

கே: வறுமையைப் போக்க ஒரே வழி என்ன அண்ணா?

ப: மக்களின் சம்பாத்திய வாய்ப்புக்களைப் பெருக்குவதுதான் வழி.

கே: மனிதனின் முதல் எதிரி யார்?

ப: சோம்பல்!

மு. கருணாநிதி, மாசாய்

கே: அண்ணா, ஐம்பெரும் காப்பியங்களுக்கும் தொல்காப்பியத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: தொல்காப்பியம் இலக்கண நூல். ஐம்பெருங் காப்பியங்கள் இலக்கியங்கள்.

கே: மலேசியத் தொலைக்காட்சியில் எப்போதுதான் தமிழ் மக்கள் திருப்தி அடையும் அளவிற்குத் தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறும்?

ப: தகவல் அமைச்சர் மனம் வைத்தால் நாளைக்கே இதனைச் செய்ய முடியும்.

எஸ். அஞ்சலை தேவி, டேசுன் டுரியான் தோட்டம், பந்திங்

கே: அண்ணா, நம் சமுதாயம் முன்னேற வேண்டும் என நினைத்து பல அருமையான வழிகாட்டும் நூல்களைத் தமிழில் வெளியிடுகிறார்கள். படிக்கத் தெரிந்தவர்கள்தான் அந்நூல்களைப் படித்து வாழ்க்கையில் முன்னேற முடியும். படிக்கத் தெரியாதவர்கள், வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி?

ப: படிக்கத் தெரியாதவர்கள் ஏற்கனவே வாழ்க்கையில் முன்னேறி இருக்கும் தங்கள் கூட்டாளிகளைப் பார்த்து அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து வாழ்க்கையில் முன்னேற முடியும். சொற்பொழிவுகள், நாடகங்கள், வானொலி இவற்றின் மூலமும் முன்னேற்ற உணர்வைத் தூண்ட முடியும். படிக்காத மக்களின் காதுகளுக்கும் அந்தத் தூண்டுதல் எட்டுவது திண்ணம்.

கே: சிலர் தோட்டத்தையே நம்பியிருக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். அப்படியே தோட்டத்தில் வசிக்கும் மக்கள் அனைவரும் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டால், நம் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான ரப்பர், செம்பனை ஆகியவற்றின் நிலை என்னவாகும்?

ப: தங்கள் பயத்துக்கு எந்தவிதக் காரணமும் கிடையாது. தோட்டங்களில் இருக்கும் மக்கள் அனைவரும் தோட்டங்களை விட்டுக் கூண்டோடு வெளியேற வேண்டுமென்று யாரும் சொல்வதில்லை. தோட்டங்களில் நமது எதிர்காலத் தலைமுறைக்கு வேலை வாய்ப்புப் பிரகாசமாக இல்லையென்பது தெளிவு. தோட்டங்களையே முழுக்க முழுக்க நம்பியிராமல் சொந்தவீடு, சொந்த நிலம், புதிய சம்பாத்திய வாய்ப்புக்கள் ஆகியவை பற்றித் தோட்டப்புற மக்கள் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டும் என்பதுதான் நமது தலைவர்களின் நோக்கமாகும்.

பெ. தமிழ்க்குடிமகன், செண்டிரியான்

கே. மனிதனுக்கு முதலில் தேவையானது எது?

ப: சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்று!

கே: சர்வதேச புகழ்பெற்ற மொழிகளில் தமிழும் ஒன்றா?

ப: புராதனமான உலக மொழிகளில் தமிழும் ஒன்று. அனைத்துலக அடிப்படையில் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறுவது தமிழின் சிறப்புக்குத் தக்க சான்றாகும்.

மு. சு. சங்கிலி மணியம், லியன் எஸ் தோட்டம், பேரா

கே: ஆசிரியர் அவர்களே, வள்ளுவர். தம் திருக்குறளில் சிலை வைத்த கோவில்களைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டதற்கு காரணம் என்ன?

ப: திருக்குறளைப் பொது மறையாகத் திருவள்ளுவர் இயற்றி இருப்பதால்தான் சிலை வழிபாடு பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை போலும்!

ஆர். நாகராஜா, டைமண்ட் ஜுப்ளி தோட்டம், மலாக்கா

கே: மலேசியாவில் எப்பொழுது வண்ணத் தொலைக்காட்சி இடம் பெறும்?


ப: இந்த ஆண்டு இறுதிக்குள் வண்ணத் தொலைக்காட்சியை நாம் காணமுடியும்.

டேனி, கம்போங் புக்கிட் மேரெத்தாய், சபா

கே: சில நபர்கள் கூலி வேலை செய்துவிட்டுக் கொஞ்சம் பெரிய வேலைக்குப் போய்விட்டால் கூலி வேலைக்காரர்களை ஏன் மதிப்பதில்லை?

ப: வந்த பாதையை மறந்துவிடுகிற பேதைமைதான் காரணம்.

கே: சில சமயங்களில் படிக்காதவர்கள் தவறு செய்துவிட்டால் மடையன் என்கிறார்களே! படித்தவன் தவறு செய்துவிட்டால் யார் கேட்பார்கள்?




ப: படித்தவர்கள் தவறு செய்தால் அவர்களைவிட மெத்தப் படித்தவர்களிடம் இத்தகைய "மடையன்" பாட்டைக் கேட்கவேண்டியிருக்கும்.

கே. கே. இராஜ்கண்ணா, கெல்பின் தோட்டம், நெகிரிசெம்பிலான்

கே: அண்ணா, தயவுசெய்து உள்ளதைச் சொல்லுவோனின் முகவரியைத் தெரியப்படுத்தவும்.

ப: Penerbit, "உள்ளதைச் சொல்லுவோம்"
Rangkaian Merah, Radio Malaysia,
Kuala Lumpur.

து. கேசவன், குளுவாங்

கே: சார்! எல்லா உயிரினங்களுக்கும் வாலைப் படைத்த இறைவன், மனிதனுக்கு மட்டும் ஏன் வாலைப் படைக்கவில்லை?

ப: வால்பிடிக்கும் புத்தி மனிதனுக்கு இருப்பதால் அவனுக்கு வாலை இறைவன் கொடுக்கவில்லை போலும்!

வி. முத்தாயி, பெந்தோங்

கே: நான் மலேசியாவில் பிறந்தவள். எனது 18வது வயதில் என் பெற்றோர்கள் குடியுரிமைக்கு மனுச் செய்தார்கள். இப்போது 5 வருடம் ஆகிறது. இன்னும் குடியுரிமை கிடைக்கவில்லை. நான் எழுதிப்போட்டுக் கொண்டே இருக்கிறேன். அனுப்புகிறோம் என்று பதில் வருகிறது. ஆனால் இன்னும் அனுப்பவில்லை. இதற்கு நான் என்ன செய்யவேண்டும்.

ப: உங்கள் விண்ணப்பத்தின் பதிவு எண்ணையும் விண்ணப்பித்த தேதியையும், உங்கள் பெயர், முகவரியோடு எழுதி அனுப்புங்கள். எங்களால் ஆன உதவியைச் செய்ய முயல்கிறோம்.

# 'நான்கு' முதல் ஆகட்டும்

சி. மருதமுத்து



ஜி. விஜயநாதன்

உலகக் கிண்ண ஹாக்கி போட்டி அர்ஜெண்டினுவில் மார்ச்சு மாதம் 18ஆம் தேதி துவங்கி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் 14 நாடுகள் கலந்துகொள்ள உள்ளன. அவற்றை இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். A பிரிவில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, மேற்கு ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளும் B பிரிவில் மலேசியா, பாகிஸ்தான், அர்ஜெண்டினு, ஹாலந்து, இத்தாலி, ஸ்பெயின், ஐயர்லாந்து ஆகிய நாடுகளும் விளையாட உள்ளன.

இந்தப் போட்டி 4ஆவது உலகக் கிண்ணப் போட்டியாகும். இதற்கு முன்பு 1975-இல் 3ஆவது உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்திய பெருமை மலேசியாவைச் சாரும்.

3ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் மலேசியா நாலாவது இடத்தைப் பிடித்தது. அதற்கு முன்பு நடந்த 2ஆவது உலகப் போட்டியில் மலேசியா 11ஆவது இடத்தைப் பிடித்தது. இவ்விரண்டாவது உலகப் போட்டி ஹாலந்து நாட்டில் நடைபெற்றது. முதல் உலக ஹாக்கி போட்டி ஸ்பெயின் நாட்டின் பெர்சலோனியா நகரில் நடைபெற்றது.

முதல் மூன்று போட்டிகளிலும் மொத்தம் 12 நாடுகளே பங்குபெற அனுமதிக்கப்பட்டன. ஆனால் இவ்வருடம் 14 நாடுகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

அர்ஜெண்டினுவின் போனஸ் ஐரிஸ் நகரில் நடைபெறவுள்ள இந்த நான்காவது உலகக் கிண்ண போட்டியில் மலேசியாவுக்காக ஆர். ராமகிருஷ்ணன், என். ஸ்ரீசண்முகநாதன், பிரேயின் ஸ்டாமரியா, பூன் புக் லோக், ஓவ் சூன் கூய், மோஹின்டார் சிங், ஆஸ்ராய் முகமது ஜாயின், கே. டி. ராஜன், கே. பாலசிங்கம், லெனர்ட் ஸ்பென்சர் ஒலிவிரோ, அவுட்டார் சிங் கில், பூ கியாட் சியோங், ஆர். உத்தமராஜா, ஜுல்கிப்ளி அபாஸ், அப்டெஸ் சிங் கில், தாம் கும் செங் ஆகிய 16 ஆட்டக்காரர்கள் விளையாடுவர்.

இவர்களில் புக் லோக், ஒலிவிரோ, ராமகிருஷ்ணன், சண்முகநாதன், கே. பாலசிங்கம், ஸ்டா மரியா ஆகிய அறுவரும் கோலாலம்பூரில் நடந்த 3ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் கலந்துகொண்டவர்களாவர். 4ஆவது உலகப் போட்டியில் கலந்துகொண்ட கைருடின் ஜைனல், ஏ. பிரான்சிஸ், எம். மகேந்திரன், வோங் சூன் ஹின் போன்ற மலேசியாவின் தலைசிறந்த ஹாக்கி ஆட்டக்காரர்கள் தற்சமயம் நடைபெறவுள்ள இந் நான்காவது உலகப் போட்டியில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

4ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் மலேசியா 19-3-78இல் ஸ்பெயினையும், 21-3-78இல் அர்ஜெண்டினுவையும், 22-3-78இல் ஹாலந்தையும் 25-3-78இல் பாகிஸ்தானையும், 28-3-78இல் இத்தாலியையும் சந்திக்கும்.

இவ்விளையாட்டுக்களில் கலந்து கொள்ளச் செல்லும் மலேசியா, 10.3.78ல் லண்டனை அடைந்து அங்கு 11, 12 தேதிகளில் வேல்ஸ் குழுக்களுடன் இரு நட்புமுறை ஆட்டங்கள் ஆடவுள்ளது. 13ஆம் தேதியன்று மலேசியக்குழு போனஸ் ஐரிசைச் சென்றடையும். அங்கு உலகக் கிண்ண விளையாட்டில் கலந்து கொள்ளும் முன்னர் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் நட்பு முறையில் விளையாட முயற்சி செய்யப்படுவதாக மலேசிய ஹாக்கி சம்மேளனத்தின் செயலாளர் திரு. விஜயநாதன் நமக்கு அளித்த பேட்டியில் கூறினர்.

மலேசியாவில் பல்வேறு இடங்களில் குறிப்பாக வடமாநிலங்களில் நடந்த பயிற்சி ஆட்டங்களில் மலேசியக் குழு தங்களுக்கு வழங்கப்பட்ட 21 "பெனல்டி கார்னர்"கள் எல்லாவற்றையுமே தவறவிட்டுவிட்டதைப் பல பத்திரிகைகளும் குறைகூறி எழுதியிருந்தன. இது தொடர்பாக திரு விஜயநாதன் விளக்கமளிக்கையில் பெனல்டி கார்னர்களைக் கோலாக்குவது மிகவும் சிரமமானசெயலென்று கூறிச் சில புள்ளி விபரங்களை எடுத்துக்காட்டினர். அதன்படி 1975இல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகக் கிண்ண ஹாக்கி போட்டியில் இந்தியாவுக்கு 44 பெனல்டி கார்னர்கள் வழங்கப்பட்டன. அவற்றில் நான்கை மட்டுமே இந்தியாவால் கோலாக்கமுடிந்தது. மலேசியாவுக்கு 36 பெனல்டி கார்னர்கள் கிடைத்து அவற்றில் நான்கை கோலாக்கியது. பாகிஸ்தானுக்குக் கிடைத்த 38 பெனல்டி கார்னர்களில் 6ஐ கோலாக்கியது. எனவே பெனல்டி கார்னர்களைக் கோலாக்குவது என்பது மிகவும் சிரமமான செயலாகும் என்று கூறிய விஜயநாதன் இதைப் பற்றிக் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லையென்ருர்.

திரு விஜயநாதன் மலேசியக் குழுவுடன் போனஸ் ஐரிஸ் சென்று அங்கு நடைபெறும் ஆட்டங்களில் நடுவராகவும் பணியாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது குழுவுக்குக் கனம் ராஜா டான்ஸ்ரீ அஸ்லான் ஷா அவர்கள் தலைமைதாங்கிச் செல்வார்.

நிர்வாகியாகச் செல்லவிருப்பவர் திரு. பி. அழகேந்திரா ஆவார்.



# பசுக்களைப் பராமரிக்கும் முறைகள்

டாக்டர் பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பால் பண்ணைகள் இலாபகரமாக இயங்குவதற்குப் பால் மாடுகள் அதிகப் பால் கறப்பவையாக இருத்தல் அவசியம். மேலும் பால் மாடுகள் குறித்த காலத்திற்குள் பருவத்திற்கு வர வேண்டும். கன்றுகள் பிறப்பதற்கான இடைவெளி 12 மாதத்திற்கு மேல் போகக் கூடாது. ஆகவே, பசுக்களைச் சினைப் பருவத்தில் காளைகளுடன் உடனடியாகச் சேர்க்க வேண்டும். சாதரணமாகப் பசுக்கள், சினைக்கு 21 நாட்களுக்கு ஒரு முறை ஒழுங்காக வரும். பசுக்கள் சினைக்கு விடும் பருவங்களை ஒழுங்காக முறைப்படுத்தினால், ஆண்டு முழுவதும் ஒழுங்கான முறையில், தடையில்லாமல், பால் உற்பத்தி செய்ய முடியும். வெய்யிற் காலங்களில், பால் உற்பத்தி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் பாலுக்கு மிகவும் கிராக்கியும் இருக்கிறது. பசுக்கள் சினைக்கு விடும் பருவத்தை ஒழுங்காக முறைப்படுத்தினால், வெயிற் காலங்களிலும் பால் உற்பத்தியைத் தடையில்லாமல் அதிகப் படுத்த முடியும்.

எனவே, முக்கியமாகப் பசுக்களை குறித்த காலத்தில் சினைக்கு விடுவதும் பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளை ஒழுங்காக வைப்பதும் இன்றியமையாதது ஆகும்.

கன்று போட்ட 75—90 நாட்களுக்குள் பசுக்களை காளைகளுடன் சேர்க்க வேண்டும். அப்பொழுது தான் ஆண்டிற்கு ஒரு முறை கன்று போடும். பால் பண்ணையில் 1/3க்கு மேல் பால் வற்றிய பசுக்கள் இருப்பது சிக்கனமானது அல்ல. பசுக்கள் கன்று போட்ட பின், இரண்டாவது முறையாகச் சினைக்கு வரும் பருவத்தில் காளைகளுடன் சேர்த்தல் நல்லது.

இளம் கிடாரிக் கன்றுகளைச் சினைக்கு விடும் வயது 18 மாதத்திற்குக் குறைவாக இல்லாமலும், அதே சமயத்தில் அதன் எடை 200 கிலோ கிராமுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். வயதை விட எடையே முக்கியம். உதாரணமாக, கால்நடை கல்லூரியில் வளர்ந்த ஜெர்சி சிந்தி கலப்பின மாடு எண். 20, அதன் வயது 10 மாதமாக இருக்கும் பொழுதே சினைக்குவிடப்பட்டது. ஆனால் அதன் எடை 200 கிலோவாக இருந்தது. அது கன்று போடும்போது அதன் வயது $1\frac{1}{2}$ வருடம் தான். மேற்படி பசு, முதல் கன்று ஈன்ற பின் 1,921 கிலோ கிராம் பால் உற்பத்தி (375 நாட்கள் பால் கறந்தது) செய்தது. இரண்டாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 2,189 கிலோ கிராம் (338 நாட்கள் பால் கறந்தது) என உயர்ந்தது ; மூன்றாவது கன்று ஈன்ற பின் அதன் பால் உற்பத்தி 1,928 கிலோ கிராம் (254 நாட்கள் பால் கறந்தது) அளவில் இருந்தது. இந்த உதாரணம் பசுவின் வயதை விட எடையே முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

பசுக்கள் சினைக்கு வரும்போது, அமைதியில்லாமல் தொழுவத்தை சுற்றிச் சுற்றி வரும். அடிக்கடிக் கத்தும். மேலும் வேறொரு மாட்டின் மீது அடிக்கடி ஏறும். அல்லது வேறு மாடுகள் தன்மீது ஏறும்போது ஓடாமல் அங்கேயே நிற்கும். அறை சற்று வீக்கமாகக் காணப்படும். மேலும் அறையிலிருந்து வெள்ளை வெளிப்படும். அப்போது உடனடியாகப் பசுவைச் சினைக்கு விட வேண்டும்.

செயற்கைக் கருத் தரிக்கும் முறையைப் பயன்படுத்தல் வேண்டும். இம்முறை இளம் கிடாரிகளுக்கு மிகவும் ஏற்றது. ஏன் எனில், பெரிய அதிக எடையுள்ள காளைகளை, சிறிய இளம் கிடாரிகளுடன் சேர்த்தல் இயலாது.


பசுக்கள் சினைக்கு வந்தவுடன், மேற்படி பசுக்களைத் தனியாகப் பிரித்து, தனிக் கொட்டிலில் அடைத்தல் நல்லது. மேலும் சினைக்கு வந்த பசுக்களை அதே நாளில் இரு முறையாவது சினைக்கு விட வேண்டும். பசுக்களைச் சினைக்கு விட்டவுடன், மூன்று மாதத்திற்குள், சினைப் பரிசோதனை செய்ய வேண்டும். மேலும், பசுக்களைச் சினைக்கு விட்ட மூன்றாவது வாரத்தில் மறுபடியும் சினைக்கு வருகிறதா என்று பார்த்தல் வேண்டும்.

பால் பண்ணையிலிருக்கும், குறைந்த பால் கறவையான மாடுகளை உடனடியாகக் கழித்துவிடல் வேண்டும். எந்த ஒரு மாடும் அது சாப்பிடும் தீவனம், ஆள் பராமரிப்பு ஆகியவைகளுக்காக ஆகும் செலவை விட, குறைவாக மதிப்புள்ள அளவில் பால் கறந்தால், அந்த மாட்டை கழித்து விட வேண்டும். ஆகவே, மேற்படி மாடுகளைச் சரியான முறையில் கண்டுபிடிக்க பால் உற்பத்தி சம்மந்தமான பதிவேடுகளைச் சரிவர எழுதி வருவது மிகவும் அவசியம்.

பசுக்கள் பால் கொடுக்கும் அளவானது, அதன் கன்று அப்பசுவுடன் பால் குடித்த அளவு, அதன்பின் அப் பசுவிடம் கறந்த பால் ஆகிய இவ்விரண்டின் கூட்டுத் தொகையாகும். ஆகவே, வாரத்திற்கு ஒரு தடவையாவது, கன்றுகளுக்குப் பால் விடாமல், முழுக்கக் கறந்து அதை எடை போட வேண்டும். இந்தப் பாலின் எடையை ஏழால் பெருக்கி, அந்த வாரத்தின் மொத்தம் கறந்த பால் அளவையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும், அதே நாளில் ஒவ்வொரு மாட்டினுடைய பாலிலும் உள்ள கொழுப்பு அளவையும் கண்டறிதல் வேண்டும்.

இம்மாதிரி ஒவ்வொரு மாட்டுப் பாலின் கொழுப்பு அளவையும் கண்டுபிடித்த பின், மேற்படி மாட்டின் பால் கறந்த அளவையும் எடுத்து, பால் பதிவேடுகளை ஒழுங்கு படுத்தல் வேண்டும். இந்த முறையின் மூலமாக, ஒரே அளவில் பால் கறக்கும் இருவகைப் பசுக்களை, அதன் பால் கொழுப்புச் சத்து மூலம், அப் பசுக்களின் பால் கொடுக்கும் திறமையை ஒழுங்காக முறைப் படுத்த இயலும்.

நன்றி: தமிழரசு



ராமதாஸ் மகேசுரன்

அன்று வியாழக்கிழமை. காலை மணி பத்து ஆவதற்கு இன்னும் ஒரு சில நிமிடங்களே இருந்தன.

வீட்டிற்கு வெளியிலிருந்த அந்தச் சின்ன திடலில் தனது "கிளிக்" குடன்பந்து விளையாட்டில் மும்முரமாகி இருந்தான் சேகர். அந்நேரம் "டேய் சேகர்" என்று தாத்தாவின் குரல் கேட்டது. குரல் சற்றுக் கொடூரமாகவே இருந்தது.

தாத்தாவின் கத்தல் ஆரம்பமாகிவிட்டது. இந்தப் "பூபாள ராகம்" இனி ராத்திரி தூங்கப் போகும் வரை ஓயாது. வீட்டிலுள்ளவர்களை மாற்றி மாற்றிக் கத்துவதற்கும் வார்த்தைகளால் அர்ச்சனை செய்வதற்கும் தாத்தாவிற்கு ஏதாவது காரணம் இருந்துகொண்டே இருக்கும்.

வயது அறுபதைத் தாண்டி விட்டிருந்தாலும் "ஜேம்ஸ் பாண்ட்" போலச் சுறுசுறுப்பு நிறைந்தவர். அவர் கண்டிப்புக்காரராக இருந்தாலும் கனிவு மிக்கவருங்கூட. அதோடு அவர் "ஒரு வீக் ஹார்ட்" பேர்வழி.

வீட்டின் உள்ளிருந்து கத்தியவர் இப்போது திடலுக்கே வந்துவிட்டார். தாத்தாவைக் கண்டதும் ஆட்டத்திலிருந்து நழுவி தாத்தாவிற்குப் பக்கத்தில் வந்து நின்றான் சேகர்.

"ஏண்டா, எப்ப பார்த்தாலும் விளையாட்டுத்தானா? காலையிலேயே வங்சாக் கடைக்குப் போய்ச் சாமான்களை வாங்கிட்டு வரச் சொன்னதை மறந்துட்டு, இங்கே வந்து ஆட்டம்போடுறியா?" கடிந்து கொண்டார் தாத்தா.

"இன்னைக்குச் சாயந்திரம் காற்பந்துப் போட்டி இருக்கு. அதற்காகத்தான "பைனல்" பயிறசி எடுத்துக் கொண்டிருக்கோம்" -சேகர் சமாதானமாகவே சொன்னான். தாத்தாவிடம் அது பலிக்குமா?

"பைனல் கியினல்னு என்கிட்டே சொல்லாதே. முதல்லே போய்ச் சாமான்களை வாங்கிட்டு வாடா ..!" -தாத்தாவிற்குக் கோபம் வந்துவிட்டது. சேகர் தாத்தாவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"என்னடா இன்னும் நின்னுகிட்டிருக்கே...?" தாத்தா கேட்டார்.

"இன்னைக்கு "கப் மேச் இருக்கு...இன்னும் கொஞ்ச நேரம் விளையாட்டிட்டு அப்புறமா போய் வாங்கிட்டு வரேன் தாத்தா" சேகரின் குரல் தாழ்ந்திருந்தது.

"போனமாசம் இப்படித்தான்"கப் மேச் ஆடப் போனே. கால் சுளுக்குப் பட்டுகிட்டு வந்தே... இன்னைக்கு என்ன ஆகப்போகுதோ? ஒரு நாளைக்குப் பாரு இந்த விளையாட்டே உனக்கு வினையா வந்து முடியப்போகுது"- தாத்தா ஆத்திரமுடன் "அர்ச்சனை" செய்தார்.

"இந்தத் தாத்தா எப்பவும் இப்படித்தான். விளையாடினாலே பிடிக்காது" சேகர் முணு முணுத்துக்கொண்டே திடலைவிட்டு நகர்ந்தான்.

அரை மணி நேரத்தில் கடைக்குச் செல்லத் தயாரானான் சேகர். அந்நேரம் வீட்டினுள்ளே டி.வி.யைத் திறந்து வைத்துக்கொண்டு அலி-ஸ்பிங்ஸ் குத்துச்சண்டை நேரடி ஒலிபரப்பைக் காணத் தயாரானார் தாத்தா.

அந்தக் காலத்திலிருந்தே தாத்தா ஒரு குத்துச்சண்டை ரசிகர். அதுவும் அலியின் அபிமான ரசிகர்களில் அவரும் ஒருவர்.

சோபாவில் உட்கார்ந்திருந்த தாத்தாவைப் பார்த்ததும் "இவரு மட்டும் சின்னப் பிள்ளை மாதிரி விளையாட்டை உட்கார்ந்து பார்க்கலாம், நாம மட்டும் விளையாடக்கூடாதாம்" வெறுப்புடன் முணு முணுத்துக் கொண்டே சைக்கிளை எடுத்தான் சேகர்.

குத்துச்சண்டை நிகழ்ச்சி நிமிடத்திற்கு நிமிடம் சூடு ஏறிக் கொண்டிருந்தது. தாத்தா நிமிர்ந்து உட்கார்ந்தார்! கோதாவில் இறங்கி விட்டதைப் போல உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தாத்தா அதனை ரசித்துக் கொண்டிருந்தார். 15 சுற்றும் முடிந்தது. முடிவுக்காக அலியும் ஸ்பிங்கும் மட்டுமல்ல- தாத்தாவும் துடிப்போடு காத்திருந்தார்.

ஸ்பிங்ஸ் ஆறு புள்ளிகள் வித்தியாசத்தில் அலியை வென்றார் என்று இறுதியில் அறிவிக்கப்பட்டது.

மறுகணம்........

"ஆ...! அலி தோற்றுற்டானா?" என்று உணர்ச்சிவசப்பட்ட தாத்தா நெஞ்சைப் பிடித்துக் கொண்டார். அடுத்த விநாடி அவர் உட்கார்ந்திருந்தசோபாவிலேயே அப்படியே மயங்கி விழுந்தார். பிறகு அவர் எழுந்திருக்கவே இல்லை.

"ஒரு நாளைக்கு விளையாட்டே வினையாகப் போவுது பார்' என்று சேகரைச் சற்று முன்புதான் எச்சரித்தார் தாத்தா. ஆனால் இவ்வளவு சீக்கிரம் அந்த விளையாட்டு அவருக்கே வினையாகிப் போகுமென்று அந்தவீட்டில் யாருமே எதிர்பார்க்கவில்லை!

# பால்மரக் காட்டினிலே

## 24. சத்திய சோதனை

கருக்கிருட்டைக் கிழித்துக்கொண்டு விக்டரி எஸ்டேட்டின் நாலு மணிச் சங்கின் ஒலி எழும்பியது. தோட்டத்துக்குள் நின்ற ஆயிரமாயிரம் ரப்பர் மரங்களும் தங்களை மூடிக்கொண்டிருந்த இருட்போர்வையை மெல்ல மெல்லக் களைந்தெறிய விரும்பியவைபோல் காலைக்காற்றின் சலசலப்புக்கு ஏற்றவாறு அசைந்தாடிக்கொண்டிருந்தன. வெளித் தோற்றத்துக்கு அங்கு ஏதுமே நடக்காததுபோல்தான் அந்தத் தோட்டம் வழக்கமான காட்சியை வழங்க முற்பட்டது. ஆனால் வழக்கத்துக்கு மாறாக அங்கே நூற்றுக் கணக்கான இளைஞர்கள் உறங்கவில்லை. பல பிரிவுகளாக அவர்கள் பிரிந்து சென்று லயத்தின் ஒவ்வொரு வீட்டில் இருந்தவர்களையும் நேரில் சந்தித்து விட்டார்கள். வழக்கத்துக்கு மாறான ஒரு செயலைச் செய்யுமாறு அந்த வேலை செய்து வந்த எல்லாத் தொழிலாளர்களிடமும் வேண்டிக் கொண்டார்கள்.

நிர்வாகத்தினருக்கும் இரவோடு இரவாகச் செய்தி எட்டாமல் இல்லை. தொழிலாளர்களுக்கு மத்தியிலேயே ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்துத் தங்களுடைய கண்களாகவும் காதுகளாகவும் பயன்படுத்துவது

அகிலன்

அவர்களின் நெடு நாளையப் பழக்கம். ஆகவே நிர்வாகம் தன்னை சாமதான பேததண்டப் பிரதிபலிப்புகளுக்குத் தயார் செய்துகொண்டுதான் இருந்தது. தங்களுடைய கையாட்களை விட்டே இரவோடு இரவாகத் தொழிலாளர்களைத் தோட்டத்துக் கிராணிகள் பயமுறுத்தித்தான் வைத்திருந்தார்கள்.

வீட்டின் மேல் வராந்தாவில் நின்றபடி தோட்டத்து இருளை ஆழமாக ஊடுருவிக் கொண்டிருந்தான் பாலன். பிறந்து வளர்ந்தது முதல் இருபது ஆண்டுகளுக்குமேல் அவனுக்குப் புகலிடம் அளித்து அவனை ஆளாக்கிவிட்ட மண் அந்தத் தோட்டத்து மண். இளம் ரப்பர் மரம் ஒன்றை ஆணிவேருடன் கல்லி எடுத்து அதை வெளியே தூக்கி எறிந்தால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்டதோர் உணர்ச்சியில்தான் அவன் அப்போது இருந்தான்.

கணேசனும் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரும் பாலனுடன் இருந்தார்கள். பொழுது விடிந்தால் வழக்கம் போல் வேலைக்குப் போகாமல் அவர்கள் ஒன்றுகூடி நேரே பெரிய கிராணியின் வீட்டுக்கோ பெரிய துரையின் வீட்டுக்கோ புறப்படுவதாக ஏற்பாடு.

அவர்களுடைய கோரிக்கைகள்:-

1. உடனடியாகச் செல்லத்தைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து தோட்டத்துக்கு அழைத்து வரவேண்டும்.

2. டிரஸ்ஸர் மாதவன் வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும்.

3. பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கிற்குப் பதிலாக உண்மை வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. பாலனை வேலைக்கு எடுத்துக்கொண்டு குழந்தைகளுக்கு ஓய்வு நேரத்தில் பாடம் கற்பிக்க அவன் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. சங்கத்தின் பழைய கோரிக்கையான லயத்துக்கு மின்சார, சுகாதார வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

பாலன் கூறினான்:

"உங்களோட கூட்டம் அமைதியா, ஒழுங்கா, கட்டுப்பாட்டோட நடக்கணும். யாரும் உணர்ச்சி வசப்பட்டுடப்படாது. அடி, தடி, சண்டை கைகலப்பிலே ஈடுபட்டுடப் படாது. முன்னாலே மகாத்மா காந்தி நமக்கு வழிகாட்டியிருக்கார். அந்த முறையைக் கையாண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே அவர் வெளியேத்தியிருக்கார். நாமோ சில அடிப்படைக் கோரிக்கைகளை ஒரு வெள்ளைக்காரருக்கு முன்னாலே வைக்கப் போறோம்".

"வேலை நிறுத்தத்திலே ஈடுபடறவங்களை வேலையை விட்டே நீக்கிடப் போறதா அவங்க ஆளுங்க ராத்திரியோட ராத்திரியாப் பயமுறுத்தியிருக்காங்க. இருந்தாலும் நூத்துக்குத் தொண்ணூறு பேருக்கு மேலே நம்மோட சேர்ந்திடுவாங்க" என்றான் சங்கத்தின் செயலாளனான இளைஞன்.

"நீங்க செய்யப்போறது வேலை நிறுத்தமில்லே. இதை முதல்லே தெரிஞ்சுக்குங்க!" என்றான் பாலன். "பால்மரந்தான் நமக்குச் சோறு போடுது; அவங்களுக்கும் சுகந்தருது. நமக்கு இப்போ அதுதான் கண்கண்ட தெய்வம். அதை நாம மறக்கப் போறதில்லே. நம்மோட ஒத்துமையை அவங்க தெரிஞ்சுக்கணும்கறதுக்காக, நாம கூட்டமாக் கூடிப் போய் நம்மோட கோரிக்கைகளை அவங்க முன்னாலே வைக்கப் போறோம். நியாயத்தை எடுத்துச் சொல்லி, அதையெல்லாம் நிறைவேத்தணும்னு கேக்கப் போறோம். சொன்ன பிறகு தோட்டத்துக்குள்ளே போய் அவங்க அவங்க வேலையைப் பார்க்கப் போறோம். இன்னிக்கு வேலையைத் தொடங்கறதுக்குக் கொஞ்சம் தாமதமாகும். அவ்வளவுதான்".

"நம்ம கோரிக்கையை அவங்க கேட்கலேன்னா?"

"கேட்காமல் இருக்கமாட்டாங்க. கேட்கலேன்னா நாம அவங்களோட ஒத்துழைக்கப் போறதில்லை. அமைதியா, கட்டுப்பாடா இங்கே ஒத்துழையாமையை இயக்கமாவே தொடங்கிட வேண்டியதுதான்".

அங்கு வந்திருந்தவர்கள் எல்லாருமே பாலனைத் தலைமை

தாங்கி நடத்தும்படி வற்புறுத்துவதற்காக வந்திருந்தார்கள். கணேசன் வெளியிலிருந்து வந்தவன். பாலன் ஒரு தோட்டத் தொழிலாளியாகவோ தொழிலாளர் சங்கத்தைச் சேராதவனாகவோ இருந்தாலுங்கூட, அந்தத் தொழிலாளர் வாழ்வில் இரண்டறக் கலந்தவன். பெரும்பாலான தொழிலாளர்களிடம் ஓரளவு அவனுக்குச் செல்வாக்கு உண்டு.

"நீ இருந்து நடத்தினாத்தான் இது கட்டுப்பாட்டோட நடக்கும். இல்லேன்னா ஆத்திரத்தைக் கிளறிவிடுவாங்க. அடிதடிக்குத் தூண்டுவாங்க. போலீஸை விட்டுச் சுடச்சொன்னாலும் சொல்வாங்க" என்றான் கணேசன்.

"சட்டப்படி பார்த்தா நான் இதிலே தலையிடப்படாது".

"சட்டப்படி பார்த்தா நீ சொல்றது சரிதான். நியாயப்படி பார்த்தா? தர்மப்படி பார்த்தா? அடிக்கடி நீ எங்ககிட்டே காந்தியைப் பத்திப் பேசுறியே, உன்னோட காந்தி வெள்ளைக்காரனோட சட்டத்தை மதிச்சாரா? இல்லே, நியாயத்தை மதிச்சாரா?"

காந்தி பெயரைக் கணேசன் உச்சரித்தவுடன் பாலனுக்குப் புல்லரித்தது. இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் அவர் என்ன செய்திருப்பார் என்று ஒரு நிமிடம் தனக்குள் யோசனை செய்து பார்த்தான். இளைஞர்கள் அனைவரும் இராவெல்லாம் பம்பரம்போல் சுழன்று மனித சக்தியை ஒன்று திரட்ட அரும்பாடு பட்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டம் கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற கூட்டமாக மாறி விடக்கூடாது. வன்முறையில் இறங்கிவிடும் கூட்டமாகவோ வன்முறையைக் கண்டு அஞ்சிச் சிதறிவிடும் கூட்டமாகவோ மாறிவிடக் கூடாது. நெருக்கடி மிகுந்த ஒரு கட்டத்திலே தியாகத்துக்குத் துணிந்த ஒரு தலைமை தேவைதான். இனி பின்வாங்குவதில் பயன் இல்லை துணிந்து குதித்துவிடத்தான் வேண்டும்.

"சரி, நீங்க நடக்கிறதைக் கவனிங்க. இன்னும் ஒரு மணி நேரந்தான் இருக்கு. எல்லாரையும் வந்து வரிசையா நிக்கச் சொல்லுங்க. நாலு பேரா இல்லேன்னா அஞ்சு பேரா நிறுத்துங்க. நானே தலைமை தாங்கி நடத்திட்டுப் போறேன்!"

ஆனந்தமேலீட்டால் அங்... இளைஞர்கள் அப்படியே பா...னைக் கட்டித் தழுவிக்கொண்டார்கள். அவர்களுடைய விழிகளில் கண்ணீர் மணிகள் துளிர்விட்டன. திடீரென்று புதிய தெம்பும் ஊக்கமும் உற்சாகமும் பிறந்துவிட்டன அவர்களுக்கு

"ஆனா ஒண்ணு!" என்று கண்டிப்பான குரலில் தொடங்கினான் பாலன்; "கூட்டம் இருக்கே, அது ராணுவக் கூட்டம்போலே கட்டுப்பாட்டோட நடந்துக்கணும். ஆனால் ராணுவத்துக்கு எதிர்த்து அடிக்கறதுக்கோ வன்முறையிலே இறங்கறதுக்கோ உரிமையிருக்கு. நம்மை அவங்க அடிச்சாலும், உதைச்சாலும், ஏன், துப்பாக்கியிலே சுட்டாலும் நாம உறுதியா நிக்கணும். அவங்களை எதிர்த்து அடிதடியிலே இறங்கிடப்படாது; அதே சமயம் பயந்துகிட்டுப் பின்வாங்கி ஓடி வரவும் கூடாது. இந்த விஷயத்தைக் கண்டிப்பா நீங்க எடுத்துச் சொல்லிடுங்க! நானும் வந்து சொல்லிடறேன்"

இளைஞர்கள் அங்கிருந்து சிட்டாய்ப் பறந்தார்கள். பாலனுக்கு அதற்குமேல் யோசிப்பதற்கு நேரம் இல்லை. அறைக்குள் சென்று ஒரு கணம் கண்ணம்மாவின் படத்துக்கு முன்பு கண்களை மூடிக்கொண்டு நின்றான். அவளுடைய தற்கொலையின் நினைவு வந்து ஒரு கணம் அவனை ஆட்டிப் படைத்தது. கொத்தடிமை முறைக்குக் களப்பலி கொடுக்கப்பட்ட பெண் தெய்வமாகக் கண்ணம்மா அவனுடைய நெஞ்சுக்குள் புகுந்தாள். சாபா மாநிலத்துக்குக் குடிபெயர்ந்த அவள் குடும்பமும் அதைப்போல் பல இடங்களுக்குச் சிதறி ஓடிய ஆயிரக்கணக்கான குடும்பங்களும் அவன் மனக்கண்முன் வந்தன. தெருவோரத்தில் மரத்தடிகளில் வாழ்ந்த குடும்பங்களையும் அவன் மறக்கவில்லை.

அவன் வீட்டில் இருந்த எல்லாரும் முன்பே புறப்பட்டுவிட்டார்கள். தலையில் முண்டாசும், ஒரு கையில் அரிக்கேன் விளக்கும், மறு கையில் தடியுமாக வந்து காவற்காரன் வழக்கம்போல் தொழிலாளர்களைத் துயில் எழுப்பும் வேலையில் ஈடுபட்டான். ஆனால் அன்றைக்கு அவனுக்கு அதிகமாக வேலை இருக்கவில்லை. பலர் சங்கொலி கேட்டவுடனேயே எழுந்துவிட்டார்கள். கங்காணிகளின் வழக்கமான கூப்பாடும்




நடக்கத்தான் செய்தது. சில கங்காணிகள் தங்கள் ஆட்களை மஸ்டர் களத்துக்கு அழைத்தார்கள்; வேறு பல கங்காணிகள் தங்கள் ஆட்களை ஊர்வலத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தான் பாலன். இளைஞர், முதியவர், கைக்குழந்தைகளோடு தாய்மார்கள், கங்காணிகள், மரம் வெட்டுவோர், வெளிக்காட்டு வேலை செய்வோர் இப்படிப் பலதரப்பட்டவர்களும் அதில் இருந்தார்கள். பாலனைக் கண்டுவிட்டு அவர்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தார்கள்.

பாலன் சற்று நேரம் அவர்களுக்கிடையே கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றிப் பேசிவிட்டு, "ஆத்திரமூட்டக்கூடிய காரியம் எது நடந்தாலும் நாம ஆத்திரப்படக்கூடாது; அதுபோல், என்ன நடந்தாலும் நாம் பயந்துபோய்ப் பின்வாங்கக்கூடாது" என்று தன்பேச்சை முடித்தான்.

கோரிக்கைகளைச் சொல்லி முழக்கமிட்டுக் கொண்டே கூட்டம் பெரியதுரையின் பங்களா-வை நோக்கிமுன்னேறியது. பங்களா ஒரு மேட்டின்மேல் இருந்ததால், பங்களாவுக்குள் இருந்தபடியே சன்னல் வழியாகக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார் துரை. அருகில் பெரிய கிராணி துரைசிங்கம் முதல் பல்வேறு கிராணிகளும் பெரிய துரையைச் சூழ்ந்தாற்போல் நின்று கொண்டிருந்தார்கள்.



"எல்லாரிடமும் அடிக்கடி நட்பை முறித்துக்கொள்கிறீர்களே, நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?"

"புரோக்கர்!"

—இரா. இராமராவ், தலைநகர்

பெரிய துரை அந்தத் தோட்டத்தின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டதிலிருந்து இப்படியொரு நிகழ்ச்சி அந்தத் தோட்டத்தில் நடந்ததில்லை. வெள்ளைக்காரர்களுக்கே உரிய கண்டிப்பும், மிடுக்கும், தாம் ஆளப்பிறந்தவர்கள் என்ற செருக்கும் அவரிடம் உண்டு. நியாயத்துக்குக் கட்டுப்படக் கூடியவர் என்றாலும் முன் கோபக்காரர்; பிடிவாதமுள்ளவர்.

பெரிய கிராணி துரைசிங்கத்தைப் பிடித்து வறுத்து எடுக்கலானார் துரை. டிரஸ்ஸர் மாதவனைப்பற்றி அவரிடம் ஏற்கனவே பல புகார்கள் வந்திருந்தன. அப்படிப்பட்டவருக்கு ஏன் பெரிய கிராணி தனிச் சலுகை தரவேண்டும்?

"மாதவனுக்குத் தோட்டத்துக்குள்ளே என்ன வேலை? எதுக்கு அவன் வடக்கு மேட்டுக்குப் போனான்? அவன்தான் அப்படி ஒரு பொய் சொன்னா, அதைக் கேட்டு நீ ஏன் அவன் சொன்னபடி போலீஸுக்குப் புகார் கொடுத்தே?" என்று முழங்கிவிட்டு, "உங்க எல்லாரையுமே சுட்டுக் கொல்லணும்!" என்று கர்ஜித்தார் துரை. பிறகு தொலைபேசியைச் சுழற்றித் தாமே போலீஸ் ஸ்டேஷனுக்குப் பேசினார். "அந்தப் பயல் மாதவன் கொடுத்த கேஸ் பொய்க் கேஸ்; அந்தப் பொண்ணை உடனே இங்கே திருப்பி அனுப்புங்க; நானா இருந்தா அந்த மாதவனை அங்கேயே கொலை செய்திருப்பேன்! உடனே அந்தப் பொண்ணை இங்கே அனுப்பி வையுங்க" என்றார்.

பிறகு துரைசிங்கத்திடம் திரும்பி, "டிஸ்மிஸ் மாதவன்" என்று கத்தினார்.

அவர் கோபம் அத்தோடு நிற்கவில்லை. "இதுக்காக இப்படியா கூட்டம் சேர்த்துக்கிட்டு வந்து என்னைப் பயமுறுத்தறது? இன்னிக்கு நான் ரெண்டிலே ஒண்ணு பார்க்கப் போறேன். நாலு பயல்களையாவது சுட்டுத் தள்ளப் போறேன். தனியா வந்து என் கிட்டச் சொல்லப்படாது? இவங்களுக்கு இன்னிக்கு ஒரு பாடம் கத்துக் கொடுக்கப்போறேன். நாலு கொலையாவது இங்கே விழப்போகுது!"

ரிவால்வரை எடுத்து "டிரௌஸர்" பைக்குள் திணித்துக் கொண்டார் பெரியதுரை. உலகத்துக்கே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கற்றுக் கொடுக்கும் பொறுப்புத் தங்களுடையதுதான் என்று இறுமாந்திருந்த பரம்பரையில் வந்தவர் அவர். அவருக்கு இன்றைக்கு ஒரு "கூலிச் சிறுவன்" அறைகூவல் விட்டிருக்கிறான்!

கோஷம் நெருங்கிக்கொண்டிருந்தது. பல நூறு குரல்கள் ஒன்றாக ஒலித்தன:

"செல்லத்தை விடுதலை செய்!"

"மாதவனை விரட்டு!"

"பொய் வழக்குப் போடாதே!"

"பாலனை வேலைக்கு எடுத்துக்கொள்!"

"சங்கக் கோரிக்கைகளை நிறைவேற்று!"

பெரியதுரைக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. "கூட்டம் நன்றாக நெருங்கி வரட்டும். துப்பாக்கிக் குண்டுகள் பாயும் தூரத்தில் வரட்டும்; இன்னும் நெருங்கி வரட்டும்" அவர் கண்கள் கூட்டத்திற்கு முன்னால் அமைதியே உருவாக நடந்துவந்து கொண்டிருந்த பாலனை ஊடுருவின. வயது இருபதுக்கு மேல் இரண்டோ மூன்றோ அதிகமாக இருக்கலாம். அவன் எவ்வித உணர்ச்சியையும் வெளியிடவில்லை. நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் அளவுக்கதிகமான வேதனை மட்டுமே திரண்டிருந்தது.

துரைசிங்கத்தை அருகில் அழைத்து, "இவன்தான் பாலனா" என்று கேட்டார் பெரியதுரை. "ஆம்" என்று தலையசைத்தார் கிராணி.

கூட்டம் காம்பவுண்டுக்குள் புகுந்துவிட்டது. சரேலென்று கூண்டுக்குள்ளிருந்து தாவும் புலிபோல் பாலனை நோக்கிப் பாய்ந்தார் துரை. "நிறுத்துங்க!" என்று கத்தினார். கூட்டத்தின் கோஷம் நின்றது.

பாலன் முன்னே வந்து கோரிக்கைகள் அடங்கிய காகிதத்தை அவரிடம் பணிவோடு நீட்டினான். அவர் அதை வாங்கிக்கொள்ளவில்லை.

"நீ யார் இதைக் கொடுக்கறதுக்கு? உனக்கும் இவங்களுக்கும் என்ன சம்பந்தம்? நீ வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியன்!" என்று கர்ஜித்தார் துரை.

பாலன் அதை அருகில் இருந்த தொழிற்சங்கச் செயலாளரான இளைஞனிடம்

கொடுத்துக் கொடுக்கச் சொன்னான். அந்த இளைஞன் அதை வாங்கிக்கொள்ளவில்லை.

"பாலன்தான் கொடுப்பார்! அவர்தான் எங்கள் தலைவர்! வாழ்க, பாலன்!" என்று உரக்கக் கத்தினான் இளைஞன்.

"வாழ்க, பாலன்!" என்று ஓராயிரம் குரல்கள் ஒன்றாக முழக்கமிட்டன. அந்தக் காட்டு மரங்களும் கூட்டத்தோடு ஒன்றாகச் சேர்ந்து கொண்டு எதிரொலி செய்கின்றனவா?

"என்னை இப்படிப் பயமுறுத்தலாம், பணிய வைக்கலாம்னு பார்த்துக்கிட்டிங்களா? இதுக்கு முதல் பலி உங்க பாலன்! பின்னாலே, துப்பாக்கியிலே குண்டு இருக்கிறவரையிலே உங்களைச் சுட்டுத் தள்ளுவேன்!" சரேலென்று தம் டிராயர் பைக்குள்ளிருந்து ரிவால்வாரை உருவினார் துரை. பிறகு சட்டென்று அதைப் பாலனின் நெஞ்சுக்குக் குறிவைத்தார்.

கூட்டம் திகிலடைந்தது. உடன் இருந்த இளைஞர்கள் பதறினார்கள். பாலன் மட்டும் தன் உறுதியை அணுவளவும் சிதற விடவில்லை. நேரே துப்பாக்கிக்கு எதிரில் நெஞ்சைக் காட்டியபடியே அமைதியாக நடந்து வந்தான்.

"துரை! சுடுங்கள்! தாராளமாகச் சுடுங்கள்! என் ஒருத்தனைச் சுட்ட பிறகாவது இவங்களை வாழவிடுங்கள்!... I say shoot! I am ready to die!" என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கத்திக்கொண்டே, அவருடைய ரிவால்வாரிடம் தன் மார்பைக் காட்டியபடியே மிக நெருங்கி விட்டான்.

"பாலா! பாலா! ஐயோ, பாலா!" –பல நூறு குரல்கள் புலம்பின.

சட்டென்று திரும்பினான் பாலன். கூட்டத்தைப் பார்த்து "அப்பவே சொன்னேனே, அதை நினைவு வச்சிக்குங்க. ஆத்திரப்படாதிங்க! பயப்படாதிங்க! நாம சாகத் துணியலேன்னா இனி இங்க வாழ முடியாது!" என்று சொல்லிவிட்டு, "துரை! தயவுசெய்து என்னை நீங்க சுடுங்க! Please shoot; please shoot; I am ready!" என்று கதறினான். அவனுடைய விழிகளிலிருந்து கண்ணீர் மணிகள் வெடித்துச் சிதறின.

பெரியதுரை சிலையாகிவிட்டார். பாலன் எதைப் பேசினானோ அதை உண்மையாகவே உணர்ந்து பேசுகிறான் என்பதை நொடிப் பொழுதில் கண்டுகொண்டார் துரை. அவனுக்குப் பின்னால் கடல்போல் திரண்டிருந்த கூட்டம் கரைக்கு அடங்கிய கடலாக இருந்தது. அவர் நம்பிக்கொண்டிருந்தபடி அது வெறும் புழுக்களின் கூட்டம் அல்ல. முதுகெலும்பைப் பறிகொடுத்து வாழும் கொத்தடிமைகளின் மந்தை அல்ல. அச்சமும் பேடிமையும் கொண்ட அடிமைச் சிறுமதியும் கொண்ட பிராணிகளை அவர் அங்கே காணவில்லை. அவர்கள் மனிதர்கள், மனிதர்கள், மனிதர்கள்!

அவர்களை அப்படிச் சில மணி நேரங்களுக்குள்ளேனும் மாற்றிவிட்ட அந்த இளைஞனைக் கூர்ந்து கவனித்தார் துரை. ஒரு பெரிய ராணுவத் தலைவனுக்குள்ளே இருக்க வேண்டிய நெஞ்சுரம் அவனுக்குள்ளே இருந்திருக்க வேண்டும். அப்படி அவனிடம் அந்த உரம் இல்லாதிருந்தால், அக்கூட்டத்திடம் அவனுடைய நியாய உணர்ச்சி பரவியிருக்க நியாயம் இல்லை.

துப்பாக்கியைத் திரும்பவும் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார். அவனிடம் இருந்த காகிதத்தை வாங்கி நிதானமாகப் படித்தார். படித்துவிட்டுப் பாலனைப் பார்த்து முதல் முறையாகப் புன்னகை செய்தார்.

"ஒரே ஒரு கோரிக்கையைத் தவிர, மற்ற எல்லாக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்!"

"எதைத் தவிர!" என்று கேட்டான் பாலன்.

"உன்னை இங்கே வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது. நீ ஒரு பயங்கரமான பிள்ளை. எங்கள் இந்தியாவில் இருந்த ஆட்சியையே அந்தக் காந்திக் கிழவர் வெளியேற்றினார். உன்னை இங்கே அனுமதித்தால் இங்கிருந்து நீ எங்களையே வெளியேற்றி விடுவாய்! அவர் அந்த நாட்டில் கையாண்ட அதே ஆயுதத்தை நீ இங்கே கையாளக் கற்றுக் கொண்டு வருகிறாய். மிகமிகப் பொல்லாத பிள்ளை நீ!"

பாலனின் தோளின மீது கையைப் போட்டு அவனை அணைத்துக் கொண்டு, "இந்தக் கோரிக்கையை மட்டும் நீ வற்புறுத்தாதே!" என்றார் பெரிய துரை.

"என்னை வேலைக்கு வைத்துக்கொள்ளணும் என்கிறது முக்கியமில்லே. இங்குள்ள ஆசிரியர்களுக்கு நீங்கள் ஓய்வு நேரத்தில் பாடம் நடத்த அனுமதி கொடுத்தால் போதும். பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரணும்கிறதுதான் நோக்கம்."

"கட்டாயம் அதைச் செய்வோம்."

"நன்றி!" என்று சொல்லி, அவரைக் கையெடுத்துக் கும்பிட்டான் பாலன். துரை அவனுடைய கரத்தை அன்போடு பற்றிக் குலுக்கி விடை கொடுத்தார்.

அப்போதே அங்கே போலீஸ் லாரியும் வந்து சேர்ந்தது. அதற்குள்ளிருந்து செல்லம்மாவும் பாலனின் தாயாரும் இறங்கினார்கள். கூட்டத்தோடு கூட்டமாய்ச் சேர்ந்திருந்த கணேசன், கூட்டத்தை விட்டு ஆவலோடு லாரிக்கு அருகில் வந்து நின்றான். அவன் மீது பதிந்த விழிகளைத் திருப்பிக் கொள்வதற்குச் செல்லம்மாளுக்கு வெகுநேரம் சென்றது. "இன்னிக்கே நீ என்னோட சிரம்பானுக்கு வந்திடலாம்" என்று அவள் காதுகளில் மட்டும் கேட்கும்படியாகக் கூறினான் கணேசன்.

"சரி, நீங்க இனிமேல் கலைஞ்சு போய்த் தோட்ட வேலையைக் கவனிக்கலாம்" என்று கூட்டத்திடம் கூறினான் கணேசன். வான்பிளக்க வாழ்த்தொலிகளை எழுப்பிவிட்டுக் கூட்டம் உற்சாகத்துடன் கலைந்தது.


இரண்டு நாட்கள் சென்றன.

தோட்டத்துக்கு வெளியே பஸ் நிற்கும் இடத்தில் கையில் ஒரு பெட்டியோடு பஸ்ஸுக்காகக் காத்திருந்தான் பாலன். அவனுடைய குடும்பத்தாரும் நண்பர்களும் அவனை வழியனுப்புவதற்காக வந்து காத்திருந்தார்கள். கோலாலம்பூருக்குப் போய்த் தோட்டத் தொழிலாளர்களுடைய மத்திய சங்கத்தில் ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டுமென்பது அவனுடைய ஆவல்.

"ஒவ்வொரு தோட்டத்திலே உள்ள கிளைச் சங்கத்தையும் பலப்படுத்தினால்தான் நம்மோட சந்ததிகளாவது இங்கே நல்லா வாழ முடியும்" என்று தன் நண்பர்களிடம் கூறினான் பாலன்.

பஸ் வந்தது. தகப்பன் வீரப்பனும் தாய் வேலம்மாளும் தங்கைகள் செல்லமும் கமலமும் அவனுக்குக் கண்கலங்க விடைகொடுத்தார்கள். நண்பர்கள் கூட்டமும் உணர்ச்சிவயப்பட்டு நின்றது. பாலன் பஸ்ஸில் ஏறிக்கொண்டான். கோலாலம்பூரை நோக்கி அது வேகமாய் விரைந்தது.


(முற்றும்)



1



2



3

1 "சக்கரவர்த்தி" திரையில் ஒய். விஜயா, ஸ்ரீபிரியா, சாரதா

2 "நெஞ்சோடு நெஞ்சம்" திரையில் லட்சுமிஸ்ரீ—விஜய்ஆனந்த்

3 "புண்ணியம் செய்தவள்" திரையில் முத்துராமன், பண்டரிபாய், ஸ்ரீபிரியா

● பத்ரகாளி படம் அமோக ஆதரவுடன் ஓடி லட்சக்கணக்கில் வசூலை வாரிக் குவித்திருக்கிறது. வெள்ளி விழாவையும் கண்டது. இப்படத்தைப் பற்றிய ஓர் உண்மை நமக்குத் திகைப்பூட்டுகிறது.

இதனை எடுத்த டைரக்டர் ஏ. சி. திருலோகசந்தரின் சினிபாரத் நிறுவனத்திற்கு இப்படத்தினால் இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டம். லாபமெல்லாம் விநியோகஸ்தர்களுக்குப் போய் விட்டதாம்.

இத்தகவலை டைரக்டர் ஏ.சி.திருலோகசந்தரே வெளியிட்டுள்ளார்.

---

● நடிகை சுஜாதா ஆங்கிலப் படங்களைப் போய்ப் பார்ப்பது அபூர்வம். இதுவரையில் அவர் இரண்டே ஆங்கிலப் படங்களைத்தான் பார்த்திருக்கிறார். அவை என்னென்ன தெரியுமா?

எலிசபெத்டெய்லர், நாயகியாகநடித்த "கிளியோபாட்ரா" மற்றொரு படம்: "வெயிட அன்டில் டார்க்."

---



நடிகை ஆலம்

● தன் அழகு மேனியைக் கட்டோடு வைத்திருக்கும் நடிகை ஆலம், தினமும்என்ன செய்கிறார் தெரியுமா? அவரே கூறுகிறார் கேளுங்கள்.

"ஒரு பாதி எலுமிச்சம் பழத்தை அறுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் அதைப் பிழிந்து தினமும் காலையில் உப்பு போடாமல் சாப்பிட்டால் போதும். உடலில் எந்த வித வியாதியும் வராது. உடலும் பெருக்காது. தினமும் இதனை அருந்தினால் ரத்தத்தை உறிஞ்சி விடும் என்று சொல்வதும் தவறு. இதனால்தான் என் உடல் கட்டோடு இருக்கிறது" என்கிறார் ஆலம்.

தொகுப்பு: "ராஜாமகன்"

# தெரு நாய்கள்

அந்தச் சாலையின் "பஸ் ஸ்டாப்" ஓரமாய் அமர்ந்திருந்த அவனை அந்த வழியாகச் சென்ற யாருமே கவனிக்கவில்லை. கவனித்தவர்களும் ஏதோ காட்டுப் பிராணியைப் பார்ப்பது போல் உற்றுப் பார்த்துவிட்டு ஒதுங்கிச் சென்றார்கள்.

ஆனால் அவன் - அந்தப் பிச்சைக்காரன் - அந்த வழியாகப் போன அனைவரையுமே நன்றாகப் பார்த்தான். அதைவிட சற்றுத் தூரத்தில் அமர்க்களமான கோலத்தோடு தெரிந்த கோயிலை ஆவலோடு கவனித்தான். ஜனங்கள் திரளாக அங்கே முற்றுகையிட்டிருந்த காட்சி அவனைக் கவர்ந்தது.

"ஏதாச்சும் கல்யாணமா இருக்கும்போல இருக்கே! அங்கே போனா நல்ல சாப்பாடு ஏதாச்சும் போடுவாங்களே. எந்தப் புண்ணியவானாச்சும் பார்த்துட்டு நாலு காசை விட்டெறிஞ்சாலும் விட்டெறிவாங்க!"

நெஞ்சில் சுடர் விட்ட அவாவை அப்படியே அடக்கிக் கொண்டான். இந்தப் பக்கத்திலிருந்தவர்களில் யாரும் தனக்கு ஏதாவது போடுவார்களென்று அவன் நம்பிக்கை கொள்ளவில்லை. அதனால்தான் அந்தப் பக்கம் போனான்...!

முக்கால்வாசி நரைவிட்டிருந்த அடர்ந்த தாடி மீசையும், வண்ணானே வெளுக்கமுடியாத அளவுக்குக் கறுத்திருந்த அழுக்கு உடையும், ஆங்காங்கே வியாதியால் புண்பட்டுச் சீழ் வடியும் காயங்களும் கொண்ட தனது மெலிந்த உருவத்தைக் கைத்தடியின் ஆதரவுடன் தூக்கி நிறுத்தினான். கையில் பிடித்திருந்த சிறு மூட்டையை வசதியாகத் தோள் பக்கம் சாய்த்துக் கொண்டான்.

கைத்தடியை ஊன்றி ஊன்றி மெல்ல நடக்கத் தொடங்கினான் அந்தக் கோவிலை நோக்கி!

"யாரடா இவன்! சலம் வடியற உடம்போட பார்க்கவே அருவருப்பா நடந்து போற வியாதி புடிச்ச பிச்சைக்காரன்" என்று கேட்பதுபோல் அவனைப் பார்த்துச் சென்றனர் ஒருசிலர்.

யாரைப் பற்றியும் கவலைப் படாமல் கைத்தடியின் பலத்தில் நடந்து சென்றான் அவன். கோவிலின் முகப்பு தெரிந்தது. முகப்பில் ஒரு பெரிய துணியில் ஏதேதோ எழுதியிருந்தது. நடுநாயகமாக வெள்ளைத் துணியால் முக்காடிட்ட ஒரு மனிதரின் உருவம் அதில் வரையப்பட்டிருந்தது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தோட்டக்காட்டில் அம்மாவுடனோ அப்பாவுடனோ பால்மரம் வெட்டச் செல்லாத நாட்களில் பள்ளிக்கூடம் சென்றபோது, வாத்தியார் கையில் பிரம்பைக் காட்டிக் கற்றுக்கொடுத்த எழுத்துக்களைக் கஷ்டப்படுத்தி நினைவுக்குக் கொண்டு வந்து, பார்வைச் சக்தியை இழந்திருந்த கண்களை இடுக்கியவாறு துணியில் தெரிந்த எழுத்துக்களைச் சேர்த்துப் படிக்கத் தொடங்கினான் அவன்.

"இ...ரா...ம... லி... ங் ...க ... சு...வா...மி...க ... ள் ...கு... ரு... பூ...ஜை"

அதன் கீழே "உபயம் ...திலகம் சுந்தரலிங்கம்" என்ற வாசகங்களைத்தான் அவனால் படிக்க முடிந்தது. அந்தப் பெயரைத் தொடர்ந்து வந்த பட்டங்களை அவனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை, அவை வேறு மொழியில் இருந்த காரணத்தால்!

என்ன சொல்வார்களோ ஏது சொல்வார்களோ என்று பயந்தபடி மெல்ல உள்ளே நுழைந்து எட்டிப் பார்த்தான் அவன். அப்போதுதான் ஒரு பெரிய மனிதர் வெண்மை பளிச்சிடும் வேட்டியும் ஜிப்பாவும் மினுமினுக்க அங்கே அமர்ந்திருந்தவர்களுக்கெல்லாம் வடையும் மற்றும் பலகாரமும் கொடுத்துக்கொண்டே வந்தார். அவரது பரந்த நெற்றியில் தீட்டப்பட்ட திருநீற்றின் மேல் சந்தனமும் குங்குமமும் கலந்த சிறிய பொட்டொன்று சிரித்தது. அந்தக் கோலத்தைப் பார்த்தவர்களே "சிவப் பழமா இருக்காரே, ரொம்ப பக்திமான் தான்!" என்று சொல்லி விடுவார்கள்.

அவர் அவனைப் பார்க்கவில்லை. அவர் அருகில் வரும் வரை காத்திருந்தான் அவன். அங்கு இருந்தவர்களெல்லாம் அவனைக் கண்டதும் முகத்தைச் சுளித்தனர்.

அவரும் நெருங்கினார். நெருங்கியதும்...

"ஐயா..."- காவி படிந்த பற்களைக் காட்டி, குழைந்த குரலில் வேண்டினான் அவன்.

அவர் திரும்பிப் பார்த்தார். உடனே அலறினார். கையிலிருந்த வாளியை பக்கத்திலிருந்தவன் கையில் சட்டென்று கொடுத்தார். "சிவ... சிவா... என்னடாப்பா இது! உனக்காக ஆயிரம் ஆயிரமா செலவழிச்சு பிரார்த்தனை பண்றேன். குருபூஜை நடத்தறேன். இந்த நேரத்திலே இந்த அழுக்குப் பிடிச்ச - சீக்குப் பிடிச்ச சனியன்களையெல்லாம் கண்ணில காட்டறயே!...பார்க்கவே சொமட்டிக்கிட்டு வருதே. டேய் எருமை மாடு... இன்னும் என்னடா இங்க நிற்கிறே... சீச்சி... அப்பாலே போடா... போடான்றேன் இன்னும் நின்னு பார்த்துகிட்டு இருக்கிற.. முண்டம்"

—அகராதியில் இல்லாத வார்த்தைகளை அடுக்கினார் அவர்-சுந்தரலிங்கம். சுற்றி நின்றவர்களின் ஏளனத்தையும்

இரா. முத்தரசன்

அவரது சொற்களின் கடுமையையும் சகித்துக்கொள்ள முடியாதவனாய்க் கோவிலின் வாசற்படியில் வந்து நின்றான் அவன்.

"கருமம்...கருமம்" என்று முனகிக்கொண்டே உள்ளே சென்றார் சுந்தரலிங்கம். மற்றவர்களும் கவனத்தை வேறு திசையில் திருப்பினர். இதுதான் சமயம் என சடாரென்று வாசலிலேயே அமர்ந்து கொண்டான் அவன்.

மெல்லத் தலையை நீட்டி உள்ளே பார்த்தான். நிறையப் பேர் -சிறுவர் சிறுமியும் பெரியவர்களுமாய்- அமர்ந்து திருவருட்பாவை உரக்கப் பாடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் தலைவர் போல ஒரு மனிதர் "மைக்"கின் முன் அமர்ந்து உச்சஸ்தாயியில் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்து எல்லாரும் பாடினர்.

"எப்படியோ பாடிட்டுப் போறீங்க! போவும்போது எனக்கு நாலு காசோ, கொஞ்சம் சாப்பாடோ போட்டுட்டுப் போனாப் போதும்!" -மனத்துக்குள் பேசிக்கொண்டான் அவன்.

வயிற்றில் எழுந்த பசியை அடக்கிக் கொண்டு காலை மடக்கி, சுவரில் சாய்ந்து கொண்டான்.

பாட்டு தொடர்ந்து கொண்டிருந்தது.

ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பினான். கோவிலிலிருந்து ஒரு பெண் குழந்தை -வயது ஆறோ ஏழோ இருக்கும்- கையில் உள்ள பொட்டலத்திலிருந்து கிரீம் பிஸ்கட்டுக்களை எடுத்துத் தின்று கொண்டே வந்தது.

ஒளிந்திருந்த பசி குபீரென்று கிளம்பியது. நாவில் நீர் ஒழுக அந்தக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான் பிச்சைக்காரன்.

குழந்தை வாசலுக்கு வந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். பக்கத்திலிருந்த பிச்சைக்காரனையும் பார்த்தாள். பார்த்தவுடன் நாக்கை நீட்டிக் குமட்டிக் கொண்டு, மற்றவர்களைப்போல் அலறிப்புடைத்து ஓடவில்லை. சர்வ சாதாரணமாக நிதானமாக அவனைப் பார்த்தாள்.

அவனும் அவளை ஏக்கம் வழியப் பார்த்தான்.

கையிலிருந்த பொட்டலத்தைக் காட்டி "வேணுமா?" என்று அவனிடம் கேட்டாள்.

அதற்காகவே காத்திருந்தவன்போல பலமாக மேலும் கீழுமாகத் தலையை ஆட்டினான் பிச்சைக்காரன். அவன் அருகில் வந்து நாலைந்து பிஸ்கட்டுக்களை கையில் அள்ளி அவனிடம் கொடுத்தாள் அவள்.

ஆவலோடு இருகைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டான்.

சிறுமி அங்கிருந்து நகர்ந்தாள். அவளை அவன் அதற்கப்



புறம் கவனிக்கவே இல்லை. பிஸ்கட்டுக்களைச் சுவைப்பதிலே மும்முரமானான். அந்தச் சிறுமி சாலைக்கு அப்பாலிருந்த உணவுக் கடைகளை நோட்டமிட வேண்டிச் சாலையைத் தாண்டிச் சென்று விட்டாள்.

"தட....தட" என்ற சத்தம் கேட்டு, பிஸ்கட்டுக்களின் சுவையில் ஆழ்ந்திருந்தவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். கோவில் உள்ளேயிருந்து பெரிய மனிதர் சுந்தரலிங்கம் நாலைந்து ஆட்களோடு ஓடிவந்தார். பிஸ்கட்டுக்களைக் கையில் பார்த்தால், சிறுமியை ஏமாற்றிப் பிடுங்கிவிட்டான் என்று பாய்ந்தாலும் பாய்வார் இந்த மனிதர் என்ற பயத்தில் எஞ்சியிருந்த இரண்டு பிஸ்கட்டுக்களை மூட்டையில் திணித்துக் கொண்டான் அவன்.

"டேய், இப்படியே போய் பாருங்கடா...டேய்...நீ இந்தப் பக்கம் போ—என் மகளை எப்படியாச்சும் இங்கே கொண்டு வரணும். ஆண்டவா! உனக்கு நல்ல காரியம் பண்ற நேரத்திலே என் ஒரே மகளைப் பறிச்சிக்கிட்டு சோதிச்சுடாதேப்பா! ஐயோ! கழுத்தில் வேற நிறைய நகை போட்டிருந்தாளே!" வாசலுக்கு வந்த சுந்தரலிங்கத்தின் கூக்குரல்தான் அது. பக்கத்தில் பிச்சைக்காரனைப் பார்த்தவர் "சீ...தூ... இவன் வேற கண்ணில பட்டுக்கிட்டு—" என்று காறித்துப்பினார்.

பயந்தவாறு ஒடுங்கி சுவரோடு நெருங்கிக்கொண்டான் பிச்சைக்காரன்.

"மாலதி...அம்மா... மாலதி" உரக்கக் கூப்பிட்டார் சுந்தரலிங்கம்.

சாலைக்கு அந்தப் பக்கம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுமி— சுந்தரலிங்கத்தின் மகள் மாலதி- அப்பாவின் குரலைக்கேட்டு "அப்பா" என்று கூவியவாறு வேகமாகச் சாலையைத் தாண்டி ஓடிவந்தாள்.

அம்மா! பார்த்து வாம்மா! காரு நிறைய வருது" -சுந்தரலிங்கத்தின் எச்சரிக்கையைச் சட்டை செய்யாமல் ஓடிவந்தாள் அந்தச் சிறுமி.

திடீரென்று வலது புறச் சந்திலிருந்து எமனைப்போல உறுமிப் பாய்ந்தது ஒரு கார்.

"ஐயோ! காரு... காரு... மாலதி" -அலறினார் சுந்தரலிங்கம்.

பிச்சைக்காரனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு பலமும் வேகமும் வந்ததோ தெரியவில்லை. பாய்ந்து சென்று அவளை அப்படியே அணைத்துத் தூக்கி ஓரமாக வந்து விழுந்தான். கார் கடந்து சென்றது.

பிச்சைக்காரனின் இறுக்கமான பிடியிலிருந்து சிறுமி தன்னை விடுவித்துக்கொண்டு அப்பாவிடம் ஓடினாள். அவரோ வேகமாக வந்து பிச்சைக்காரனுக்கு ஓங்கி ஓர் அறைவிட்டார்.

"டேய்! தெருப்பொறுக்கி! என்ன துணிச்சல் இருந்தா என் மகளைத் தொட்டுத் தூக்கி இருப்ப! ஐயோ! இந்த வியாதிக்காரன் உடம்பு பட்டு என் மகளுக்கு என்னென்ன நோய் எல்லாம் வரப்போவுதோ! ஆண்டவா! டேய், நடுரோட்டு நாயே! இன்னும் என்னடா நிக்கிற-போடா! இன்னும் இங்கேயே இருந்தா உன்னைக் கொன்னுடுவேன்"-கத்திவிட்டு மகளின் மேல் படிந்திருந்த தூசியைத் தட்டினார் சுந்தரலிங்கம்.

கூட்டம் வேடிக்கை பார்க்கத் தொடங்கியது. பிச்சைக்காரனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன இது! காடியில் அடிபடப் போனவளை, என் பசிக்கு ரொட்டி குடுத்தாளேன்னு ஓடிப்போய் காப்பாத்தின இந்த ஆளு என்ன அடிக்கிறாரே!, ஏசுறாரே" -முனகிக் கொண்டே சென்று தன் மூட்டையை எடுத்துத் தோளில் சாய்த்துக்கொண்டான் அவன்.

அந்தச் சிறுமியை நன்றி உணர்வோடு பார்த்தான். சுந்தரலிங்கம் உறுமினார், "இன்னும் என்னடா நிக்கிற. போடான்னு!"

மூட்டையிலிருந்து வெளியே எட்டிப் பார்த்த பிஸ்கட்டுகளை எடுத்து மென்று கொண்டே தடியை ஊன்றி நடக்கத் தொடங்கினான் அந்த "நாய்க்குண"ப் பிச்சைக்காரன்.

கோவிலின் உள்ளே இருந்து ஒலித்த இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவான "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்..." எனும் கீதம் காற்றிலே மிதந்து வந்து அந்த "ரோட்டு நாயை" வழியனுப்ப வைத்தது.

# ஒன்று

ஒருவன் உண்ண ஒருவன் ஏங்க
உலகம் இல்லை மனிதா
ஒருவன் மற்ற ஒருவனோடு
உறவு கொள்ளல் இனிதாம்!

இரத்தம் ஒன்று சதையும் ஒன்று
நரம்பு நாளம் ஒன்றே!
இரக்க நெஞ்சம் ஈகை நெஞ்சம்
இறந்து போதல் என்னே!

காகம் ஒன்று புறவும் ஒன்று
கூடி வாழும் போது
தாகம் ஒன்று வேர்வை ஒன்று
தனித்து நிற்ப தேனோ!

இதயம் ஒன்று இறையும் ஒன்று
இதிலும் பேதம் ஏது?
உதயம் ஒன்று மதியும் ஒன்று
ஒதுங்கல் ஒதுக்கல் ஏனோ?

பிறப்பும் ஒன்று இறப்பும் ஒன்று
பெருமைக் கென்ன உண்டு?
உரைக்கும் இந்த ஒருமைப் பாட்டை
உணர்ந்து வாழ்தல் நன்று!

கோவலன்

# வாசகர்

எங்கள் கம்பத்தில், கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருக்கும் உறுதியான பாலத்தைக் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சி ஒரு புறம் இருக்க, ஒரு பெரும் குறையும் எங்களுக்கு இருக்கவே செய்கிறது. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இந்தியர்கள் வாழும் இக்கம்பத்தில் மின்சாரம் இல்லாதது ஒரு பெரும் குறையாகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

எங்கள் கம்பத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு கம்பத்திற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து இப்போது மின்சாரம் பொருத்தும் வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது. இது மட்டுமல்ல; எங்கள் கம்பத்திற்கு அருகிலிருக்கும் மற்றொரு கம்பத்திற்குக் கூடிய விரைவில் மின்சார வசதி ஏற்படுத்தித் தருவதாகச் சிலாங்கூர் மந்திரி புசார் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார். இடையில் எங்கள் கம்பம் மட்டும் அனாதையாக விடப்பட்டு இருப்பது வருத்தமாகவே இருக்கிறது.

பல ஆண்டுகளாக இருட்டிலே வசித்து வரும் எங்களுக்கு ஒளியைப் பார்க்க ஆசை இருக்காதா என்ன...? வரிசையாக அல்லது முறையாகக் கட்டப்படாத வீடுகளைக்கொண்ட சில கம்பங்களுக்கு மின்சார வசதி இருக்கும்போது எங்கள் கம்பத்திற்கு மின்சாரம் கொடுக்க ஏன் தயங்குகிறார்கள் என்பது இன்னும் விளங்கவில்லை! இதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா...?

குறிப்பு:–ம.இ.கா. பூச்சோங் கிளை இதைக் கவனித்தும்- கவனிக்காதது போல இருப்பதை நினைத்தால் வருத்தம் இன்னும் கூடுகிறது.

–ஜி. குணசேகரன்,
கம்போங் துன் ரசாக்,
பூச்சோங், சிலாங்கூர்.

இது சம்பந்தமாக வழக்கறிஞரும், ம. இ கா. பூச்சோங் கிளையின் தலைவரும், மேல் சபையின் உறுப்பினருமான செனட்டர் எம். மகாலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்ட போது அவர் கொடுத்த விளக்கம்:-

கம்போங் துன் ரசாக் ஒரு சட்டபூர்வமான கிராமமல்ல, ஆனால் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இரண்டு கிராமங்களும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கிராமங்களாகும். எனவே அவற்றுக்கு அரசாங்கம் மின்சாரத்தை வினியோகித்துள்ளது. எனினும் பூச்சோங் வட்டார ம.இ.கா. கிளை துன் ரசாக் கிராம மக்களுக்கு உதவ ஆவன செய்து வருகிறது. இப்பகுதியில் 75 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுக் கூடிய விரைவில் இங்கு வாழும் மக்களுக்கு வீடு கட்டும் நிலமாக வழங்கப்படும். அதன் பிறகு சாலைகள் போடப்பட்டு மின்சாரமும் வழங்கப்படும். இதை விரைவு படுத்த கம்போங் துன் ரசாக் பகுதியில் ஒரு புதிய ம. இ. கா. கிளை உருவாக்கப்படும்.

●

கடந்த தைப்பூசத்தன்று [24-1-78] லட்சக்கணக்கில் கூடி இந்துக்கள் வழிபடும் இடமாகிய பத்துமலையில் கிறிஸ்துவ சமயத் துண்டுப் பிரசுரங்களின் விநியோகமும், மது வியாபாரமும் நடைபெற்றதை மிக மிக மனவருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இந்துக்களுக்கு மகத்தான திருவிழா பத்துமலை தைப்பூச விழாவாகும். இவ்விடத்தில் மாற்று மதத்தினர் அதுவும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அந்த மதத்தினரில் சிலர் தங்கள் சமயத்தைப் பரப்ப இவ்விடத்தைப் பயன்படுத்துவது மிகவும் வருத்தத்திற்குரியது.

மற்றும் மலையடிவாரத்தில் புதுமையான விதத்தில் மது விநியோகம் செய்யப்படுவதைக் கண்டபோது மனம் வெதும்பிற்று. சம்சுவை இளநீரில் கலந்து விற்பனை செய்வதைக் கண்டு வருந்தினேன். அடுத்து வரும் விழாக்களில் இவற்றை அகற்ற தேவஸ்தானம் ஆவன செய்யும் என எதிர்பார்க்கிறேன்.

கு. இராஜு,
கோலாலம்பூர்.

தைப்பூசத் திற்காகப் பத்துமலை கோவிலைத்தேடிவரும் ஆயிரமாயிரம் பேர்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்து வருபவர்கள். அவர்கள் முகத்தைக் கழுவிக்கொள்ளக் கூட நீர் இல்லாமல் தவிக்கவேண்டியுள்ளது. மலம் கழிக்க மலக்கூடம் செல்பவர்கள் அதன் வாசலில் காலை எடுத்து வைப்பதுதான் தாமதம்!..ச்சி... என்று பின்னோக்கி வருகிறார்கள். இப்படி மலம் தங்கியிருப்பதற்குக் காரணம் தண்ணீர் இல்லாததே.

தண்ணீரை அதிகம் பயன்படுத்தி விடுவார்கள் என்று கோவில் நிர்வாகிகள் பிரதான குழாயை மூடிவிட்டார்கள் என்று பலர் பேசிக்கொண்டார்கள். பல் சுத்தம் செய்யக்கூட தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்ட என் போன்றவர்களின் துன்பத்தைச் சொல்ல முடியாது. மக்களின் வசதி பெரிதா அல்லது பணம் பெரிதா என்று கோவில் நிர்வாகிகள் இன்னும் முடிவு செய்யவில்லை போலும்! எதிர்காலத்தில் இதுபோன்ற குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இருநூற்றுக்கும் மேற்பட்ட பிச்சைக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்துகொண்டு பிச்சை எடுப்பதைக் காணும்போது வேதனைக்குப் பதில் கோபம் தான் வருகிறது. உடலில் குறைகள் உள்ளவர்கள் சிலரே. உழைக்கும் உடற்கட்டு இருந்தும் பலர் பிச்சை எடுக்கிறார்கள்! சிறுவர்களும் பிச்சை எடுப்பது நமது நெஞ்சில் முள் குத்துவது போலிருக்கிறது. நமது சமூகம் பிச்சைக்கார சமூகமாக மாற நாமே வழிகாட்டியாக இருக்கக் கூடாது. தைப்பூசத் திருநாள் அன்று பிச்சை எடுப்பதைத் தடைசெய்ய வேண்டும்.

ஏ.எஸ். ரவிப்பெருமாள்
குக்கூப் தோட்டம், ஜோகூர்

மேற்கண்ட இரு கடிதங்கள் தொடர்பாக மாரியம்மன் தேவஸ்தானத் தலைவர் திரு. சொக்கலிங்கம் அளித்த விளக்கம்.

1. இந்நாட்டில் சமயச் சுதந்திரம் அதிகாரபூர்வ

# வட்டம்

மானது. ஆயினும் நமது தேவஸ்தான எல்லையில் கிறிஸ்துவ மதப் பிரசாரம் நடைபெற்றது வேதனைக் குரியதாகும். சென்ற வருடத்தில்கூட இது சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அடுத்த வருடத்தில் இவ்வாறு நடக்காமல் இருக்க ஆவன செய்வோம்.

2. இளநீரில் சம்சுவை ஊற்றி வியாபாரம் செய்த செய்தி புதுமையானதே. அவ்வாறு சம்சு விற்றதை ஆங்காங்கே நின்றிருந்த அதிகாரிகளிடம் தாங்கள் தெரிவித்திருந்தால் அந்த சம்சு விபாபாரிகளைப் பிடித்துத் தண்டித்திருக்கலாம். எனினும் அடுத்த வருடத்தில் இவ்வாறு விபாபாரம் நடவாமல் தடுக்க முயலுவோம்.

1. தண்ணீர் மெயின் குழா-யை அடைத்துவிட்டோம் என்பது தவறான செய்தியாகும். கோம்பாக்கிலிருந்து பத்துமலைக்கு வரும் குழாய் உடைந்து விட்டதால் நமக்குத் தேவைப்பட்ட நீர் கிடைக்கவில்லை. வரும் வருடங்களில் கோயில் பகுதியில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்தை அமைக்க வேண்டுமென்ற திட்டம் உள்ளது. அத்திட்டம் நிறைவேறினால் நீர்த் திண்டாட்டம் இருக்காது என்று உறுதியளிக்கிறோம். இது போலவே நமக்குத் தேவையான மின்சார வசதிக்கு ஜெனரேட்டரைப் பயன்படுத்தும் திட்டமும் உள்ளது.

2. பிச்சைக்காரர்கள் விஷயத்தில் நாம் அதிக கண்டிப்புக் காட்டுவது சற்றுச் சிரமமானதாகும். எனினும் பிச்சைக்காரர்களால் ஏற்படும் இடையூறுகளைக் குறைக்கக் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

●

ஐயா. டி.வி. மலேசிய நிர்வாக அதிகாரி அவர்களே, நிகழ்ச்சிகளை மாற்றம் செய்வதற்கு முன் டி. வி. ரசிகர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளை எந்தெந்த நேரங்களில் ஒளிபரப்பும்போது அதிகம் விரும்புகிறார்கள் என்று ஆய்வு செய்த பிறகு நிகழ்ச்சிகளை மாற்றம் செய்வது நல்லது. உதாரணமாக சீன தமிழ்ப்படங்களைச் சனிக்கிழமை பிற்பகல்3மணிக்கு ஒளிபரப்புவது பொருத்தமான நேரமா? தமிழ், சீன மக்கள் பெரும்பாலும் தோட்டப்புறங்களிலேயே இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தொழில்களை முடித்து வீடு திரும்பும் நேரமே 3 மணியாகும் போது படங்களை எப்படி ஐயா ஆசை தீரப் பார்ப்பது? ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள். எல்லா ரசிகர்களுக்கும் ஏற்ற நேரமும் கூட, அல்லது சனிக்கிழமை இரவு 9 மணிக்கு ஒளிபரப்பலாம். மறு நாள் ஞாயிற்றுக்கிழமை எல்லாருக்கும் ஓய்வு நாளும் ஆகும். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரி இதனைக் கருத்திற் கொண்டு நிகழ்ச்சியை மாற்றி அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—ரு. நாராயணன்,
செங்காங் தோட்டம்,
போர்ட்டிக்சன்.

சீன, தமிழ்ப் படங்கள் மாலை 3 மணிக்கு ஒளிபரப்புவது என்பது தவறான செய்தியாகும். உண்மையில் இப்படங்கள் சனிக்கிழமை 4 மணிக்கே ஒளிபரப்பப்படுகின்றன. மேலும் இது விஷயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் கொடுத்த பதில் பின்வருமாறு:

கெடா, கிளந்தான், திரங்கானு, ஜொகூர் போன்ற மாநிலங்களில் ஞாயிற்றுக் கிழமைகள் விடுமுறை நாட்களல்ல. எனவே கடிதத்தில் கண்டபடி நிகழ்ச்சியைச் சனிக்கிழமை இரவுக்கோ, அல்லது ஞாயிற்றுக்கிழமைக்கோ மாற்றுவது சாத்தியமாகாது. மேலும் டெலிவிசன் நிகழ்ச்சிகள் யாவற்றையும் எல்லோரையும் திருப்தி செய்யும் நேரத்தில் ஒளிபரப்புவது மிகச் சிரமமான பிரச்சனையாகும்.

●

மலேசியத் தொலைக் காட்சியில் தமிழில்தான் விளம்பரங்கள், நாடகங்கள் போன்றவை ஒளிபரப்பப்படுவதில்லை. இதர மொழிப் படங்களையாவது நேரத்திற்குத் தகுந்தவாறு முழுமையாக, உருப்படியாக பார்த்து ரசிக்கும்படி ஒளிபரப்பினால் என்ன?

●

வியாழக்கிழமைதோறும் இரவு 7.20 மணிக்கு அதிக விறுவிறுப்பும், மர்மங்களையும் கொண்ட "நியூ எவெஞ்சர்ஸ்" (The New Avengers) என்ற ஆங்கிலப் படத்தை ஒளிபரப்பி வருகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அடுத்த ஒளி அலை வரிசையில் தமிழ் படங்களையும் ஒளிபரப்பு வருகின்றார்கள். இதில் நம் தமிழ் நெஞ்சங்கள் எந்தப் படத்தை முழுமையாக பார்த்துத் திருப்தியடைவது?

அதிகாரிகள் இந்த நியூ எவெஞ்சர்ஸ் என்ற ஆங்கிலப் படத்தை வேறு நாட்களில் ஒளிபரப்ப ஆவன செய்ய வேண்டும்.

—எம். பி. பாலன்,
சுவா பெத்தோங் தோட்டம்,
சௌத் டிவிஷன்,
போர்ட்டிக்சன், நெ. செ.

இக்கடிதம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறிய விளக்கம்:-

"நியூ எவெஞ்சர்ஸ்" என்னும் ஆங்கிலப் படம் நிறுத்தப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக "பென்டேஸ்டிக் ஜெர்னி(Fantestic Journey) என்னும் புதிய நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகின்றது. எந்த நிகழ்ச்சியைப் பார்ப்பது என்று வெதும்புவதை விட்டு ஏதாவது ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பதே சாலச் சிறந்தது. இரண்டு நிகழ்ச்சிகளையும் காண முயல்வது கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற கதையாகிவிடும். ஏதாவது ஒன்றை விட்டுக் கொடுத்தே ஆக வேண்டும்.

தமிழ்ப் போதனமுறையிலுள்ள குறைபாட்டாலேயே மாணவர்களுக்குச் சரியான எழுத்தறிவையும், முறையான உச்சரிப்பையும் போதிக்கமுடியவில்லை என்று குறைபட்டுக் கொண்ட தமிழாசிரியர் ஒருவரின் கடிதத்தைப் புதிய சமுதாயத்தில் (25-1-78) கண்டேன். அவருடைய உணர்ச்சிகள் நியாயமானவையே.

ஆனால் பல பள்ளிகளில் ஆசிரியர்கள் முறையாக உச்சரிக்கச் சொல்லிக் கொடுப்பதில்லை என்றுதான் தோன்றுகிறது.

மாணாக்கரின் உச்சரிப்புக் குறைபாட்டுக்கு யார் காரணம்? அவர்களுக்குப் போதித்த ஆசிரியர்களேதான் என்றால் அதனை ஒப்புக்கொள்ள வேண்டும்.

மாணாக்கரின் உரையாடல்களைச் செவிமடுக்கும் வேளைகளில் இத்தகைய தவறுகள் இருந்தால் சிரமம் பாராது திருத்தவேண்டும்.

சில ஆசிரியர்களே உச்சரிப்புப் பிழையுடன் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அவர்களிடம் பயிலும் மாணாக்கரின் நிலை எப்படியிருக்கும்?

ஆங்கிலத்தில் பேசும்போது ஏதாவது சிறிய பிழையிருந்துவிட்டால் முட்டிக்கொள்ளும்-மோதிக்கொள்ளும் சில தமிழர்கள் தங்கள் தாய்மொழியில் நடக்கின்ற உச்சரிப்புக் கொலைகளைக் கேட்டுக்கொண்டு பேசாமல் இருக்கிறார்களே...!

ஒரு தமிழ்ப்பள்ளியின் பழைய மாணவன்,
கோலாலம்பூர்.

●

இந்நாட்டில் மூன்று பெரும் இனங்களாக, இந்தியர், மலாய்க்காரர், சீனர் இருப்பது யாவரும் அறிந்த ஒன்று. இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் ம. இ. கா., தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்று. அப்படியிருந்தும், நமக்குக் கிடைக்க வேண்டியவை முறையாகக் கிடைக்கின்றனவா?

உலகத்தின் பார்வையில் தென்படும் வகையில், ஆண்டுதோறும் நடத்தப்படும் தைப்பூசத்திற்கு விடுமுறை வேண்டுமெனப் பல ஆண்டுகள் கோரிய பின், இப்போதுதான் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது. இதுவும் தேர்தல் வாக்குறுதியாக இல்லாமல், உண்மையில் செயலுக்கு வருமென எதிர்பார்ப்போம்.

கல்லுடைப்பு நிறுத்தப்பட வேண்டுமென, பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து, மந்திரிகளை அழைத்து மகஜர்கள் கொடுத்துள்ளோம். நமது தலைவர்களும், "ஏற்பாடு" செய்வதாகக் கூறிவந்தார்கள். ஆனால் பிரதமர் அவர்களின் பார்வைக்கு இப்போதுதான் கொண்டுவரப்பட்டுள்ளது என்ற அவரது பேச்சைக் கேட்டபோது ஆச்சரியமாக இருக்கின்றது. சில மந்திரிகளை அழைத்துக் கோரிக்கைகள் விடுத்ததெல்லாம் என்னவாயின? நமது தலைவர்கள் இதுநாள்வரை என்ன செய்துள்ளார்கள்? பிரதமருக்குத் தெரியாமலேயே கல்லுடைப்பை நிறுத்திவிடவும், பொது விடுமுறை பெறவும் முயற்சி செய்துகொண்டிருந்தார்களோ?

பல்கலைக்கழகங்களில் நமக்குக் கிடைக்கவேண்டிய இடங்கள் கிடைப்பதில்லை. ஆண்டுதோறும் மந்திரிகளின் சந்திப்புக்களுக்குப் பின்னும், பல அறிக்கைகள் விடுக்கப்பட்ட பின்னும் ஏதோ சில இடங்கள் கிடைக்கின்றன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் நமக்குப் போதிய பங்கு தரப்படவில்லை. இவற்றுக்கெல்லாம் எப்போதுதான் விடிவுகாலம் பிறக்குமோ?

-வி. இ. மாரிமுத்து,
சுங்கை திங்கி,
தஞ்சோங் மாலிம்.

●

மலேசிய நாட்டிலே தமிழ் செழித்து வளரவேண்டுமென்றால் தமிழ் மாணவர்களிடம் தமிழ்ப்பற்று அதிகரிக்க வேண்டும். இதனை அரசியல்வாதிகளாலோ சீர்திருத்தவாதிகளாலோ செய்ய முடியாது. இந்நாட்டில் தமிழ் வாழ, தமிழாசிரியர்கள்தாம் முக்கிய காரணமாக இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்கள் தத்தம் கடமைகளை நன்கு உணர்ந்து பாடுபடவேண்டும். தான் முன்னேற நினைப்பது தவறில்லை. ஆனால் தான் மட்டும் முன்னேறிவிட்டால் போதும் என்று நினைப்பதுதான் தவறு! மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபடவேண்டும்.

இக்காலத்தில் தமிழ் மாணவர்களிடையே தமிழின் தரம் மிகவும் குறைந்துள்ளது. இதற்கு நாம் மற்ற பல காரணங்களைக் கூறிச் சாக்குப்போக்குச் சொல்வதை விட ஒவ்வொர் ஆசிரியரும் குறையைப் போக்க முயலவேண்டும்.

-சாந்தி முத்து,
பெட்டாலிங் ஜெயா.

●

கடந்த தலைமுறையைக் காட்டிலும் இன்று எத்தனையோ சதவிகிதம் அரசியல் விழிப்புணர்ச்சி நம் தமிழர்களிடையே அதிகரித்திருப்பது பெருமைப்பட வேண்டிய ஒன்றே.

இந்த நல்ல தருணத்தைப் பயன்படுத்தி ம. இ. கா. தலைமையகம் தன் கிளைகளுக்கும் அதன் செயலவையினருக்கும் செயல் வழிமுறைகளைப் போதிக்குமானால் வீண் மாயாஜாலப் போட்டிகளும், பதவிப் போராட்டங்களுமின்றிச் சமூகம் முன்னேற வழி கிட்டும்.

இன்று இருப்பதுபோல் ஒரு கிளையினுள் பல பிரிவுகளும், ஒரு பிரிவில் பல குழுக்களுமாகப் பெருகினால் சமூக முன்னேற்றத்தைப் பற்றி ம. இ. கா. பேச முடியாது போய்விடும்.

பிற சமூகங்கள் காரிய சாதனைகளில் நம்மைவிட எவ்வளவோ தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன என்பதற்கு உதாரணமாக போர்ட்டிக்சன் பட்டினத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

இங்கு அம்னோ, ம. சீ. ச., ஆகிய அமைப்புக்கள் இரண்டும் தங்களுக்கென்று கட்டிடங்கள் எழுப்பிவிட்டன. ஆனால் நாமோ இன்னமும் ம. இ. கா. தேர்தல்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றோம்.

–'போர்ட்டிக்சன் பட்டினத்தார்'
போர்ட்டிக்சன்.

வாசகர் வட்டத்திற்கு எழுதுவோர் தனிப்பட்ட முறையில் எவரையும் புண்படுத்தாமல் (நூறு சொற்களுக்குள்) எழுத வேண்டும்.

"வாசகர் வட்டம்" பகுதிக்கு மதிப்பளித்துச் சிரமம் பாராது விளக்கமளித்த மதிப்புக்குரிய செனட்டர் எம். மகாலிங்கம், மகா மாரியம்மன் கோவில் தேவஸ்தானத் தலைவர் திரு. செ. சொக்கலிங்கம், மலேசியத் தொலைக்காட்சி அதிகாரிகள் ஆகியோருக்கு எங்கள் நன்றி.

பல் சொத்தை, பயோரியா போன்ற பல் வியாதிகளைத் தவிர்க்க யாவரும் பற்களை நன்ருகத் துலக்கவேண்டும். உடல் சுகாதாரம் பேணுவதுபோல் பற்களின் சுகாதாரத்தையும் நன்ருக அறிந்த நம் முன்னேர்கள் பற்களின் முக்கியத்துவத்தை அறிவுறுத்த "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்ற பழமொழியைக்கூறி வந்தார்கள்.

பச்சைக் காய்கறிகள், பழவகைகள் இவற்றை நன்ருக மென்று சாப்பிட்டால் பற்கள் தாளுகவே துலக்கப்படுகின்றன. இவ்வித பழக்கம் உள்ளவர்களுக்குப் பல் வியாதிகள் வருவதில்லை. இன்றைய நாட்களில் மிருதுவான, பற்களில் ஒட்டிக் கொள்ளும் உணவுப் பதார்த்தங்களைத் துப்புரவாக நீக்கத் தேங்காய்ப் பத்தை, பச்சைக் கேரட் போன்றவற்றை வாயின் இரு பக்கங்களிலும் நன்ருக மென்று சாப்பிட்டால் பற்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றன. இஃது இயற்கையோடு இணைந்து இயங்கும் பழக்கமாகும்.

எனினும் காலையிலும் மாலையிலும் பற்களைக் கவனமாகத் துலக்கும் பயிற்சியை அறிந்து கொள்வது நலம். இன்றைய நாளில் நவீன பல் துலக்கிகளை (பிரஷ்) உபயோகிப்பது சாலச் சிறந்தது. வேண்டிய அளவில் FLOURIDE கலந்த பற்பசையை எடுத்துக் கொள்ளுங்கள். பல்துலக்கியினுல் சுற்றுமுறையைக் கொண்டு பல் துலக்குவது நல்லது. அதனை விவரமாகக் காண்போம்.

நவீன பல்துலக்கியின் நார்கள் ஒன்று கூடிக் கட்டுக் கட்டாக உள்ளன. இந்த நார்களை, ஈறுகளின் மேல் பக்கவாட்டில் வைத்துத் துலக்கியைச் சுழற்ற வேண்டும். இவ்விதமாகச் செய்வதால் ஈறுகள் அழுத்தப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. பின், பற்களின் மேல் நார்கள் சுற்றப்படும்போது இரு பற்களுக்கும் நடுவே இடைவெளியில் தங்கி இருக்கும் உணவுப் பதார்த்தங்கள் துப்புரவாகத் துலக்கப்படுகின்றன. இவ்விதமாத ஓரிடத்தில் ஐந்து முறை செய்தபின் மற்றப் பற்களைத் துலக்கவேண்டும்.

மேல்தாடைப் பற்களைத் துலக்கும்போது ஈறின் மேல் வைத்த நார்களைக் கீழ்ப்புறமாகச் சுழற்றவேண்டும். அதுபோல் கன்னப் பக்கத்திலும், அன்னப் பக்கத்திலும் துலக்க வேண்டும். கீழ்த்தாடையில் ஈறு மேல் வைத்த நார்களை மேல்புறமாகச் சுழற்றவேண்டும். பற்களின் கன்னப் பகுதியிலும் நாக்குப் பகுதியிலும் இவ்விதமாகச் செயல்படவேண்டும். கீழ்த் தாடையிலும் மேல் தாடையிலும் உள்ள முன் பற்கள் வளைவு அமைப்பில் இருப்பதால் துலக்கியின் நுனிப் பாகத்தைக் கொண்டு முன்கூறியபடி செய்யவேண்டும்.

இவ்விதமாகப் பற்களின் பக்கங்களைத் துலக்கிய பின் அரைக்கும் பகுதியைப் பல் துலக்கியின் நார் நுனிகளை வைத்து அசைவு கொடுத்தால் அங்குள்ள மேடு பள்ளங்களில் தங்கியுள்ள உணவுப் பதார்த்தங்கள் நீக்கப்படும்.

இவ்விதமாகச்சுற்றுமுறைப் பல் துலக்குதல் பழகுவதற்கு முதலில் சிறிது கடினமாக இருந்தாலும் பழகப்பழக எளிதாகச் செய்ய முடியும்.

கடைகளில் பல் துலக்கிகள் மூன்று வகையாகக் கிடைக்கின்றன. HARD- கடினமான, MEDIUM - மத்திமமான, SOFT- மிருதுவான, நார்கள் கொண்ட பல் துலக்கிகளே அவை. கடினமான நார்களைக் கொண்ட பல் துலக்கியை உபயோகித்தால் ஈறுகள் உறுத்தப்பட்டு வலுவிழந்துவிடும். பற்களும் தேய்வுறும். ஆகையினுல் கடின நார்களைக் கொண்ட பல் துலக்கிகளை உபயோகிக்கக் கூடாது. மத்திம நார்கள் கொண்ட பல் துலக்கிகளைக் கோடை காலத்திலும், மிருது நார்களைக் கொண்ட பல் துலக்கிகளைக் குளிர் காலங்களிலும் உபயோகிப்பது நல்லது தட்பவெட்ப நிலைமைக்கு ஏற்ப இந்த நார்கள் மிகவும் கடினமாகவோ மிருதுவாகவோ மாருமல் மிதமாக இயங்கிப் பற்களைத் துலக்குகின்றன.

பெரியவர்களுக்குப் பெரிய பல் துலக்கியும் சிறுவர் சிறுமிகளுக்குச் சிறிய பல் துலக்கியும் பாலர்களுக்கு மிகச் சிறிய பல் துலக்கிகளும் கடைகளில் கிடைக்கின்றன.

இந்த நவீன துலக்கிகள் சுமார் முப்பது முதல் நாற்பது நாட்கள்வரை திறம்பட உழைக்கும். இதை நாள்பட உபயோகிப்பதால் நார்கள் கட்டவிழ்ந்து, மடிந்து, வளைந்து, தேய்ந்து பழுதுபடும். இப்படிப் பட்ட பல் துலக்கிகளைத் தொடர்ந்து உபயோகித்தால் ஈறுகளுக்கும் பற்களுக்கும் கேடுகளை விளைவிக்கும். ஆகையினுல் பல் துலக்கிகளை நாற்பது நாட்களுக்கு ஒருமுறை மாற்றி விடுவது நல்லது.

கவனக் குறைவினுலும், அறியாமையினுலும் சாதாரணமாக பல் துலக்கியைப்பற்களின் மேல் முன்னும் பின்னுமாக அசைவு கொடுத்துப் பற்களைத் துலக்குவார்கள். இது சரியான முறையல்ல.

ஆகையினுல் சுற்றுமுறையைக் கடைப்பிடிப்பதால் ஈறுகளுக்கும் பற்களுக்கும் சிதைவு ஏற்படாமல் பற்கள் துலக்கப்படுகின்றன. கைவிரலையும், பற்பொடியையும் கொண்டு பற்களைத் துலக்கும் பழக்கம் நம் நாட்டில் சாதாரணமாக உள்ளது. இவையிரண்டும் தவறுனவை. கைவிரலால் பற்களின் இடைவெளியிலும் அரைக்கும் பாகத்திலும் துப்புரவாகப் பல் துலக்க முடியாது. ஆகையினுல் பற்களின் சுகாதாரம் பாதிக்கப்பட்டு நோய்ப்பட ஏதுவாகிறது.

பற்பொடி எவ்வளவு மிருதுவாக இருப்பினும் பற்களில் தேய்வு ஏற்படுத்திவிடும். பற்களின் சிகரம் தேயுமானுல் பற்களின் நலம் பாதிக்கப்படுகிறது. ஆகையினுல் பற்பொடி கொண்டு பற்களைத் துலக்கக்கூடாது. இன்றைய சூழ்நிலையில் பல் துலக்கி பற்பசைகளைக் கொண்டு துலக்குவதுதான் சாலச் சிறந்த முறையாகும்.

பற்கள் துலக்கும்போது செலவிடும் நேரம் காலை இரண்டு நிமிடமும், இரவு இரண்டு நிமிடமும் தான் ஆகும். ஆகையினுல் எல்லாரும் கவனத்துடன் நல்ல முறையில் பற்களைத் துலக்குவீர்களேயானுல் உங்களின் முத்துப் போன்ற பற்களை ஆரோக்கியமாகப் பாதுகாக்கலாம்.

# உங்கள் பற்கள்

பேராசிரியர்
ஜே. ஜி. கண்ணப்பன்
தமிழ்நாடு

**விதிகள்:**

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஓரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ.90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக்கார்டில் உள்ளதனபடியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்"தில் பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்து கொள்ள இயலாது.


9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-4-1978.

11. கூப்பன்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman,
[2nd Floor]
P. O. Box. 2066
Kuala Lumpur.

# தமிழறிவுப் போட்டி - 11




## பரிசு $190 முடிவுநாள் 10-4-78

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

______________________

______________________

கையொப்பம்.

**இடமிருந்து வலம்:-**

1. இந்து சமயத்தின் இதிகாசங்களில் ஒன்று.
6. அரைக்க உதவும்.
7. மேகம்.
8. ஒரு பயிர்.
9. தலைகீழாகப் பார்த்தால்— உண்மையில் இது இருக்கிறதா இல்லையா. தெரியாது. ஆனாலும் இந்த இடத்திற்குப் போக அஞ்சுபவர்கள் உண்டு.

**மேலிருந்து கீழ்:-**

2. பத்து மைல் தூரம்.
3. மன்மதன் துணைவி.
4. "நைடதம்" நூலின் நாயகி.
5. யானைக்குப் பிடிப்பது தலைகீழாகி விட்டது.
6. வெள்ளைப் பறவை.
7. குரங்கு மாறிக் கிடக்கிறது.

# 15 நாள் பலன்

மார்ச்சு 11 முதல்
25 வரை

## கும்பம் (ஜன 20 — பிப். 18)

ஊர் வம்பு அதிகம் வரும். எதிரிகளின் தொல்லை அதிகமாகலாம். பொறுமையும் சமயோசிதப் புத்தியும் உங்களுக்கு இருந்தால்தான் சமாளிக்க முடியும். பொருளாதார நிலைமை சராசரியாக இருக்கும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. உடலாரோக்கியம் நல்லபடி இருக்கும்.

## மீனம் (பிப் 9- மார்ச்சு 20)

திருமண முயற்சிகள் கைகூடி வரும். எதிர்பார்த்திருந்த செலவுகளைவிட எதிர்பாராத செலவுகள்தாம் அதிகமாக வரும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றும். நண்பர்கள் உங்களுடன் ஒத்துப்போக மாட்டார்கள். சக தொழிலாளர்கள் ஆதரவு கிடைக்கும். பெரியோர்களின் ஆலோசனைகளால் நல்லன விளையும்.

## மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

சாதிக்காரன் கால்களில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழுந்து விடுங்கள். அது கொஞ்சம் நிம்மதியைத் தரும். பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். ஆடம்பரச் செலவை அதிகமாக்கினால் பணத்தட்டுப்பாடு மட்டுமென்ன, எல்லாத் தட்டுப்பாடுகளும் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு.

## ரிஷபம் (ஏப். 21 - மே 20)

சந்திரன், சூரிய ஒளியால் பிரகாசிப்பதைப் போல நீங்கள் உங்களின் நண்பர்களால் பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே நண்பர்களுக்கு நல்ல பிள்ளையாக இருங்கள். நீங்கள் பிரம்மசாரியாக இருந்தால் விரைவில் திருமணம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். ரேஸ், லாட்டரி போன்றவற்றில் கொஞ்சம் பணம் கிடைக்கும் சாத்தியம் உண்டு.

> வான்வெளியில் 70 நாட்களாக வலம் வந்து கொண்டிருக்கும் ரஷிய அண்டசாரதிகளான யூரி ரோமானென்கோவும் ஜியோர்ஜி கிரெச்கோவும் பூமியில் இணைக்க முடியாத உலோகங்களை வான்வெளியில் இணைக்கப் பரிட்சார்த்தமாக முயன்று வருகின்றனர்.

## மிதுனம் (மே 21 - ஜூன் 20)

நீங்கள் "செவிடு செவிடு" என்றால் மற்றவர்கள் அதைக் "குருடு குருடு" என்பார்கள். ஆகவே, எதிலும் பேசாமல் "கம்" மென்று இருந்து விடுங்கள். பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபட நேரும். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருங்கள். வீடு, கல்யாணம் சம்பந்தப்பட்டவற்றில் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

## கடகம் (ஜூன் 21- ஜூலை 20)

வராத கடன் வந்து சேரும். கடிதப் போக்குவரத்தினால் நன்மை உண்டு. வழக்குகளில் வெற்றி உங்களுக்குத்தான். நண்பர்கள், உறவினர்கள் முதலியோரிடம் உங்களுக்குச் செல்வாக்கு ஏற்படும். காதல் விவகாரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்ற தருணம் இதுவல்ல. கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## சிம்மம் (ஜூலை 21 - ஆக 12)

பகைவர்கள் நண்பர்களாவர். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். தொலைபேசி, கடிதம் மூலமாக வரும் செய்திகள் நல்லவையாக இருக்கும். ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்க வேண்டி வரும். உடலாரோக்கியம் பாதிக்கப்படலாம். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. மற்றவர்களின் யோசனையைக் கேட்பதைக் காட்டிலும் சொந்த யோசனையுடன் செயல்படுங்கள்.

## கன்னி (ஆக 22 - செப். 22)

எல்லார்க்கும் நல்ல பிள்ளையாக இருக்க விரும்பும் போக்கு இப்போதைய சூழ்நிலையில் உங்களுக்கு ஏற்றதல்ல. பண விஷயத்தில் தகராறு ஏற்பட வாய்ப்புண்டு. என்றாலும் உங்கள் பக்கம் சாதகமாகவே அது அமையும். உத்தியோக உயர்வு கிட்டலாம். தெய்வபக்தி நிரம்பியவர்களுக்கு நல்ல நாட்கள் இவை.

## துலாம் (செப். 23-அக். 22)

"ஊரில் கல்யாணமாம், மார்பில் சந்தனமாம்" என்பதைப் போல் பொதுக் காரியங்களை இழுத்துப் போட்டுக் கொள்வீர்கள். கூட்டுத் தொழில் அபிவிருத்தி அடையும். சக தொழிலாளர்களின் உதவி கிட்டும். மேலதிகாரிகளின் தயவுண்டு. தற்போதைக்கு உங்கள் "மணிப் பர்ஸ்" வானம் பார்த்த பூமியல்ல. குடும்பத்தில் அமைதி நிலவும்.

## விருச்சிகம் (அக். 23-நவ. 22)

நண்பர்கள் பகைவர்களாகும் சாத்தியம் உண்டு. பெண் விவகாரங்களில் சிக்கல் ஏற்படும். பொருளாதார நிலை அத்துணை திருப்திகரமாக இருக்காது. பெரியோர்களின் உதவியினால் உங்களுக்குச் சில பிரச்சனைகள் தீரும். எதிலும் கையெழுத்திடுவதில் கவனமாக இருங்கள். கூட்டுத் தொழில் நன்மை தரும்.

## தனுசு (நவ. 23 - டிச. 20)

எந்தப் பிரச்சனையிலும் உங்களின் கணிப்புத் தப்பாகவே அமையலாம். ஆகவே, நெருங்கிய நண்பர்கள், பெரியோர்கள் ஆலோசனைகளைக் கேளுங்கள். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும் சாத்தியம் உண்டு. வெளியூர்ப் பிரயாணங்களும் ஏற்படும். மனைவி மக்கள் வழியில் வைத்தியச் செலவு உண்டாகும். ரேஸ், லாட்டரி ஈடுபாட்டினால் ஏற்படுவது இழப்பே!

## மகரம் (டிச. 21- ஜன. 19)

உங்களின் முயற்சிகள் பழுக்கும் நிலையிலுள்ள காய் மாதிரி இருக்கின்றன. நினைத்த காரியம் எல்லாம் கைகூடும் என்றில்லாவிட்டாலும் சில காரியங்கள் நிறைவேறும். வெளியூரிலிருந்து நல்ல செதி வரும். உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரால் நன்மை உண்டு. செய்தொழிலில் எச்சரிக்கை தேவை.

—தஞ்சை நகுலன்

# இலவச வகுப்பு

பல்கலைக் கழகங்களில் பயில விரும்பும் கோலாலம்பூர் - பெட்டாலிங் ஜெயா வட்டாரத்தைச் சேர்ந்த இந்திய மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

பெட்டாலிங் ஜெயா பி. பி என். மாணவர் விடுதியில், மலாயா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் எச். எஸ். சி. மாணவர்களுக்குப் பொருளாதாரம், வரலாறு. தமிழ், மலாய் பூமிநூல் முதலான பாடங்களை இலவசமாகப் போதிக்கின்றனர்.

கீழ்க் காணும் வகையில் விரிவுரையாளர்கள் பாடங்களை நடத்துவர்.

பொருளாதாரம்: டாக்டர் தில்லைநாதன், டாக்டர் முகமது அரிஃப். வரலாறு: டாக்டர் தம்பிராஜா, டாக்டர் சூசைநாதன், திரு. இராஜேந்திரன். தமிழ்: டாக்டர் புலவர் அருணாசலம், திரு. இராஜூ. மலாய்: திரு. பழனியப்பன். பூமி நூல்: திரு, கிருஷ்ண பகவான் (கல்வியமைச்சின் . பாடத்திட்டப் பகுதியைச் சேர்ந்தவர்), திரு. அப்துல் கபூர் (அரசாங்க வாணிக அமைச்சு அதிகாரி), டாக்டர் ஸ்ரீநந்தா.

பல்கலைக் கழகத்தில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை உயர அவர்கள் எச். எஸ். சி. தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம் என்னும் கருத்தில் இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

25.2.78 லிருந்து சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 1.30 முதல் பி.பி.என். மாணவர் இல்லத்தில் நடைபெறும் இவ்வகுப்பில் பயில விரும்பும் எச். எஸ். சி. மாணவர்கள், அதற்கான மனுக்களை பி பி. என். இல்லத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# உசிதம்

சாமுவேல் ஜான்ஸன் இங்கிலாந்து நாட்டின் பிரபல ஆசிரியர். அவர் குணசீலர்,. தயை உள்ளம் படைத்தவர், மேதாவி; ஆனால் நித்திய தரித்திரர்.....

இப்படி இவர் தரித்திரத்தில் தவிப்பது அவருடைய அன்பர் ஒருவருக்குத் தாங்கவில்லை. ஜான்ஸனின் காலணிகள் தேய்ந்து ஓரங்கள் பிய்ந்து போயிருந்தன. அந்த அன்பருக்கு ஜான்ஸனிடம் நேரிடையாக ஒரு ஜோடிக் காலணிகள் கொடுக்க பயம். அவர் ஒரு நாள் இரவு ஜான்ஸனின் படுக்கை அறையில் ஒரு ஜோடி புதுக்காலணிகளைக் கட்டித் தொங்க விட்டு விட்டுப் போய்விட்டார்.

காலையில் புதுக்காலணிகளைக் கண்டார் ஜான்ஸன். உடனே அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "யாரடா அவன், என் ஏழ்மையைக் கண்டு ஏளனம் செய்யத் துணிந்தவன்?" என்று கூறிக் கொண்டு கொதித்து எழுந்தார். காலணிகளை அறையின் வெளியே கைக்கெட்டும் உயரத்தில் கட்டி "இந்தக் காலணிகளைத் திருட்டுத்தனமாக இங்குக் கொண்டுவந்து வைத்தவனை இதனாலேயே அடிப்பது உசிதம்" என்று ஒரு துண்டுக்காகிதத்தையும் எழுதி வைத்து விட்டார்.

—கே. எஸ். எம். ஹாமீம் முகம்மது,
சபாக் பெர்ணம்

# திட்டம்

"மாடு வளர்க்கும் திட்டம் என்பதன் உண்மையான அர்த்தம் என்ன? உங்க வீட்டு மாடு பக்கத்து வீட்டு இராமசாமியின் கஞ்சியைக் குடித்துவிட்டால் அது மாடு வளர்க்கும் திட்டம் ஆகாது. இராமசாமியின் கஞ்சியைக் குடிக்கும் திட்டம் ஆகும்."

-ஒரு தலைவர் உரையிலிருந்து
-ந. பாலகிருஷ்ணன்,
சுங்கை சோ தோட்டம்

# வீட்டு வைத்தியம்

சிறு குழந்தைக்கு விக்கல் வந்தால் ஒரு கிளாஸ் வெந்நீரில் ஒரு கரண்டி தேன் விட்டுக் கலக்கிக் கொடுங்கள். விக்கல் நின்று விடும்.

கடுமையான தலைவலி வந்தால் 3 வெற்றிலை, 3 கிராம்பு வைத்து மை போல அரைத்துக் காதுக்கும் கண்ணுக்கும் பக்கத்தில் பற்றுப் போட்டால் தலைவலி மறைந்து விடும்.

பசலைக் கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து அதிகம். இரத்த சோகை நோய் உள்ளவர்கள் இந்த பசலைக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

தாங்க முடியாத இடுப்பு வலியா? இடுப்பைச் சுற்றித் தேய்க்க ஓர் எண்ணெய் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். எண்ணெய் செய்யும் விதம்: ஒரு கிளாஸ் வேப்பெண்ணெய்யை ஒரு சட்டியில் ஊற்றி ஒரு பிடி நொச்சி இலையை அதில் போட்டு ஒரு முழுப் பூண்டு, ஒரு மஞ்சளைப் போட்டுக் காய்ச்சுங்கள். பிறகு இறக்கி வைத்து ஆற விடுங்கள். வடிகட்டி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளுங்கள். இடுப்பு வலி வரும்போது இடுப்பைச் சுற்றித் தேய்த்து வந்தால் இடுப்பு வலி பறந்து போகும்.


சர்க்கரை நோய் உள்ளவர்கள் பச்சை நெல்லிக்காயை இடித்துச் சாறு பிழிந்து அதில் ஒரு கரண்டியும், தேன் ஒரு கரண்டியும், கலந்து அதில் மஞ்சள் தூள் சிறிது தூவி வெந்நீர் விட்டு ஓர் அவுன்ஸ் தினசரி வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் சர்க்கரை வியாதி கட்டுப்படும்.

புளியங் கொழுந்து உடல் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. புளியங் கொழுந்தை தண்ணீர் விட்டு நன்றாக வேக வைத்துப் பருப்புச் சேர்த்துக் கடைந்து உணவுடன் சாப்பிடலாம். இதனால் கண் நோய் குணமாகும். உடம்பில் சொறி சிரங்கு இருந்தால் புளியங்கொழுந்து அதைப் போக்குகிறது.

காலில் பித்த வெடிப்பு உள்ளவர்கள் இஞ்சிச் சாறும் எலுமிச்சம் பழச்சாறும் கலந்து தினசரி சாப்பிடுங்கள். பித்தம் குறையும். படுக்கப் போகும் போது காலில் பித்த வெடிப்பு உள்ள இடத்தில் மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்துப் பத்துப் போடுங்கள். பித்த வெடிப்பு மறைந்து விடும்.

மா. கு. விசுவநாதன்
-இரஞ்சிதம்
செமினி

மனிதனுக்குச் சாவு ஆறிலும் உண்டு; நூறிலும் உண்டு தான். அதற்காக அற்பர்களின் ஆசைகளுக்கெல்லாம் பறிபோவதானால் அந்த சாவுக்குத்தான் என்ன மதிப்புண்டு? இந்த மனிதப் பிறவிக்குத்தான் என்ன அர்த்தமுண்டு?



# உண்மைகள்

சா.ஆ.அன்பானந்தன்

## 4. மனப்போர்

சற்றைக்கெல்லாம் வானத்தில் மின்னல் வெட்டியது. இடி முழங்கிது. மேகங்கள் கடைசி நேரத் தொண்டர்களைப் போலப் பரபரத்தன. அதன் விளைவு வானத்திலிருந்து பூமி வரை வெள்ளிக் கம்பிகளை இறக்கிவிட்டதுபோல் மழை நீர் நேராக மண்ணில் பாய்ந்தது.

நாங்கள் நனைந்தபடியே வீடு திரும்பினோம். பிரிவால் சூடேறிப் போயிருந்த எங்களுக்கு இந்த மழை ஆறுதல் சொல்வதுபோல் இருந்ததால் நாங்கள் அந்த மழையினின்று தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை.

நாங்கள் மட்டுந்தானா...? இல்லை! சயாமுக்குப் போகிறவர்களை அனுப்பிவைக்க வந்த அனைவருமே மழையில் நனைவதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. பிரிவால் அழுதுபுலம்பும் எங்களைப் பார்த்துத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் வானமா தேவியும் கண்ணீர் விடுகின்றாளோ என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது. சாமிக்கும் பொறுக்கவில்லை. ஆதலால்தான் மழை எனும் கண்ணீரைச் சாமி உகுக்கிறார் என்று நாங்களெல்லாம் எண்ணினோம்.

தம்பி வரதனைத் தூக்கிக் கொண்ட அம்மா, என்னையும் பெரிய அக்காள் தனத்தையும், சின்ன அக்காள் பாக்கியத்தையும் பிடித்துக்கொண்டே நடந்தாள்.

மீண்டும் அந்த இறக்கம். இந்த இறக்கத்தைக் கடந்து வரும் ஏற்றத்தில் ஏறினால் எங்கள் "லய"த்துக்குப் போக முடியும். மேலே பெய்த மழை நீர், இறக்கத்தில் நடைபாதையில் ஓடிக்கொண்டிருந்தது.

ஒருவர்பின் ஒருவராக மிகக் கவனமுடன் அடி எடுத்து வைத்து இறங்கினோம். ஆயிற்று. பாலம் வர இன்னும் கொஞ்சதூரமே... திடுமென கால் வழுக்கிவிடவே நான் அம்மாவின் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டுபோய்ப் பாலத்தடியில் வீழ்ந்தேன்.

"அய்யாவு", என்றலறிய அம்மாவும் அடுத்த கணமே கால் வழுக்கிவிட கீழே வந்து விழும்போது அம்மாவின் பிடியிலிருந்து பெரிய அக்காவும் சின்ன அக்காவும் கூட வந்து கீழே விழுந்தனர்.

களிமண் பாதையாதலால் கவனமுடன் நடந்தும் கால் வழுக்கிவிடுகின்றது. "சரியில்லாத பாதையில் எத்தனை கவனமுடன் நடந்தபோதும் வழுக்குவது எதிர்பார்த்த ஒன்றாகிவிடுகின்றது."

நல்லவேளை! பலமாக எவருக்கும் அடிபடவில்லை. ஒரு வழியாக எழுந்துவிட்டோம். கைகால்களில் கொஞ்சம்போல சிராய்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. விழும்போது கைகளைத் தரையில் ஊன்றியதால் இந்தச் சிராய்ப்பு.

மீண்டும் ஏற்றம். அதுவும் களிமண் பாதைதான். லயக் காட்டிலிருந்து திரண்ட தண்ணீர், இறங்கும் நடைபாதையில் வெள்ளம்போல ஓடிவந்து கொண்டிருந்தது. இறங்கும்போது வழுக்கிக் கீழே வந்து சேர்ந்துவிட்டோம். ஆனால் ஏறும்போது வழுக்கினால் மேலேயா போகமுடியும்?

பிடிமானமில்லாத வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்களைப்போல் நாங்கள் பிடிமானம் ஏதுமில்லாத நிலையில் சொந்தக் கால்களை மட்டும் நம்பியே ஏறினோம். பல சிரமத்துக்கிடையே நாங்கள் மிக மிகக் கவனமுடன் ஏறினோம். இந்தமுறை எவரும் வழுக்கி விழாமல் சமாளித்துக் கொண்டு மேலே சென்றடைந்தோம். முழுக்க நனைந்திருந்ததால், குளித்தோம். நனைந்த துணிகளைப் பிழிந்து கொண்டோம். வேறு ஆடைகளை மாற்றிக் கொண்டோம். இது கொஞ்ச நேரத்தில் முடிந்துவிட்ட விசயம். ஆனால் புண்பட்டு நனைந்து போன உள்ளத்தை எப்படிப் பிழிந்து உலரவைக்கமுடியும்?

நான் மேக்கடையில் குந்தியிருந்தபடியே கொட்டும் மழைநீரை இமைகொட்டாமல் பார்த்

துக் கொண்டிருந்தேன். செம்மண்ணில் விழும் நீர் அந்த நிறத்தையே அடைந்து கலந்து உருண்டோடி "அல்லூரில்" நிறைகிறது. தேங்கிய நீரில் ஏற்படும் எண்ணற்ற நீர்க்குமிழிகள் தோன்றித் தோன்றி உடைந்தவண்ணமாகவே இருக்கின்றன. நினைத்தது நினைத்த மாத்திரத்திலேயே மறைந்துவிடுவதுபோல அந்த நீர்க் குமிழிகள் தோன்றிய வேகத்திலேயே உடைந்து போய்விடுகின்றனவே!

எத்தனை எத்தனையோ நினைப்புக்கள்; திட்டங்கள்; கட்டிய மனக்கோட்டைகள் அத்தனையும் இன்று அந்த நீர்க் குமிழிகளைப்போல உடைந்துவிட்டனவோ...

"அய்யாவு"— அம்மாவின் அழைப்புக் குரல் கேட்டுக் கீழே இறங்கிப் போனேன். சுடச்சுட "வரக்கோப்பி" குவளையில் இருந்தது! தம்பி வரதன் அம்மாவின் மடியில் குந்தியிருந்தான். பெரியக்காள் கோப்பி கலக்கிக் கொண்டிருந்தாள். சின்ன அக்காள் அடுப்பைமுறைத்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அதுபோல் அக்காவின் நெஞ்சும் எரிந்து கொண்டிருந்ததோ! இருக்கும், இருக்கும்! எங்கள் பிரியமான தந்தையை அல்லவா நாங்கள் பிரிந்திருக்கிறோம்.

அம்மா அவிழ்த்துவிடப்பட்ட கூந்தலோடு அமர்ந்திருந்தாள். அவள் விழி சிவந்திருந்தது. அப் பார்வையில், வெறித்த உணர்ச்சி குடிகொண்டிருந்தது. அப்பா திரும்பும் வரை கூந்தலை முடிக்கப்போவதில்லை போல் அம்மா உறுதியோடு இருந்தாள். அடிக்கடி எங்களை ஒருவர் ஒருவராகப் பார்த்தாள். இவர்களைக் குறையில்லாமல் காப்பாற்றவேண்டுமே என்கிற பொறுப்புணர்ச்சி அவளின் பார்வையில் தெறித்தது.


அப்பா எங்கே போய்விட்டார்? சயாமுக்குத் தானே! வேலைக்குப்போனவர் வீடு திரும்பமாட்டாரா என்ன! ஏன் இந்தக் கலக்கம்? ஏனிந்தத் தவிப்பு?

நான் அடிக்கடி இப்படிச் சிந்திப்பதுண்டு. ஆனால் அம்மாவின் நடவடிக்கைகளில் கிஞ்சிற்றும் அந்தச் சமாதான உணர்வு வெளிப்படவில்லை.

சத்தியவான் உயிரை எமதர்மன் கொண்டுபோக, கணவன் உயிரை மீட்காமல் விடமாட்டேன் என்று சாவித்திரி ஆவேசம் பெற்றிருந்ததைப் போல, அப்பாவை விடுவிப்பதில் சாவித்திரியாகமாறிவிடவேணடுமென அம்மா நினைத்தாள் போலும்.

சப்பானியர்கள் வெள்ளையர்களைத் துரத்திவிட்டு ஆள வந்தவர்கள் ஆளவேண்டியது தானே! ஏன் வாழும் மக்களை எல்லாம் இப்படிப் பலவந்தப் படுத்தி வேலைகளுக்கு அழைத்துப் போகவேண்டும்?

கேள்விப்பட்டவரை அவர்கள் பயங்கரமானவர்கள் என்றும் அடிக்கடி பட்டாக்கத்தியை மனிதர்களின் கழுத்துகளில் தான் தீட்டிக்கொள்கிறார்கள் என்றும் கேள்விப்படும்போது



"ஐயோ! என் அப்பா...!"

அம்மாவின் கவலைக்கு ஞியாயம் உண்டு. பிறக்கிற மனிதனுக்குச் சாவு ஆறிலும் உண்டு; நூறிலும் உண்டுதான். அதற்காக அற்பர்களின் ஆசைகளுக்கெல்லாம் பறிபோவதானுல் அந்தச் சாவுக்குத்தான் என்ன மதிப்புண்டு? இந்த மனிதப் பிறவிக்குத்தான் என்ன அர்த்தமுண்டு? ஒரு புலியின் வாயில் ஓர் ஆட்டைப்போல் மிருக வாழ்வு வாழ்வதற்கு மனித வாழ்க்கை என்கிற பெயர் எதற்கு?

புலிக்குத்தெரிந்தது உறுமல் மட்டும்தான்; சப்பானியர்களுக்குத் தெரிந்ததும் அது மட்டும்தானு? நினைக்கவே பயமாக இருந்தது...

"அம்மா!" அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அழைத்தேன்! என் குரலிலும் சத்தம் அதிகமாக வெளிவரவில்லை. மீண்டும் அழைத்தேன்! சட்டென்று தலைநிமிர்ந்த அம்மா என்னைப் பார்த்தாள்!

"கோப்பி குடிம்மா! ஆறிப் போவுது. மழைக்கு நல்லா இருக்கும்!" என்று சொல்லிய நான் என் கோப்பியை அம்மாவிடம் நீட்டினேன். நான் நீட்டிய கோப்பியை அம்மா வைத்த விழி எடுக்காமல் பார்த்தாள்! சிறிது நேரம் அப்படியே கடந்தது மீண்டும் "அம்மா, கோப்பி குடிம்மா..." என்று அம்மாவை உசுப்பினேன்...

## திலகம்

பசு ஒன்றுக்கு "பால் திலகம்" என்று பாராட்டுப் பட்டயம் வழங்கியிருக்கிறார்கள், பென்சில்வேனியா நாட்டில். காரணம் என்ன தெரியுமா? "காரின்" என்று அழைக்கப்படும் அந்தப் பத்து வயது நிரம்பிய பசு கடந்த ஆண்டு மட்டும் 50.759 பவுண்டு பால் கறந்ததாம். இந்த அற்புதப் பசுவுக்குப் பட்டமளிக்க "ரோரிங் ஸ்பிரிங்" என்ற நகரத்தில் பெரிய விழாவை நடத்தினார்கள். அதில் சுமார் 2000 பேர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தகவல்:

கம்பனூர்

வெ. தென்னரசு

ஈரக் கூந்தலிலிருந்து பொல பொலவென உதிரும் நீர்த்துளிகளைப்போல அம்மாவின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொல பொலவென உருண்டு வந்தன...

"அம்மா, அழுவாதேம்மா! அப்பா வந்துடுவாரு! நீ கோப்பி குடிம்மா" என்றேன்.


"நீ குடிடா கண்ணு...! அம்மா..." ஏதோ சொல்ல வந்தாள், தொண்டை அடைத்துக் கொண்டது... முகத்தை மூடிக் கொண்டாள்! உடம்பு குலுங்கியது! தேம்புவது கேட்டது...

நாங்கள் பதறிப் போனோம். எங்களுக்கு மறுபடியும் அழுகை வந்தது. கோப்பிக் குவளையைக் கீழே வைத்துவிட்டு முகத்தை மூடியிருந்த கைகளை வலுக்கட்டாயமாக நீக்கினேன். வரதன் எழுந்து கொண்டு அம்மாவின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகம் மாறியது. உதடுகள் அழுகைக்கு அறிகுறியாக நெளிந்தன. கண்களை கன்னச்சதை மூடிக்கொண்டது. அவள் கண்களிலிருந்து நீர் திரண்டது. அவன் அம்மாவென்று அழும்போது அவன் வாயில் எச்சில் நூல் தோன்றி அறுந்தது. நான் அம்மாவின் முகத்தை என் சின்னக் கரத்தால் துடைத்துவிட்டேன்.

அம்மா என்ன செய்வதென்றறியாமல் என்னையும் தம்பி வரதனையும் சேர்த்து இறுக அணைத்துக்கொண்டாள்.

"ஐயாவு, வரதா! அழுவாதிங்கடா! அம்மாவுக்கு அப்பா போனதிலிருந்து தாங்க முடியலடா! இப்போ அப்பா எங்க இருக்காரோ! என்ன சாப்பிடுறாரோ! என்ன நிலையிலஇருக்..." தொடர்ந்து பேச முடியாமல் மீண்டும் அம்மா அழுதாள்... மேலும் அதிகமாக உடைப்பெடுத்த கண்ணீர், அணைப்பிலிருந்த எங்களையும் நனைத்தது.

ஆமாம்! நாங்களும் இப்போதுதான் நினைக்கிறோம்! மழை பெய்கிறது. நாங்களும் நனைந்தோம். நனைந்த நாங்கள் குளித்துவிட்டு மாற்றுடையை உடுத்திக்கொண்டு சுடச்சுட கோப்பித் தண்ணியைக் குடித்துக்கொண்டிருக்கிறோம். அடுப்புச் சூட்டில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறோம். அப்பா...! அவர் நனைந்திருந்தால்- அவருக்குக் குளிர் எடுத்திருந்தால் இப்படிக் கோப்பி கிடைக்குமா? இப்படிக் குளிர்காய அடுப்பு இருக்குமா? நினைக்கும் போது எங்களுக்கும் கவலை அதிகமாகிவிட்டது.



அழுவது என்றாலும் எவ்வளவுதான் அழ முடியும்? அம்மா முகத்தைத் துடைத்துக் கொண்டு எனக்கும் தம்பிக்கும் குவளையிலிருந்த கோப்பியை எடுத்து ஊட்டினார். கொஞ்சம் குடித்த நாங்கள்,

"அம்மா, நீயும் குடி! நீ குடிச்சாதான் நாங்க குடிப்போம். இல்லாட்டி வேணும்" என்று பிடிவாதம் பிடித்தோம்.

அம்மாவும் கொஞ்சம் குடித்தாள். "தனம், நீ கோப்பி குடிச்சிட்டியாம்மா? தங்கச்சிபாக்கியம் குடிச்சுட்டாளா?" என்று பெரிய அக்காள் தனத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"நான் குடிச்சிட்டேம்மா! பாக்கியம்தான் கோப்பியவாங்கி வச்சுக்கிட்டு அடுப்பையே முறைச்சிக்கிட்டிருக்கிறு" என்றாள் அக்காள் தனம்.

"ஏய் பாக்கியம்! கோப்பிய எடுத்துக்கிட்டு இப்படி வாடி! வந்து கோப்பியக் குடி" அம்மா அழைத்ததைக் கேட்டுத் திரும்

# பெண்களின் சாதனை

எழுத்தாளர் உலகை பற்றிப் பேசும்போது நமக்கு ஆண்கள்தான் நினைவுக்கு வருகிருர்கள். இன்று உலகம் எங்கும் எல்லா மொழிகளி லும் இந்த எழுத்தை ஆளு கின்ற– ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற எழுத்தாளர் கள் ஆண்கள்தாம்!

இருந்தாலும் என்ன பயன்? ஆண்களே வியக்கும் படி இரு பெண் எழுத்தாளர் கள் பெரிய சாதனைகளைச் செய்திருக்கிருர்கள். அது என்னவாக இருக்கும்?

இங்கிலாந்து நாட்டில் 2-7-1868ல் பிறந்த திருமதி அலிஸ் பொல்மோக் என்ப வர் தனது இளமைக்கால நினைவுகளாக "பொட்ராய்ட் ஆஃப் மை விக்டோரியன் யூத்" (PORTRAIT OF MY VICTORIAN YOUTH) என்னும் நூலை 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்டார். அப் போது அவருடைய வயது நூற்றிரண்டு முடிந்து எட்டு மாதங்கள் ஆகியிருந்தது. இந் தத் தள்ளாத வயதில் நல்ல சுய சிந்தனையோடு ஒரு நூலை எழுதுவது பெரிய சாதனை தானே?

ஆனல் இன்னெரு பெண் எழுத்தாளரோ இதற்கு நேர்மாருனவர். ஜெனட் அட்ச்சின்சன் என்னும் சிறுமி தன்னுடைய ஐந்தரை வயதில் "கடற்கொள்ளைக்காரனின் கதை" என்னும் புத்தகத்தை எழுதினுள். இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற புத்தக நிறுவனம் ஒன்று அந்த நூலை 1969ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட்டது. அப் பொழுது அந்தச் சிறுமிக்கு வயது ஆறரை! நாமெல்லாம் பள்ளிக்கூடம் போக ஓடி ஒளியும் வயதில் இப்படி ஓர் சாதனை!

பார்த்தீர்களா? பெண் கள் என்ருல் ஒரேயடியாகப் பேசி கதை அளப்பார்கள் என்று சொல்லுகிருேம். ஆனல் இப்படிக் கதை எழுதி யும் சாதனை செய்வார்கள் என்று கண்டோமா?

–சிரம்பான் மணிவாசன்

---

பிய சின்ன அக்காவின முகம் கண்ணீராலும் வியர்வையாலும் ஈரமாகிக் கிடந்தது.

"வாடி கண்ணு! கிட்ட வாடி!" அம்மா எட்டிச் சின்ன அக்காவின் கையைப் பிடித்திழுத் தாள்! சின்ன அக்காவும் பக்கத் தில் வர தனது கைவிபாலேபே முகத்தைத் துடைத்துவிட்டு "என் ராசாத்தி! கவலைப்படாதி யாம்மா? படாதேடா கண்ணு! அம்மா இருக்கும்போது உங்க ளுக்கெல்லாம் என்ன கவலே? கவலைப்படாதே! இந்தக் கோப் பியக் குடிம்மா!" கோப்பியை எடுத்து அக்காவின் வாயில் வைக்கவே அக்கா அம்மாவோடு குவளையைப் பிடித்துக்கொண்டு கோப்பியை குடித்தாள், நாங்க ளும் கோப்பி குடித்தோம்.

மழையும் மெல்லக் குறைந்து தூறலாகி பின் அதுவு மின்றி அடங்கிவிட்டது. இது வரை வீசிய காற்றும் சாடிய சாறலும் ஏற்பட்ட இடியும் மின்னலும் அப்பப்பா சொல்லி முடியாது: அதைவிட கடுமை யான போராட்டங்களை எங்கள் மனங்கள் நடத்திக்கொண்டி ருந்ததால் மழையின் ஆவேசக் கூத்தை நாங்கள் பெரிதுபடுத்த வில்லை. ஆனலும் மழை நின்ற பிறகு வெளியே வந்து பார்த்தபோது ஆபீசுக்குப் போகும் இறக்கத்தில் உள்ள ஓடை நிறைந்து பாலத்தையும் மூடிக்கொண்டு ஓடிக்கொண்டி ருந்தது. அந்த இறக்கத்தில் செழித்து நின்று கொண்டிருந்த கித்தா மரம் சிலவும் அடி பெயர்ந்து கிடந்தன. மேக்கடை வீட்டுக் கீழ்ப்பகுதிகளெல்லாம் சாறலால் ஈரமாகிச் சொத சொதத்துக் கிடந்தன.

எத்தனைக் கடுமையான மழைக்கூத்து நடந்திருந்தாலும் அதன் ஆட்சி சில மணி நேரங் களிலேயே அடங்கிவிட்டது. ஆனல் அதன் விளைவு ஓடை யிலே கரை மீறிய வெள்ளம், சில மரங்கள் வேரோடு சாய்ந்த கொடுமை... சமையல் செய்யும் இடமெல்லாம் ஏற்பட்ட சாற லின் பாய்ச்சல்... இவை நடந் திருந்தன.

சப்பானியரின் போக்கும் இப்படி ஒரு நாளைக்கு... இரவும் மெல்ல மெல்லத் தோட்டத் தைக் கவிழ்ந்துகொண்டபோது வீடுகளிலெல்லாம் விளக்குகள் ஏற்றப்பட்டன.

ஆனல் இரவு கவ்விய எங் கள் மனங்களிலெல்லாம் விளக்கு ஏற்றப்படுமா?

இரவுச் சாப்பாடு... ஏதோ சாப்பிட்டோம் அம்மாவைத் தவிர...


எந்தக் களைப்பையும்விட பெரிய களைப்பு அழுத களைப்புத் தான்...எனவே எங்களின் சோர்ந்த உடல் படுக்கக் கெஞ் சியது...கண்கள் தூங்கக் கெஞ் சின...

நானும் தம்பியும் அம்மா வின் வயிற்றிலே புதைந்து கொண்டோம். அம்மாவின் இரு புறமும் பெரிய அக்காவும் சின்ன அக்காவும் படுத்துக் கொண்டனர். மண்ணெண் ணெய் விளக்கு இலேசாக எரிந்து கொண்டிருந்தது. அம் மாவின் விழிகளோ வீட்டுக் கூரையை நோக்கியபடி இருந் தன... நாங்கள் தூங்கிவிட் டோம்...ஆனல்...

"அடப்பாவிகளா! எம்புரு சன ஒண்ணும் செய்யாதிங்க! ஒண்ணும் செய்யாதீங்க! கட வுளே! கடவுளே! எம்புருசன காப்பாத்து! காப்பாத்து" என்ற அம்மாவின் திடீர் அலறல் கேட்டுத் திடுக்கிட்டு நாங்கள் எழுந்தபோது...எங்கள் உடல் களும் வெவெடத்துக் கொண் டிருந்தன.

(வளரும்)

---



"ஒரு நாளைக்கு எத்தனை மாத் திரை சாப்பிடவேண் டும்?"

"சாப்பிட வேண்டாம்! ஒவ் வொரு நாளும் மூன்று வேளை தரையில் கொட்டி ஒவ்வொன்ருகப் பொறுக்கி எடுங்கள்!"

—எஸ். வைரக்கண்ணு



# கணவன்

'மூஷி ஹறம்'

கணவன் என்னும் சொல்லைக் கண் அவன் எனப் பிரிக்கலாம். அதாவது மனைவிக்கு அவன் கண்போன்றவன் எனப் பொருள்படுகிறது.

ஒரு மனிதனுக்குக் கண் எத்துணை இன்றியமையாத உறுப்பு என்பது சொல்லித் தெரியவேண்டுவதில்லை

கண்பார்வையற்ற ஒருவன் உலகில் ஒரு பாதியை இழந்து விடுகிறான்.

எனவே கணவனை இழந்த ஒரு பெண்-கல்யாணமாகாத ஒரு கன்னி தன் வாழ்க்கையில் ஒரு பாதியை இழந்தவளாகிவிடுகிறாள்.

மனைவி என்னும் சொல்லை "மனைவிளக்கு" என்னும் சொல்லின் குறுகிய வடிவமாகக் கொள்ளலாம். மனையின் - குடும்பத்தின் விளக்கமாக - ஒளியாக அவள் திகழ்கிறாள்.

ஒளியில்லாத உலகம்- இருள் சூழ்ந்த இடம், வஞ்சக நெஞ்சம் படைத்தோரைத் தவிர்த்த வேறு யாருக்கும் இன்பந்தருவதில்லை; பயனும் விளைப்பதில்லை.

ஒருவனுக்குக் கண் இருந்தும், வெளியில் ஒளி இல்லையாயின் அந்தக் கண்ணால் எந்தப் பயனும் இல்லை.

அதே போன்று கண் பார்வையற்ற ஒருவனால் ஒளியின் பெருமையை- சிறப்பை உணர முடிவதில்லை.

கண் இருந்தால் மட்டுமே ஒளிக்குச் சிறப்புண்டு.

ஒளி இருந்தால் மட்டுமே கண்ணால் காணமுடியும்.

எனவே கண்ணும், ஒளியும் இணைபிரியாது ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து நிற்கின்றன.

அதேபோன்று கணவனும் மனைவியும் ஒன்றித்து வாழ்ந்தாலே வாழ்க்கை சிறப்புறும்.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆதாரமாக வாழவேண்டும் என்பதை இவ்விரு சொற்களும் மெய்ப்பிக்கின்றன.

சக்தியின்றிச் சிவமில்லை, சிவமின்றிச் சக்தியில்லை என்னும் தத்துவத்தை உணர்த்தவே, ஆண் பாதி, பெண் பாதி உருவமான அர்த்த நாரீசுவர வடிவத்தில் ஆண்டவனே காட்சியளிக்கிறான்.

அந்த அரிய தத்துவத்தை உணர்த்தும் வகையிலேயே கணவன்-மனைவி என்னும் சொற்கள் உருவாயினவோ என்றுகூட நினைக்கத் தோன்றவில்லையா? ●

# கிறிஸ்மஸ் தீவு அழைக்கிறது



அது ஒரு தீவு! பினாங்கை விடச் சிறியது. அங்கே 3,000 தொழிலாளர்களுக்கும் அதிகமானவர்கள் இன்று வேலை பார்க்கிறார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் மலேசியாவிலிருந்து வந்தவர்கள்!

மாதத்திற்கு 200 ஆஸ்திரேலிய டாலருக்கு மேல் சம்பாதிக்கிறார்கள். அதாவது சுமார் 540 மலேசிய ரிங்கிட்! வருமானவரி கிடையாது. தொழிலாளர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி செய்துகொடுத்துள்ளார்கள். மின்சாரம் - தண்ணீர் இலவசமாக உபயோகித்துக் கொள்ளலாம். பஸ் கட்டணம் கிடையாது. தொழிலாளர்களின் பொழுதுபோக்கிற்காக வாரத்திற்கு நான்கு திரைப் படங்களை ஆங்கிலம், இந்தி, மலாய், சீனம் - ஆகிய மொழிப் படங்களை - திறந்த வெளி (Open Air Cinema) அரங்கில் இலவசமாகத் திரையிடுகிறார்கள். கார் ஓட்டுவதற்கு லைசன்ஸ் இருந்தால் மட்டும் போதும். சாலை வரி (ரோட் டெக்ஸ்) தேவையில்லை!

அடேயப்பா! இத்தனை வசதிகளும் நிறைந்த அது ஒரு தீவா அல்லது சொர்க்க பூமியா! நம்முடைய வியப்பு அடங்குவதற்குள், "அதுதான் கிறிஸ்மஸ் ஹைலண்ட்" என்று மோகனப் புன்னகையுடன் பதில் கூறுகிறார் இளைஞர் ஆர். மோகனராஜு. இவர் கம்பாரைச் சேர்ந்தவர். கிறிஸ்மஸ் தீவிற்கு வேலைக்குப் போய் மேற்கண்ட பலன்களை அனுபவித்துவிட்டு அண்மையில் விடுமுறையில் வீடு திரும்பிவந்துள்ளார். இவரது தகப்பனார் திரு. ராமராஜு (ராமையா) கம்பாரில் மிகவும் பிரபலமானவர்.

கேப்டன் வில்லியம் மைனோர்ஸ் (William Mynors) என்பவர் கப்பலில் வரும்போது 1643-ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று முதன் முதலில் இத் தீவினைக் கண்டதால் இதற்குக் கிறிஸ்மஸ் ஹைலண்ட்ஸ் என்று பெயரிட்டார்.

இந்து மகா சமுத்திரத்தில் இருக்கும் இந்த கிறிஸ்மஸ் ஹைலண்ட் ஜாவாவிலிருந்து சுமார் 190 மைலுக்கு அப்பால் இருக்கிறது. ஆஸ்திரேலியாவின் நேரடி நிர்வாகக் கண்காணிப்பில் இருந்துவரும் இந்தத் தீவு ஆரம்பகாலத்தில் மோனி (Moni) என்று டச்சுக்காரர்களால் அழைக்கப்பட்டு வந்தது. உரம் தயாரிப்பதற்கு மூலப்பொருளாகத் தேவைப்படும் பாஸ்பேட் (Phosphate) இத்தீவில் பெருமளவில் கிடைக்கிறது. ஆண்டுதோறும் 1.25 மில்லியன் டன் பாஸ்பேட் இங்குக் கிடைப்பதாக அண்மையில் ஓர் ஆங்கில நாளிதழில் செய்திவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய நிர்வாகத்திலுள்ள இந்தத் தீவில் இந்திய உணவு வகைகள் கிடைக்குமா? நம் சந்தேகத்திற்கு விளக்கம் தந்தார் மோகன்.

அங்கு மாலை வேளையில் திரு ராஜ் என்பவர் பகுதிநேரமாக இந்திய சாப்பாட்டுக்கடை ஒன்றை நடத்துகிறார். அதில் சுவையான ஆட்டுக்கறி, கோழிக் கறி சப்பாத்தி போன்றவை மட்டும் கிடைக்கும்" என்றார் மோகன்.

"அங்கே என்னென்ன வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன? நம் இளைஞர்கள் அங்கு வேலைக்குப் போவதென்றால் என்ன செய்ய வேண்டும்?" - மோகனிடம் ஆர்வத்தோடு வினவினோம். அதற்கு அவருடைய அனுபவத்தை இப்படி விவரித்தார்.

"கிறிஸ்மஸ் ஹைலண்ட்ஸில் மெக்கானிக், எலக்டிரீஷன் லாரி டிரைவர்கள், நர்ஸ்கள், ரோடுபோடும் தொழிலாளர்கள், சிமிண்ட் வேலை தெரிந்தவர்கள், புல்வெட்டு, துறைமுகத் தொழிலாளிகள் என்று இப்படிப் பல



கிறிஸ்மஸ் தீவிலுள்ள விமானத் திடலில் சிறுவர் சிறுமியர்.

தரப்பட்டவர்களும் தேவைப் படுகிறார்கள். அனுபவமில்லாதவர்கள்கூட தேவைப்படுகிறார்கள். பினாங்கிலும் கோலாலம்பூரில Guthrie Boustead Ship-ping Agencies என்னும் நிறுவனத்தினர், ஆங்கிலப்பத்திரிகைகளில் வேலை காலி இருக்கும் போது விளம்பரம் செய்வார்கள். "அதுவரை காத்திருப்பதை விட நமது இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த வேலை குறித்தும், அனுபவம், வயது, போன்ற முழு விவரங்களையும் ஆங்கிலத்தில் எழுதி அவர்களு-க்கு விண்ணப்பம் ஒன்றினை அனுப்பிவைத்துவிட்டால் இன்னும் நன்மையாக இருக்கும். முயற்சி இருந்தால் வெற்றி கிடைக்காமலா போய்விடும்?"— என்று எதிர்வினா தொடுத்தார் மோகன்.

எந்த முகவரிக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று கேட்டோம்.

அறையினுள் சென்று தாம் முதன்முதலில் வேலைக்கு விண்ணப்பித்த கடிதங்களைக் கொண்டுவந்து காண்பித்தார். அதில் பினாங்கு முகவரியையும், தலைநகர் முகவரியையும் குறித்துக்கொண்டேன்.

1. Guthrie Boustead Shipping Agencies (Pte) Ltd, No. 1, Weld Quay, P. O. Box 1163, Penang.

2. Room 1404, 14th Floor, Fitspatrick's Building, 86, Jln. Chulan, P. O. Box 2287, K. Lumpur.

வேலை காலியில்லை—வேலை இல்லை என்ற வார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போயிருக்கும் நம் இளைஞர்கள் மேற்கண்ட முகவரிகளுக்கு புதுநம்பிக்கையோடு ஆங்கிலத்தில் கடிதம் எழுதிப்பாருங்கள். அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது!

பேட்டி: நாஎ்பமன்'

# கலையுலக வினா விடை

பரிதாமணாளன்

ஊதாப்பூ ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், பத்தாங்காலி

கே: "நாம் பிறந்த மண்" சிவாஜிக்கு வெற்றிப் படமா?
ப: எதிர்பார்த்த வெற்றியை இப்படம் தரவில்லை.

பெ. இராஜகுமாரன், கெரிலா தோட்டம், கிளந்தான்

கே: ஜெமினி கணேசன் "இதய மலர்" படத்தைத் தொடர்ந்து வேறு எந்தப் படத்தையாவது டைரக்ட் செய்கிறாரா?
ப: இப்போதைக்கு எந்தப் படத்தையும் அவர் டைரக்ட் செய்யவில்லை. நல்ல நடிகர் டைரக்ட் செய்ய ஏன் ஒத்துக் கொண்டார் என்று ஒரு நடிகை கூறியதை மனத்தில் கொண்டாரோ என்னவோ!

செல்வராஜுகுமரன், புக்கிட்ராஜா பாம் ஆயில்மில், கிள்ளான்

கே: காலஞ்சென்ற டி. எஸ். பாலையாவின் மகன் சாயிபாபா தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?
ப: பாடிக்கொண்டிருக்கிறார். பலவித ஒலிகளை எழுப்புவதில் -அதாவது பறவை, மிருகம் போன்ற ஒலிகளை எழுப்புவதிலும் சமர்த்தராக இருக்கிறார்.

கே: இப்பொழுது திரைப் படங்களில் அதிகமாகப் பின்னணி கொடுத்து வரும் பாடகி யார்?
ப: வாணிஜெயராம் தான் இப்போது நிறையப் பாடிக் கொண்டிருக்கிறார்.

கே: திருமதி மஞ்சுளா என்ன ஆனார்? திரையுலகிலிருந்து விலகி விட்டாரா?
ப: தைப்பூசத்திற்குக் கணவருடன் மலேசியாவுக்கு வந்துவிட்டுப் போனாரே பார்க்கவில்லையா? அவர் மலேசியா வந்ததே படத்தில் நடிப்பதற்காகத் தானே! தெலுங்குப் படங்களில் "மிகக் கவர்ச்சி"யாக நடிக்கிறாராம். முன்பு ஜோதிலட்சுமிக்கு இருந்த தெலுங்கு ரசிகர்கள் இப்போது மஞ்சுளா ரசிகர்களாகிவிட்டார்களாம்!

ஆர். ராஜேந்திரன், பாகான் சிராய்

கே: தற்போது தமிழகத்தில் நல்ல வரவேற்போடு ஓடும் படங்கள் யாவை?
ப: "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்", "அண்ணன் ஒரு கோயில்", "16 வயதினிலே", "ஆட்டுக்கார அலமேலு" முதலியவை நல்ல வரவேற்போடு ஓடுகின்றன. சின்னப்பாதேவர் "ஆட்டுக்கார அலமேலு"வை இந்தியிலும் தயாரிக்கவிருக்கிறார்.

என். சுலோசனா, சிரம்பான்

கே: சிவாஜி கணேசன் இந்திப் படத்தில் நடிக்க ஆரம்பித்துவிட்டதால் தமிழ்ப் படங்களைக் குறைத்துக் கொள்வாரா?
ப: சிவாஜிக்கு அப்படி ஓர் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒரு மாற்றத்திற்காக இந்திப் படத்தில் நடிப்பதாகக் கூறியிருக்கிறார். மேலும் அவர் இது போன்று தெலுங்குப் படத்திலும் நடித்திருக்கிறார்.

என். தயாளன் பாலா, தவாவ், சபா

கே: எம். ஜி. ஆரும் சாண்டோ சின்னப்பா தேவரும் கம்புச் சண்டை போட்டால் யார் வெற்றிபெறுவார்?
ப: படத்திற்காகச் சண்டை போட்டால் எம். ஜி. ஆர். தான் வெற்றி பெறுவார்.

மழை பெய்தால் சுழித்துக் கரை புரண்டு ஓடும் கலங்கல் ஆறு; அடிக் கிளை முறிந்துபோன மாமரம்; இராட்சத ஆமையோட்டைப்போல் மண்ணில் அழுந்திக் கிடக்கும் வழுக்குப் பாறை. புதராக அடர்ந்திருக்கும் நுணச் செடிகள்- எல்லாம் அப்படியே இருக்கின்றன: ஏழு ஆண்டுகளில் எதுவும் மாறியதாகத் தெரியவில்லை

இந்தத் தோட்டத்தில் ஆசிரியராகப் பணியாற்றியபோது இதே ஆற்றங்கரையில், இதே மாமரத்தின் அடியில், இதே பாறையில் சாய்ந்து படுத்தபடி எத்தனை மாலைப்பொழுதுகளைப் கழித்திருக்கிறேன்! மாலைக்காற்றை இழுத்து நெஞ்சை நிரப்பிக்கொண்டு, சலசலத்து ஓடும் ஆற்றுநீரின் ஒலியைக் கேட்டபடி, நீல வானத்தில் வெள்ளைக்கோடுகளாகப் பறந்து செல்லும் கொக்குகளைப் பார்த்தவாறு சுகமாகக் கழித்த அந்த இனிய மாலைப் பொழுதுகள்!

திடீரென்று எனக்கு மாற்றல் உத்தரவு வந்தது- தனியாளான நான் என் உடைமைகளை ஒரு பெட்டியில் திணித்துக்கொண்டு எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டது - கோலாலம்பூரில் வேலையை ஒப்புக்கொண்டது- திருமணம் நடந்தது-நான்கு குழந்தைகளுக்குத்தந்தையானது-காலம்தான் எவ்வளவு விரைந்து ஓடுகிறது! என்னைச் சுற்றியுள்ள உலகம் இப்படி அவசர அவசரமாகப் பெரிதாகிப் போனதால் இந்தத் தோட்டத்தை ஏறத்தாழ மறந்தே போய்விட்டேன்.

ஆனால் இன்று காலையில் பழைய நினைவுகள் எல்லாம் திறந்து கொண்ட ஊற்றுக்கண்களாகக் கொப்புளித்துப் பொங்கத் துவங்கின. என் சக ஆசிரியர் பெரியசாமியின் மகளுக்கு இன்று நிச்சயதார்த்தம். நானும் உடனிருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தி அழைத்திருந்ததால் குடும்பத்தோடு அவர் வீட்டுக்குச் சென்றிருந்த நான் காரிலிருந்து இறங்கிவந்த பையனின் தந்தையைப் பார்த்ததும் திகைத்துப் போனேன்.

அவர் இந்தத் தோட்டத்துத் தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியர்-என் முன்னாள் தலைமையாசிரியர். அவருக்கும் என்னைப் பார்த்ததில் பெருத்த மகிழ்ச்சி- இனிய உரையாடல்களுக்கு இடையில் நிச்சயதார்த்தம் முடிந்தது.

அவரோடு புறப்பட்டு, தோட்டத்தில்-அவர் வீட்டில் ஒரு நாளாவது நான் தங்கிவிட்டு வரவேண்டும் என்று மீண்டும் மீண்டும் அழைத்தார். பழைய இடத்தையும் அங்கு ஒரு காலத்தில் என்னோடு பழகியவர்களையும் மறுபடியும் காண எனக்கு ஆசை கிளர்ந்தது. மனைவியிடம் சொல்லிவிட்டு அவருடனேயே கிளம்பிவிட்டேன்.

தாள முடியாதபடி உபசாரம்; தலைமையாசிரியரின் அன்பு; அவர் மனைவியின் பிரியம்; அண்டை அயலாரின் சந்திப்பு. இரவு உணவுக்குப் பின் காலாற நடந்து இந்த ஆற்றங்கரைக்கு வந்தேன். இந்தத் தோட்டத்தில் நான் இருக்கும் போது எனக்கு உற்சாகமளித்த முக்கியமானவற்றுள் ஒன்று பள்ளி, மற்றொன்று இந்த ஆற்றங்கரை.

“வணக்கம் சார்!”

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறேன். ஓர் இளம்பெண் என்னைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கிறாள். மிகவும் பழக்கமான ஒருவரைப் பார்த்துவிட்ட சுமுகபாவம் அவள் முகத்தில் நிலவுகிறது. ஆனால் அவள் யாரென்று எனக்குத் தெரியவில்லை.

"என்னைத் தெரியலீங்களா சார்?" -என் குழப்பத்தைப் புரிந்து கொண்டாற்போல் அவள் கேட்கிறாள்.

"பார்த்த மாதிரி இருக்குது; ஆனா யாருன்னு சரியா ஞாபகம் இல்லே!"-என் மறதியைக் கடிந்து கொள்ளும் குரலில் மெதுவாகச் சொல்கிறேன்.

"உங்ககிட்ட அஞ்சாம் வகுப்பு படிச்சிருக்கேன் சார்! ராமய்யா டிரைவர் மக சரஸ்வதி சார்!"

என் நினைவில் ஒரு பொறி தட்டுகிறது; எல்லாமே நினைவுக்கு வருகின்றன.

"சரஸ்வதியா! கொஞ்சங்கூட அடையாளம் கண்டுக்க முடியாதபடி கிடுகிடுன்னு வளந்துட்டியே! இப்படி உட்காரும்மா!"- நான் அவளை மறந்துவிடவில்லை என்பது அவளுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்பதை அவள் முகம் காட்டுகிறது; வழுக்குப் பாறையில் உட்காருகிறாள்.

இந்த சரசுவதியை மறக்க முடியுமா? குளித்துத் தூய்மையான சீருடையில் பள்ளிக்கு வருவாள்; எப்போதும் மலர்ந்திருக்கும் முகம்; நெற்றியில் சின்னஞ்சிறு கரும் பொட்டு; இரண்டாகப் பிரித்துப் பின்னப்பட்ட கூந்தலில் இடக் காதுக்கு மேலே அரையங்குல தூரத்தில் ஏதாவதொரு பூ; குச்சி குச்சியான கைகால்கள் 'துறுதுறு' வென்று அலைய சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பாள்; கலகல வென்று சிரிப்பாள்; ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பாள்; படிப்பில் அப்படியொன்றும் மிகக் கெட்டிக்காரியல்ல; ஆனால் அவளின் தூய்மையும், ஒழுங்கும், சுறுசுறுப்பும் வகுப்பில் அவளுக்குத் தனியோர் இடத்தைக் கொடுத்திருந்தன.

"நல்லா இருக்கீங்களா சார்?"


"நல்லா இருக்கேம்மா! நீ சுகமா இருக்கிறியா சரசு?"

"இருக்கேன் சார்!"

"வீட்டில எல்லாரும் நல்லா இருக்காங்களாம்மா?"

"இருக்காங்க சார்!"

என்னைப்பற்றி நெடுநேரம் எவ்வளவோ விசாரிக்கிறாள்; சொல்கிறேன். ஆனால் அவளைப்பற்றி நான் கேட்கும் கேள்விகளுக்கு உற்சாகமில்லாமல் பதில் தருகிறாள். அவள் முகம் களையிழந்து தோன்றுகிறது. அந்தக் காலத்தில் அவளுடைய கண்கள் கூட சிரிக்கும்; பேசும். இப்போது......! ஏதோ மிகப்பெரிய பாரம் அவளை அழுத்




கிக்கொண்டிருப்பதை உணர்கிறேன்.

"சரசு, ஒருமாதிரி இருக்கிறியே! என்னம்மா கவலை உனக்கு? என் கிட்ட சொல்லலாம்னு சொல்லு!"

நெற்றியில் சரிந்துவிழும் கூந்தல் கற்றையை ஒற்றை விரலால் ஒதுக்கியபடி என்னைப் பார்க்கிருள். கண்களின் கோடியில் நீர் விளிம்பு கட்டுகிறது. "உங்ககிட்ட சொல்லணும்னுதான் சார் நெனக்கிறேன்."

பொன்னிறத்தில் பூத்துக் குலுங்கும் கொன்றை மலர்ச்சரமாக வலம்வந்த சரஸ்வதி, பெரும்பாலான இளைஞர்களுக்கு ஒரு கனவாகவே இருந்துவந்தாள். இடைநிலைப்பள்ளியில் படித்த காலத்திலும் சரி, மூன்றும் படிவத்தேர்வில் தோற்று வீட்டோடு இருந்த காலத்திலும் சரி, அவளிடம் ஒரு சுய கட்டுப்பாடு இருந்துவந்தது; யாராலும் அவளை அணுகமுடியவில்லை.

எவ்வளவோ உறுதியாக இருந்த அவள், நாளாவட்டத்தில் ஒருவனிடம் மனத்தைப் பறிகொடுத்துவிட்டாள். ஆற்றங்கரை வழுக்குப்பாறை அவர்கள் தனியாகச் சந்திக்க இடம் கொடுத்தது. இருவரும் நெருங்கிப் பழகினார்கள். அந்த நெருக்கம், நெருங்கக்கூடாத எல்லையைத் தாண்டும் அளவுக்கு அவர்களை ஆக்கிவிட்டது. உச்சாணிக் கொம்பில் மலர்ந்திருந்த கொன்றைச்சரத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்த வண்டு, மலர் இடம் கொடுத்ததும் அதில் உட்கார்ந்து விட்டது.



யாருக்கும் தெரியாமல் அவர்கள் காப்பாற்றிவந்த அந்த விவகாரம் மிகவும் இசைகேடான முறையில் சரசுவதியின் தந்தைக்குத் தெரிந்துபோய்விட்டது. ஓரிரவு எதேச்சையாக ஆற்றங்கரைப்பக்கம் வந்தவர், யாரோ ஒருவன் விருட்டென்று நுணுப்புதரில் ஓடி மறைவதைக் கண்டுவிட்டார். நெருங்கி வந்தவர், அலங்க மலங்க விழித்தபடி, அவசரஅவசரமாக உடுத்திக்கொண்டு, அலங்கோலமாக நிற்கும் மகளைப் பார்த்தவுடன் எல்லாவற்றையும் விளங்கிக்கொண்டார்; அவளைத் தரதர'வென்று வீட்டுக்கு இழுத்துவந்தார்.

இராமய்யா சாதுதான்; ஆனால் திருமணத்துக்கு முன்பே தன்னை ஒருவனிடம் இழக்கும் அளவுக்கு மகள் துணிந்துவிட்டாள் என்ற விஷயம் அவரைத் திடீரென்று உசுப்பிவிட்டது; ருத்திரமூர்த்தியாகி வானத்துக்கும் பூமிக்குமாகக் கூத்தாடினார். இடைவாரைக் கழற்றிக் கொண்டு அவளைக் கண்மண் தெரியாமல் அடித்தார். முன்னம் பற்கள் ஆட, உதடுகள் கிழிந்து தொங்க, கைகால்கள் பட்டை பட்டையாக வீங்கிக்கொள்ள, உடல் முழுதும் இரத்தம் கசிய அவள் கதறிய கதறல் அவரின் காதோடு நின்றுவிட்டது; உள்ளத்தில் சென்று தைக்கவில்லை. 'மூசு மூசு' என்று மூச்சுவாங்கியபடி கை ஓயுமட்டும் அடித்துத் துவைத்துவிட்டு, வெளியே தலைகாட்ட வெட்கப்பட்டு, போர்வையைப் போர்த்திக்கொண்டு சமையலறையில் முடங்கிப் படுத்துவிட்டார்.

உயிரே நைந்துபோகும் அளவுக்கு அடி வாங்கியும் அவன் யாரென்று அவள் சொல்லவில்லை. அவனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி, முறைப்படி பெண் கேட்டுத் தன்னை மணந்து கொள்ளும்படி கேட்கவேண்டுமென்று அவள் துடித்தாள். ஆனால் வீட்டைவிட்டு வெளியில் செல்லுவது முடியாத காரியமாகிவிட்டது. பிய்ந்து, கந்தல் கந்தலாகிப்போன உடம்பைச் சுமந்து நடக்க, இரத்தம் கசியக் காயம்பட்டு வீங்கிப்போன கால்களால் முடியவில்லை. மேலும், பெற்றவர்களுக்குத் தெரியாமல் போவதும் எளிதான செயலாக இல்லை.

எல்லாவற்றையும் ஒரு கடிதத்தில் எழுதி, மறுநாள் பெற்றவர்கள் சற்று அயர்ந்த நேரம் பார்த்து ஒரு பையனிடம் கொடுத்துவிட்டு நம்பிக்கையோடு காத்திருந்தாள்; பதில் வரவில்லை. மறுநாளும் வந்தது; பதில் வரவில்லை. ஆனால் அவன் தோட்டத்தைவிட்டு எங்கோ தொலைதூரத்துக்குச் சென்றுவிட்டதாகச் செய்தி வந்தது.

தந்தையிடம் அடிபட்டு, மிதிபட்டுத் துவண்டபோதும் உடையாத சரசுவதி உடைந்துபோனாள்; சுக்கல் சுக்கலாக நொறுங்கிப் போனாள். அவள் 'கெட்டுப் போன கதை' தோட்டம் முழுவதும் மிகவும் கேவலமாகப் பரவிவிட்டது. அதிலிருந்து மீள வேண்டுமானால் அவள் மணம் புரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் அவளை மீட்க வேண்டிய அவன் ஓடிப் போய்விட்டான்.

சரசுவதி கேவிக் கேவி அழுகிறாள். "இந்த மாதிரி நெலமையில நான் என்னங்க சார் செய்யறது! இபபடிப்பட்ட நெலமையில ஒரு பெண் இருந்தா, அவ என்ன தான் செய்வாள்னு நீங்க நெனக்கிறீங்க சார்!"- அலையலையாகப் பெருகிவரும் துயரத்தை அடக்க முடியாமல் அவள் கேட்கிறாள்.

என்ன பதில் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. இந்தச் சிறு பெண்ணுக்கு இவ்வளவு துன்பமா? இந்தச் சிறுவயதிலேயே இப்படிப்பட்ட துன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்பது இவளின் தலையெழுத்தா? காதல் என்றாலே அது உடலைப் பொறுத்ததுதான் என்று எண்ணிக்கொள்ளும் அறியாமையால்தான் இவ்வளவும் நடந்து விட்டனவா?

> **ரோண்டா கோலமன்!** சிகாகோவைச் சேர்ந்த இவள் ஒன்பது வயதுப் பையனொருவனைக் கடத்திச் சென்று ஐநூறு அமெரிக்க டாலரைப் பிணையாகக் கேட்டான். அந்தப் பணம் எதற்கு? அவளது வீட்டு வாடகையைக் கட்டத்தான்!

"உன் நெலமையில ஒருத்தி இருந்தா, அவ என்ன செய்வாள்னு கேட்டே சரசு! அவ தைரியசாலியா, துணிச்சல்காரியா இருந்தா, வருவது வரட்டும்னு எதுக்கும் பயப்படாம, ரொம்பப் பொறுமையா அப்பா அம்மாவைச் சமாதானம் பண்ணி, அந்தப் பையனோட அப்பா அம்மாவிடமும் விஷயத்தைச் சொல்லி, அவன் எங்கேயிருந்தாலும் தேடிப்பிடிச்சு அவனையே கல்யாணம் பண்ணிக்கிட்டுக் குடும்பம் நடத்துவா! ஆனா அவ ஒரு கோழையா, அவசரக்காரியா இருந்தா 'நம்ம விஷயம் ஊருக்குத் தெரிஞ்சு ரொம்பக் கேவலமாப் போச்சே! கல்யாணம் பண்ணிக்க வேண்டியவனும் ஓடிப்போய்ட்டானே! வேற ஒருத்தனோட வாழறதும் முடியாத காரியமாச்சே!' அப்படின்னுகண்டதையெல்லாம் நெனச்சி, மனசப் போட்டுக் குழப்பிக்கிட்டு, சிக்கலைத் தீர்க்க முடியாம ஆத்தில குளத்தில விழுந்தோ, மருந்து குடிச்சோ செத்துப் போவா!"

சரசுவதி என்னை உற்றுப் பார்க்கிறாள். அவ்வளவு அழுகைக்கிடையிலும் இதழ்க் கோடியில் ஒரு வரண்ட புன்னகை நெளிகிறது. "நீங்க சொல்றது உண்மைதாங்க சார்! நான் அந்த ரெண்டாவது வகையைச்சேர்ந்தவதான்! தைரியமே இல்லாத ஒரு கோழைங்க சார் நான்!"— அமைதியாகச் சொல்லிவிட்டு, முகத்தைப் புதைத்துக் கொண்டு குமுறிக் குமுறி அழுகிறாள். சன்னமாக ஒலிக்கும் குரலும் அதில் கலந்திருக்கும் துன்பமும் நெஞ்சைப் பிழிகின்றன.

மனப்பளுவை இறக்கி வைப்பவள்போல் அழுதவள், தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்கிறாள். "ரொம்ப நாளக்கி அப்புறம் தோட்டத்துக்கு வந்திருக்கீங்க! உங்களுக்கு ஏதாச்சும் வேலை இருக்கும். என் கதையைச் சொல்லி உங்கள கஷ்டப்படுத்திட்டேன் சார்! உங்க நேரத்தையும் கெடுத்திட்டேன்!"

"அப்படி முக்கிய வேலைன்னு ஒண்ணும் இல்லம்மா! நம்ம ஹெட் மாஸ்டர் கோலாலம்பூருக்கு வந்திருந்தாரு. அவர் மகனுக்கு இன்னிக்கு நிச்சயதார்த்தம். அது முடிஞ்சதும் அவரோட..."

நான் சொல்லி முடிப்பதற்குள் 'விருட்'டென்று எழுந்து நிற்கிறாள். அவள் முகபாவம் திடீரென்று மாறுகிறது. புருவங்கள் நெரிய, கண்கள் சிவக்க, உதடுகள் இறுக...

திடீரென்று என் உடல் சில்லிட்டுப் போகிறது; கைகால்கள் விரைத்துப் போகின்றன; நரம்புகள் புடைத்துக் கொள்கின்றன; இருதயம் வெகுவேகமாக அடித்துக் கொள்கிறது. மங்கிப் போன கண்களை மூடித்திறந்து பார்க்கிறேன். ஆறு சலசலவென்று ஓடிக்கொண்டிருக்கிறது. மாமரத்தில் இலைகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

மனம் அமைதியாக இல்லை; தலைமையாசிரியரிடமும், அவர் மனைவியிடமும் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசிவிட்டு, தலை வலிக்கிறதென்று சொல்லி படுத்துக் கொள்கிறேன். நெடுநேரம் உறக்கம் வரவில்லை; புரண்டு புரண்டு படுக்கிறேன்.

திடீரென்று ஓர் அலறல்; திடுக்கிட்டு எழுந்து கொள்கிறேன். இரத்தத்தை உறைந்து போகச் செய்யும் அளவுக்கு மீண்டும் ஓர் அலறல்! அறையைவிட்டு வெளியே ஓடிவருகிறேன். தலைமையாசிரியரும் அவர் மனைவியும் ஓட்டமாக ஓடி வருகிறார்கள்.

அவர்களின் மகன் படுத்திருந்த அறைக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே ஓடுகிறோம். படுக்கையில் அவன் இறந்துகிடக்கிறான்; கண்கள் பிதுங்க, நாக்கு வெளியே தொங்க, மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் வழிய, கைகளைக் கோணல் மாணலாகப் பரப்பிக் கொண்டு செத்துக் கிடக்கிறான்.




கோயில் ஒரு புனிதமான இடம். அங்கே கடவுள் இருக்கின்றார். கோயிலை ஆலயம், மன்று, தளி, கோட்டம் என்றும் அழைப்பர். நாம் இறைவனைப் பார்க்க முடியாது; ஆனால் இறைவன் நினைவால் செய்யப்பட்ட சிற்பங்களை அங்கே காணலாம். கோயில் என்பது இறைவன் வசிக்குமிடம் எனப் பொருள்படும். கோ என்றால் இறைவன் என்றும் இல் என்றால் இல்லம் என்றும் பொருள்படும்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஒரு பழமொழி. கோயிலில்லாத ஊரில் இறை நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் இருக்காது. அங்குள்ளவர்களுக்கு இறைவன்மீது நம்பிக்கை இல்லாததலால் யாருக்கும் பயப்பட மாட்டார்கள். தீய செயல்களைச் செய்யவும் அஞ்சமாட்டார்கள்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" தினந்தோறும் ஆலயம் செல்லாவிட்டாலும், வீட்டிலாவது தெய்வத்தை வழிபடவேண்டும். ஆனால் வாரத்திற்கு ஒரு முறையாவது ஆலயம் சென்று தெய்வத்தை வழிபடவேண்டும் நமது ருக்குன் நெகாரா கோட்பாடுகளில் முதன்மை வகிப்பதே "இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்" என்பதுதான்.

எஸ். மேகநாதன்,
சபாக் பெர்ணம்

## யுக்தி

ஒரு நாட்டு மன்னர் நேர்மையான ஒருவரைத் தம் அமைச்சராகத் தேர்ந்தெடுக்க வேண்டி பலநாட்டு அமைச்சர்களுக்கும் ஓலை மூலமாகச் செய்தி அனுப்பினர்.

குறிப்பிட்ட நாளில் எல்லா அமைச்சர்களையும் பொதுமண்டபத்திற்கு அழைத்திருந்தார் மன்னர். அமைச்சர்கள் பொது மண்டபத்திற்குள் வர அவர்களுக்கென்று பிரத்தியேக வழியொன்றையும் அமைத்தார். சமயோசிதமுள்ள அந்த மன்னர் அமைச்சர்கள் வரும் வழியில் நிறையத் தங்கக் காசுகளைப் போட்டுவைத்தார்.

வந்திருப்பவர்களுள் சிறந்த அமைச்சரைத்தேர்ந்தெடுக்கத்தாம் ஒரு போட்டி வைக்கப்போவதாக மன்னர் அறிவித்தார். அந்தப் போட்டியில் வெற்றிபெற வந்திருந்தவர்கள் மேடையில் ஏறிக் குதித்து ஆடவேண்டுமெனக் கட்டளையிட்டார் மன்னர்.

ஆனால் யாருமே முன்வந்து மேடையில் ஆடவில்லை. அனைவரும் வரும் வழியிலிருந்த தங்கக் காசுகளை எடுத்துச் சட்டைப் பைகளில் நிறைத்திருந்தனரே, பிறகெப்படி ஆடமுடியும்? ஆடினால் தங்கக் காசுகள் கீழே விழுந்தோ, சத்தம் கொடுத்தோ அவர்களைக் குற்றவாளிகளாக்கி விடுமே!

இருப்பினும் ஒரே ஒருவர் மட்டும் மேடையில் ஏறி மன்னர் சொன்னபடி ஆடினார்; அவர் ஒருவர்தான் தங்கக் காசுகளை எடுக்காதவர். மன்னர் அவரையே அமைச்சராகத் தேர்ந்தெடுத்தார்.

போட்டிக்கு வந்தவர்களெல்லாம் தொங்கிய முகத்தோடு நாடு திரும்பினர். புதிய அமைச்சர் நேர்மையாகவும், திறமையாகவும் தம் பணியைச் செய்து வரலானார்.

-கு. லோகநாதன், பெட்டாலிங் ஜெயா

## விடுகவிகள்

1. கழுத்தை அறுத்தால் கண் தெரியும்
2. பகலிலே தூங்கி இரவிலே விழிப்பான்.
3. மூடாத வாய்க்கு முழுநீள வால்
4. பட்டுப்பை நிறையப் பவுன் காசு

விடைகள்:

1. நுங்கு 2. நட்சத்திரம்
3. அகப்பை 4. மிளகாய்


-குமாரி ஆர். சத்தியவாணி
மாடோஸ் தோட்டம், ஜொகூர்

அழகு தமிழைக் கற்று—தம்பி
அறிந்து நடக்கப் பாரு
உலகம் போற்றும் தமிழை—தம்பி
உயர்வாய்ப் படித்துத் தேறு!

இனிக்கும் தமிழைக் கேளு—தம்பி
இன்பத் தமிழைப் பேணு!
இனிக்கும் தமிழைச் சுவைத்து—தம்பி
இன்றே வாழ்வை உயர்த்து!

அருமை மிக்க தமிழாம்—தம்பி
அகிலம் புகழும் தமிழாம்!
பெருமை சேர்க்கும் தமிழை—தம்பி
பேணிக் காக்க வேண்டும்!





# திடீர் திருமணம்...?

-சுமித்ரா-

புகழேணியின் உச்சிக்கு மிக வேகமாக ஏறிக்கொண்டிருக்கும் சிறந்த குணச்சித்திர நடிகையான சுமித்ராவுக்கு மேலும் மேலும் தன் நடிப்புத் திறமையைக் காட்டப் பல படங்கள் குவிந்துகொண்டிருக்கின்றன! அவர் விரைவில் காதல் திருமணம் செய்துகொள்ளப் போகின்றார் என்று செய்திகள் அடிபட்டன! அதைப்பற்றி அவரைக் கேட்டபோது, "ஆம்! காதல் திருமணம்தான் செய்துகொள்ளப் போகிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றார்! மேலும், புதிய சமுதாயம் இதழுக்கென அவர் அளித்துள்ள சுவையான பதில்களைப் படித்து ரசியுங்கள்!

கே: உங்கள் திருமணம் காதல் திருமணமாக இருக்குமா அல்லது பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் திருமணமாக இருக்குமா?

ப: என்னுடைய திருமணம் நிச்சயமாகக் காதல் திருமணமாகத்தான் இருக்கும்! என் பெற்றோர்களைச் சம்மதிக்கவைத்து, என் வீட்டிலுள்ளவர்களின் மனத்திருப்தியோடுதான் என் திருமணம் நடக்கும்! கலாட்டா கல்யாணமாக இல்லாமல் எல்லாம் முறைப்படி நடக்கும்.

கே: சில நடிகைகள் திடீர்த் திருமணம் செய்துகொள்கிறார்களே!

ப: திடீர்த் திருமணம் நிலைக்குமா என்பதே சந்தேகம்! திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்! எனவே, என்னைப் பொறுத்தமட்டில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துத்தான் திருமணம் செய்துகொள்வேன்.

கே: உங்களுக்கு வரும் கணவர் எப்படியிருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

ப: சில பெண்கள் தங்களுக்கு வரப்போகும் கணவரைப் பற்றி பலவிதமான கனவுகளைக் காண்பார்கள்! அழகு, பணம் ஆகியவை இருக்கவேண்டுமென்றும் நினைப்பார்கள். ஆனால் இதில் எதையும் நான் நினைக்கவில்லை. எனக்கு வரப்போகும் கணவர் ஏழையாக இருந்தாலும், அழகில்லாதவராக இருந்தாலும் பரவாயில்லை! என் மீது அன்பு செலுத்தும் கணவராக இருந்தால் போதும்!

கே: நட்சத்திரக் காதல் திருமணங்கள் தோல்வியடையக் காரணம் என்ன?

ப: நட்சத்திரங்கள் திருமணம் செய்துகொண்ட பின் திரைப்படங்களில் நடிக்க வரக்கூடாது. அப்படி அவர்கள் சினிமாவில் நடித்தால், கணவனை வீட்டில் காக்கவைத்துவிட்டு, படப்பிடிப்பை முடித்துக்கொண்டு இரவு 10 மணிக்குத்தான் வீட்டிற்கு வருவார்கள்! இதனால் கணவனுக்கு கோபம் ஏற்பட்டுத் தகராறுகள் உண்டாகின்றன.

கே: சில நடிகைகள் பெற்றோருக்குத் தெரியாமல் காதல் திருமணம் செய்துகொள்கிறார்களே?

ப: அது மிகவும் தவறானது! அப்படித் திருமணம் செய்துகொண்டால் அவர்களுடைய இல்லற வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருப்பதில்லை. அப்படித் திருமணம் செய்துகொள்வதால் கணவனைத் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போய்விடுகிறது! ரகசியமாகச் செய்யும் திருமணங்கள் ரகசியமாகவே பிரிந்துவிடுகின்றன!

கே: நடிகைகள் திருமணம் செய்துகொண்ட பின்னும் திரைப்படங்களில் நடித்தால் அவர்களின் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்குமா?

ப: ஒருக்காலும் மகிழ்ச்சிகரமாக இருக்காது! நான் பார்த்தவரையில் திருமணம் செய்துகொண்டபிறகு நடிகைகளின் வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதில்லை. ஆனால் பழைய நடிகைகள் லலிதா, பத்மினி திருமணம் செய்த பிறகு சினிமாவில் நடிக்காததால் அவர்களுடைய வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கிறது!

கே: மலையாளப் படங்களில் கவர்ச்சியாக நடிக்கிறீர்களே?

ப: மலையாளப் பட உலகில் நான் கவர்ச்சியாக நடித்தால் அதை ஏற்றுக்கொள்கிறார்கள்! சினிமா உலகில் நுழைவதற்காக சில படங்களில் கவர்ச்சியாக நடித்திருக்கிறேன். மலையாளப் படங்களில் எவ்வளவு கவர்ச்சியாக வேண்டுமானாலும் நடிக்கலாம். ஆனால் இப்பொழுது அது மாதிரி வேடங்களில் நடிப்பதில்லை! ஆனால் தமிழ்ப்படங்களில் கவர்ச்சி வேடங்களில் நடித்தால் கவர்ச்சி முத்திரை குத்திவிடுகிறார்கள்! ஆகவே தமிழ்ப்படங்களில் கவர்ச்சி வேடங்களில் நடிப்பதில்லை!



# பெண்களுக்கு உழைப்பு அதிகம்

—ரோபர்ட் கண்ணன்,
ஆர்வார்ட் தோட்டம்,
பிரிவு 1, (கெடா)

மலேசிய நாட்டு ஆண்களில் குறிப்பாக தோட்டப்புறங்களில் உள்ளவர்களுக்குச் சமத்துவமாகப் பெண்கள் வேலை செய்கிறார்கள் என்றால் மிகையாகாது. தோட்டத்தில் ஆண், ஒரு நாளைக்கு 600 பால் மரங்களை வெட்டுகிறான் என்றால், அதே 600 பால் மரத்தை ஒரு பெண்ணும் வெட்டுகிறாள்.

ஆண் $400 வெள்ளி சம்பளம் எடுத்தால், ஒரு பெண்ணும் 400 வெள்ளி சம்பளம் வாங்குகிறாள். ஒரே மாதிரியான வேலை. இருபாலருக்கும் ஒரே மாதிரியான உழைப்பு. ஒரே மாதிரியான அசதி. ஆனாலும் ஆண்களைவிட பெண்களுக்குத்தான் உழைப்பும் பொறுப்பும் அதிகமாக இருக்கின்றன. ஆண்கள் வேலை முடிந்து வந்து குளித்துவிட்டுச் சாப்பிடுவார்கள். தூங்குவார்கள்; இல்லையென்றால் வெளியே எங்கேயாவது சுற்றப்போவார்கள். குழந்தைகளைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ள மாட்டார்கள். குழந்தைகள் ஏதாவது தவறு செய்துவிட்டால் பளார்... பளார்... என்று கன்னத்தில் ரெண்டு கொடுத்துவிட்டு வெளியே கிளம்பிவிடுவார்கள்.

ஆண்கள் பொறுமையோ, சகிப்புத்தன்மையோ இல்லாதவர்கள். அதனால்தான் ஒரு குழந்தையை வீட்டில் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ளக்கூட அவர்களால் முடிவதில்லை.

தோட்டத்தில் பால்மரம் வெட்டும் பெண்கள் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து வீட்டில் உள்ள அனைவருக்கும் பசியாறச் செய்யவேண்டும்; பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டிய குழந்தைகளுக்குச் சட்டைசிலுவார் போட்டுவிட வேண்டும். தலைவாரிவிடவேண்டும். "ரோல் காலு"க்கும் போக வேண்டும். போய்வந்து 6.30 மணிக்கு வேலைக்குப் போக வேண்டும். மரம்வெட்டுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. பால் எடுத்து ஆளக் கரையில் (ஸ்டோர்) ஊற்றுவார்கள். அதோடு வீட்டிற்கு வந்ததும் வீட்டு வேலைகள் குவிந்துகிடக்கும். அத்தனையும் செய்யவேண்டும்.

இக்காலத்தில் பெண்களுக்குச் சமைக்கக்கூடத் தெரியாமல் இருக்கிறது. இது பெரும் குறை இந்தக் குறைகள் பெரும்பாலும் பட்டணத்தில் உள்ள பெண்களிடம்தான் இருக்கிறது.

தோட்டப்புறங்களில் இந்தக் குறை இல்லை என்றுதான் சொல்லவேண்டும்! அதற்காகப் பட்டணத்தில் உள்ள பெண்கள் அனைவருக்கும் சமைக்கத் தெரியவில்லை என்றும் சொல்லிவிடுவதற்கில்லை. அப்பப்பா எத்தனை பொறுப்புக்களை பெண்களுக்கு இறைவன் கொடுத்திருக்கிறான்?

பெண்களுக்கு இயற்கையாகச் சில கெட்ட குணங்கள் உண்டு! அவை பிறவிக்குணம் அல்ல; பாதியிலிருந்து வந்த குணங்கள். சிலருடன் பழகியதால் ஏற்பட்ட குணங்களாகக்கூட அவற்றைச் சொல்லலாம்.

நல்ல பண்புள்ளவர்களிடம், அடக்கம் உடையவர்களிடம் பழகவேண்டும். அப்போதுதான் அந்த நல்ல பழக்கங்கள் நமக்கும் வரும்.

பெண்கள், அவர்களின் நாவை அடக்கி வைத்தால் போதுமானது! இந்த உலகத்தையே கட்டி ஆளலாம்.

பெண்ணே உலகின் கண்ணே என்பதைப்போல பெண் உலகிற்கே பேரும் புகழும் ஈட்டித்தரக்கூடியவள்.



# முகத்தில் முடி வளர்ந்தால்

நடிகை லெட்சுமி

'முகத்தில் முடி வளருகிறதே' என்ற கவலையும், சதை விழுந்து முகம் விகாரப்படுகிறதே என்ற கவலையும் இன்று பல பெண்களை ஆட்டிப் படைத்துக்கொண்டுள்ள பிரச்சனைகள்.

பெண்களின் முகத்தில் அருவருக்கத்தக்க வகையில் தோன்றும் முடிகளை எப்படி அகற்றுவது?

முகத்தில் முடி வளர்ந்திருக்கும் பெண்கள் 'ஸ்கின் பிளீச்சிங் பவுடரை' (*SKIN BLEECHING POWDER*) உபயோகிக்கலாம். இதைத் தயாரிக்க அவசியமான கீழ்க்கண்ட பொருட்களை அழகு சாதனக் கடைகளில் பெறலாம்.

1. ஸ்கின் பிளீச்சிங் பவுடர்—
3 தேக்கரண்டி அளவு.
2. லிக்கர் அமோனியா—
2 லிருந்து 3 துளிகள்.
3. ஹைடிரஜன் பொரக்சைட்—பேஸ்ட்.

இவைகள் ஒன்று சேர்ந்த கலவையை முகத்தில் முடிகள் உள்ள இடத்தில் தடவி பிறகு துடைத்து விடலாம். இதனல் கறுத்த முடியின் நிறம் மாறி பொன் நிறமாக ஆகிவிடும். முக அழகும் கெடாது.

ஆனல் இந்த முறை கறுத்த அல்லது மாநிறம் உள்ள பெண்களுக்கு உதவாது. ஏனெனில் கறுத்த நிறம் உள்ள பெண்களின் முகத்தில் உள்ள முடி பொன் நிறமாக மாறினல் பார்ப்பதற்கு பளிச்சென்று தெரியுமே!

ஆகவே கறுத்த நிறமுடைய பெண்கள் முடி நீக்கி மெழுகையோ, முடி நீக்கி கருவியையோ உபயோகிக்கலாம். முடி நீக்கி கருவிகளை கடையில் வாங்கும்போது அதிலேயே அதை எப்படி உபயோகிப்பது என்ற வழிமுறைகள் இருக்கும்.

இந்த இரண்டு முறைகளையும் பின்பற்றுவதன் மூலம் 15 அல்லது 20 நாட்களில் முகத்தில் முடி வளருவதைத் தடுக்கலாம்.

# புன்னகையா? பொன்னகையா?






பேட்டி: மனோ

பெண்களுக்குத் தேவையானது முகத்துக்குப் புன்னகை, கழுத்துக்குப் பொன்னகை என்றால் அது மிகையாகாது. ஆனாலும் இவ்விரண்டில் பாவையர்களுக்கு அழகையும் சிறப்பையும் சேர்ப்பது எது என்று கேட்டால் பதில் சொல்லச் சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும் அல்லவா?

அண்மையில் மூன்று பெண்மணிகளைச் சந்தித்து இதுகுறித்து அவர்களுடைய எண்ணங்களைத் திரட்டினேன். பதில் வருவதற்கு முன்னால் பாவையர்களிடமிருந்து முதலில் புன்னகைதான் வந்தது.

● "என்னைக் கேட்டால் பொன்னகை என்றுதான் சொல்வேன். என்னதான் புன்னகை இருந்தாலும், அதுக்கு இந்தக் காலத்திலே எங்கேங்க மதிப்பு இருக்குது? ஆண்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் பெண் பார்க்க வருகிறார்கள். பெண்ணைப் பார்க்கும்போது முகத்தில் புன்னகையைவிட. கழுத்தில் கனமாகப் பொன்னகை போட்டிருக்கிறாளா என்றுதானே பலர் உற்றுக் கவனிக்கிறார்கள். இதிலிருந்தே தெரியலைங்களா எதுக்குச் சிறப்பு அதிகமாக இருக்குன்னு?" என்று ஒரு போடு போட்டார் (கெடா) கூலிம் - பெலாம் தோட்டத்தைச் சேர்ந்த குமாரி செல்லாய் புஷ்பம்.



● "எத்தனை காரட் விலை மதிப்புள்ளதாக இருந்தாலும் சரி. வெறும் பொன்னகைகள் மட்டும் பெண்களுக்கு அழகு தந்துவிடாது. அதே போலவே வெறும் புன்னகை மட்டும் சிந்திவிட்டாலும் சிறப்பு சேர்த்துவிடாது. அது இரண்டுமே அளவோடு இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பெண்களுக்குத் தனி அழகும் தனிச் சிறப்பும் கிடைக்கும் எனபது என் கருத்து." - இப்படிக் கருத்துரைத்தவர் நம் நாட்டின் சிறந்த பாடகிகளில் ஒருவரான ஈப்போவைச் சேர்ந்த குமாரி ஆர். ரெஜினா.

## பெண் மொழிகள்

கோபமடைந்த பெண் கலங்கிய சுனையைப் போன்றவள். கலங்கிய சுனையில், அழகில்லை; ஒளியில்லை; தெளிவில்லை; கவர்ச்சியில்லை.

—ஷேக்ஸ்பியர்

குணசாலியான ஒரு பெண் தன் கணவனுக்கு மகுடமாக விளங்குகிறாள். ஆனால் காமத்தை உண்டு பண்ணுகிற பெண்ணோ அவனுக்கு எலும்புருக்கி நோயாக இருக்கிறாள்.

—பைபிள்

தொகுப்பு:
குமாரி க. குமுதா தேவி,
கங்கார், பெர்லீஸ்.

● "இன்று விலைவாசிகளெல்லாம் மிகவும் ஏறிவிட்டது. தட்டுமுட்டுச் சாமான்களின் விலைகளே ஏறிப்போயிருக்கும்போது தங்கத்தின் விலை ஏறாமல் இருக்குமா? அதன் விலையும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக ஏறிக்கொண்டே இருக்கிறது. அப்படி இருந்தும் பெண்கள் பொன்னகையை வாங்கி அணியாமலா இருக்கிறார்கள்? புராண காலத்திலிருந்து இன்று வரையில்



எல்லாவிதமான விழாக் காலங்களிலும் மங்கையர்களின் அழகிற்கு அழகு சேர்ப்பதில் மிகவும் துணைபுரிவது பொன்னகையே என்றால் அது மிகையாகாது. பெண்ணின் புனிதச் சின்னமான மாங்கல்யம்கூட இப்போது பெரும் பகுதி தங்கத்தில்தான் காட்சி அளிக்கிறது. இதிலிருந்து பார்க்கும்போது பெண்ணுக்குச் சிறப்புச் சேர்ப்பதில் புன்னகையைவிட பொன்னகையே முன்னணியில் நிற்கிறது என்பது என் கருத்து!" என்று சுவைபட தனது எண்ணத்தைக் கூறினார் குமாரி பி. சுசீலா. இவர் கோலாலம்பூர் ஜாலான் சுங்கை பீசியைச் சேர்ந்தவர்.

## மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

19-3-78 ஆத்மாவின் சக்தி எழுத்து: பெர்விஸ் கே. அஞ்சலை.

## நாடகம்

[சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

18-3-78 சீதனமா தன்மானமா? கம்பார் எஸ். வேலுமதி எழுதியது. (கோலாலம்பூர் நிலையத் தயாரிப்பு)

25-3-78 நிம்மதி எங்கே? தலைநகர் பதவியன் எழுதியது. (பினாங்கு நிலையத்தயாரிப்பு)

## சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

11.3.78 தலைநகர் கிருஷ்ணம்மா எழுதிய என்ன முதலாளி சௌக்கியமா?

18-3-78 லாபீஸ் வி. கிருஷ்ணன் எழுதிய போட்ட திட்டம்

25-3-78 கிள்ளான் எஸ். ராஜ ரெத்தினம் எழுதிய வாங்க மாப்பிள்ளை வாங்க.

## தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு 7-15க்கு ஒலிபரப்பாகிறது)


நீ இல்லா வாழ்வு நிலவில்லா வானம் எழுத்து: கண்மணி கிருஷ்ணன். தயாரிப்பு: எல். ர யன். 13-3-77 பகுதி 4. 20-3-78 பகுதி 5. 27-3-78 பகுதி 6.

## சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

12.3.78 பாசப்பிணைப்பு எழுத்து: வி. சாமி, பெட்டாலிங் ஜெயா.

ஞாயிறு தோறும் காலை 9 மணிக்குக் கலப்படம். 9.30 மணிக்கு இளைஞர் உலகம். 10 மணிக்கு நேயர் விருப்பம் பிற்பகல் 2 மணிக்குப் பூச்சரம். 3 மணிக்கு நாடகம் பிறக்கிறது.



## கண்ணோட்டம்

மலேசியத் தொலைக்காட்சி இசை நிகழ்ச்சிக்காகத் தயாரிப்பாளர்கள் எல்லா இனக் கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகவே காண்கிறோம். இதில் பங்கேற்கும் மற்றக் கலைஞர்கள் தங்கள் தின - மொழிப் பற்றை நமக்கு நன்கு எடுத்துக் காட்டிப் புகழும் பெருமையும் அடைகின்றனர். ஆனால் நம் இந்தியக் கலைஞர்களில் சிலரோ நேர்மாறானவர்களாக இருக்கிறார்கள்.

ஆம். ஒரு தமிழ்ப் பாடகரோ அல்லது பாடகியோ தொலைக்காட்சியில் பாடுகிறார் என்றால் பெரும்பாலும் அது ஒரு தமிழ்ப்பாடலாக இருக்காது. இதனால் பல ரசிகர்கள் வெறுப்புற்று தொலைக்காட்சிப் பெட்டியை அடைத்து விடுகின்றனர். பெரும்பாலும் கடந்த சில வருடங்களாக நம் தமிழ்க் கலைஞர்கள் தொலைக்காட்சியில் இந்திப் பாடல்களையே பாடிவருவது எல்லோரும் அறிந்ததே!

இனிமேலாவது நம் இந்தியக் கலைஞர்கள் தமிழ்ப் பாடல்களை வழங்கி, நம் கலை - கலாச்சாரத்தை நிலைநாட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எம். ஜெயபாலன் (நிர்மல்),
சிரம்பான்.



ஞாயிறு தோறும் இரவு 7.20க்கு கொம்பெட் அமெரிக்கர்களுக்கும் ஜெர்மனியர்களுக்குமிடையே நடந்த போர்க் காட்சிகள் நிறைந்த ஆங்கிலப் படம்.



கொம்பேட் திரையில் விக்மோரோ

- வெள்ளிக்கிழமைதோறும் இரவு மணி 7 15க்கு ஸ்பேஸ் 1999. எதிர்கால விஞ்ஞான அடிப்படையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஆங்கிலப்படம்.
- 11.3.78 சனிக்கிழமை மாலை மணி 4.10 க்கு இந்திப்படம் அமார் பிரேம்.
- 16-3-78 வியாழன் மாலை மணி 5.32க்கு இந்திப்படம் தந்தி நாறும் காடி.
- 18-3-78 சனிக்கிழமை மாலை 4.08 ஜெமினி கணேசன், "கலர்நாயகி" காஞ்சனா, மஞ்சுளா, பாலாஜி, நாகேஷ் முதலானோர் நடித்துள்ள "சாந்தி நிலையம்" தமிழ்ப் படம் ஒளிபேறுகிறது.



காஞ்சனா. ஜெமினி சாந்தி நிலயம் திரையில்

"பூமியிலிருப்பதும் வானத்தில் பறப்பதும் "அவரவர் எண்ணங்களே" என்ற பாடல் வரும்போது இடம்பெறும் விசேஷ பறக்கும் பலூன் காட்சி தமிழ்ப்படங்களிலேயே இதில்தான் முதன் முறையாக இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கவியரசுவின் கருத்துள்ள பல பாடல்களுக்கு எம்.எஸ். விஸ்வநாதன் இனிமையாக இசையமைத்திருக்கிறார்.